# உ.வே.சா. நூல்களில் சொல்லும் சுவையும்

முனைவர் ஆறு. அழகப்பன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# உ.வே.சா. நூல்களில்
# சொல்லும் சுவையும்

முனைவர் ஆறு. அழகப்பன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | U. Vē. Cā. Nūlkaḷil Collum Cuvaiyum |
| Author | : | Dr. Aru. Azhagappan |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai 600 113. |
| Publication No | : | 387 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of publication | : | 2000 |
| Paper used | : | 18.6 kg TNPL Super Printing |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of pages | : | vii + 73 |
| No. of copies | : | 1000 |
| Price | : | Rs. 18/- |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004 |
| Subject | : | A Study of U. Vē. Cā's writings |

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## பதிப்புரை

'பொதிகைமலைப் பிறந்தமொழி வாழ்வறியும், காலமெலாம் புலவோர் வாயில், துதியறிவாய், அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய், இறப்பின்றித் துலங்கு வாயே' என்று மகாகவி பாரதியாரால் போற்றப்பட்ட டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் தமிழுக்கு ஆற்றியப் பணிகள் என்றும் தமிழர்கள் நினைவில் கொள்ளத்தக்கன.

உ.வே.சாமிநாதையர் சங்க இலக்கியங்களையும், காப்பியங்களையும் பதிப்பித்துத் தமிழுக்குப் பெருமை தேடித் தந்தார். தமிழ் மொழியின் தொன்மையையும், செழுமையையும் உலகம் அறியச்செய்தார். ஒரு நிறுவனம் ஆற்ற வேண்டிய பதிப்புப்பணிகளைத் தனி ஒரு மனிதனாக நின்று அரும்பாடுபட்டு நூல்களைப் பதிப்பித்தார். அவர் செய்த பணிகள் வியக்கத்தக்கன.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் பெயரால் நிறுவனத்தில் நிறுவியுள்ள அறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்தியவர் பேராசிரியர் ஆறு. அழகப்பன். 'உ.வே.சா நூல்களில் சொல்லும் சுவையும்' என்ற தலைப்பில் அவர் உரை அமைந்தது. அவர் ஆற்றிய சொற்பொழிவினை நிறுவனம் தற்போது நூலாக வெளியிடுகிறது.

பேராசிரியர் ஆறு. அழகப்பன் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். பதிப்புத்துறையில் சிறந்தவர். நாட்டுப்புறப் பாடல்கள், நாடகங்கள் ஆகியன குறித்து ஆழ்ந்து ஆய்வு செய்தவர். நலிந்து போன நாடகக் கலை மீண்டும் மறுமலர்ச்சி அடைய 'நாடகக் கலை' என்ற இதழை நடத்தியவர். தமிழ் இயக்க உணர்வாளர். எங்கெல்லாம் தமிழுக்குப் பெருமை குறைகிறதோ அங்கெல்லாம் எதிர்த்துப்பேசும் அடலேறு.

இவருடைய அறக்கட்டளைச் சொற்பொழிவினை நூலாக வெளியிடுவதில் நிறுவனம் மகிழ்ச்சி அடைகிறது.

நிறுவனத்தில் உ.வே.சா அறக்கட்டளையினை நிறுவிய திரு. மு.கோ. ராமன் அவர்களுக்கும், இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவினை நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்த முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கும் நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திரு. சு. இராமகிருட்டிணன் இ.ஆ.ப அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்நூலினை நல்லமுறையில் அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்க்கும் எங்கள் நன்றி.

இயக்குநர்

# அணிந்துரை

தமிழ் வளர்த்தவர்களில் பண்டைக்காலத்தில் தொல்காப்பியர். நம் காலத்தில் காத்தவரும் வளர்த்தவரும் உ.வே.சா அவர்கள்.

ஒரு நிறுவனம் செய்ய வேண்டிய பணிகளை, நல்ல மாணாக்கர்களைக் கொண்டு செய்து காட்டியவர் உ.வே.சா.

தமிழைத் தேடி அதன் ஆழத்தைக் கண்டு, வியந்து மற்றவர்களும் அத் தமிழின்பம் அடைய வேண்டும் என்று நினைத்துத் தொகுத்த நூல்களை வகைப்படுத்தித் தமிழ் உலகிற்கும் படைத்தார்.

இப்படைப்பாற்றலைக் கண்டு மலைத்துப் போன வ.சுப. மாணிக்கனார் உ.வே.சாவை 'தமிழ் காத்தார்' என்றே அழைக்கிறார்.

தமிழை இன்று ஒரு செம்மொழி (Classical Language) ஆக்கிட வேண்டும் என்று விரும்புகிறோம். அதற்குரிய இலட்சியங்களைத் தேடித் தந்தவர் தமிழாகரர் - உ.வே.சா. அவர்கள்.

அவர் எழுதிய உரைகள், பாடற்குறிப்புகள், சான்றாதாரங்கள், நிகராகச் செய்ய ஒருவரைத் தேடினும் கிடைப்பாரில்லை.

காந்தி எழுதிய சுயசரிதம், நேரு எழுதிய கடிதச் சரிதம், உ.வே.சா. எழுதிய என் சரிதம் ஆகியன வரலாற்றுப் பேழைகள்.

உ.வே.சாவின் பெருமையை உணர்ந்த பல்கலைக்கழகம், சென்னையம் பதியில் அவரது நல்லுருவத்தைச் சிலையாக வைத்துள்ளது.

அவருடைய மேன்மையை உணர திருவான்மியூரில் நூலகம் இயங்குகிறது.

உலகம் அறிய அவரது பதிப்புகள் 'உலா' வருகின்றன.

'அகல்' விளக்குக் காலத்தில் அவர் செய்த ஆழமான ஆராய்ச்சியைக் குளிர்சாதன அறையில் இருந்து செய்வோரால் செய்ய முடியவில்லை.

புதுக்கவிதைகளைப் படித்துப் பதிப்பிக்கும் ஒருவர் பன்முறை சோர்வடைகிறார். பழம்பாடல் தேடிடக் கூட்டு வண்டியில் ஏறி, தேடிச் சென்று, ஏட்டை வாங்கிப், பாட்டைப் படித்துப், புரியப் பதிப்பித்த அவர் ஒரு தமிழியம்;

தமிழ்ச்சாதி - தம் காலம் முழுதும் மறக்க இயலாத தொண்டு செய்தவர் தமிழ் மாமுனி உ.வே.சா.

இப் பெருமகனாரைப் பற்றி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிகழ்த்திய பொழிவுகள் நூலாக வருகின்றது.

நிறுவனத்தை வளர் பிறையாக ஆக்கி வரும் இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ பாராட்டுக்குரியவர். திருவள்ளுவரின் தூங்காமையையும், துணிவுடைமையும் இரு பக்க சக்கரங்களாகக் கொண்டு, நிறுவனத் தேரைச் செலுத்தும் நல்ல பார்த்தசாரதி அவர்.

அவரது அறிய ஒத்துழைப்பால் வெளிவரும் இந்நூலைப் படிப்போர் - உ.வே.சா.வை மேலும் தேடிச் செல்வர்.

அன்பன்,

**ஆறு. அழகப்பன்**

**தமிழ்ச் சுரங்கம்**
50 ஏ, வெங்கடேச நகர்,
முதன்மைச் சாலை,
விருகம்பாக்கம்,
சென்னை - 600 092.

# டாக்டர் உ.வே.சா.

தமிழ் மொழியில் வழங்கும் சொற்களுள் மூன்றெழுத்துச் சொற்களுக்கு ஒரு தனித்தன்மையும் சிறப்பும் உண்டு. அழுத்தமான உயிர் நாடியான கருத்தும் அவற்றிற்கு உண்டு. எடுத்துக்காட்டாக அன்பு, அமுது, உண்மை, உறுதி, கற்பு, கடமை, காதல், நட்பு, நன்றி போன்றவற்றைக் கூறலாம். இக்காலப் புதுமை வழக்கிலும் மூன்றெழுத்துச் சொற்கள் பல, முதன்மை பெற்றுள்ளன.

நேதாஜி, நேருஜி, இராஜாஜி, வ.உ.சி., ம.பொ.சி., ஈ.வெ.ரா. இப்படிப் பல. இத்தகைய மூன்றெழுத்துப் பெயர்களுள் தமிழ்கூறு நல்லுலகத்தின் கலங்கரை விளக்கமாய்த் திகழ்வது உ.வே.சா. இப்பெயரை அறியாத தமிழறிஞர் எவரும் இரார். இதனை நன்றி உணர்வோடு எண்ணாத ஆராய்ச்சியாளரும் இலர். தமிழ் மண்ணிலே பிறந்து, தமிழ்ப்பணியே புரிந்து தமிழ் இலக்கியப் பணியில் இறுதி மூச்சுவரை ஈடுபட்டு உழைத்து மறைந்த இப்பெருமகனாரின் தொண்டினை நினைவுகூரும் முகத்தான் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அமைத்துள்ள அறக்கட்டளையின் சார்பில் இச்சொற்பொழிவு நிகழ்த்தப்படுகிறது.

"டாக்டர் உ.வே.சா. நூல்களில் சொல்லும் சுவையும்" என்பது இப்பொழிவின் தலைப்பு.

உ.வே.சா. என்பதன் விரிவே உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் திருமகனார் சாமிநாதையர் என்பதாகும்.

டாக்டர் ஐயரவர்கள் எழுபத்து நான்குக்கு மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்திருக்கிறார்கள்; பல நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்கள். சில உரைநடை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். ஐயர் தாம் பதிப்பித்த பண்டைய நூல்களில் இடம் பெற்ற சொற்கள் சிலவற்றிற்கு அவர் தரும் விளக்கங்கள் மிக நுட்பமானவை; நயம் பொருந்தியவை; நயத்தாலும் விளக்கும் முறையாலும் தமிழ்ச்சுவையை மிகுவிப்பவை. சொற்களுக்கு விளக்கம் எழுதி இவர் எவ்வாறு சுவை பெறச் செய்திருக்கின்றார்; இவர் விளக்கத்தாலும் அமைப்பு முறையாலும் சொற்கள் எவ்வாறு பொருட்சிறப்பைப் பெறுகின்றன என்பதை எடுத்துக்காட்டுவதே இப்பொழிவின் தலையாய நோக்கம்.

ஐயரால் பதிப்பிக்கப்பெற்ற நூல்களில் தொடக்கத்திலும், ஈற்றிலும் அமைந்துள்ள ஆராய்ச்சி முன்னுரை, சொற்களுக்கு அடிக்குறிப்பாய் எழுதப் பெற்றுள்ள குறிப்புரைகள், பாடல் அடிகளின் நயங்கள், மேற்கோள் ஒப்புமைகள், அருஞ்சொற்பொருள் அகரவரிசை போன்ற பகுதிகளில் உள்ள சிறப்புகள் இங்கு எடுத்துக் கூறப்படும்; ஏனைய உரைநடை நூல்களிலும் உள்ள சுவையான பகுதிகள் சுட்டப்படும்.

இவற்றை நோக்கமாய்க்கொண்டு இப்பொழிவு பின்வரும் மூன்று தலைப்புகளில் அமைகிறது.

1. டாக்டர் உ.வே.சா. பதிப்பித்த நூல்களில் சொல்லும் சுவையும்.
2. வாழ்க்கை வரலாற்று நூல்களில் சொல்லும் சுவையும்.
3. உரைநடை நூல்களில் சொல்லும் சுவையும்.

**தமிழ்ப்பணி**

தமிழ், தமிழ் இலக்கியங்கள் என்று கூறும்போதே தமிழ்த் தாத்தா டாக்டர் சாமிநாதையரின் நினைவு நெஞ்சில் தோன்றும். காரணம், தமிழ்ப்பணிக்காகவே தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டு எவராலும் செய்வதற்கரிய சாதனை படைத்தவர் அவர். தமிழே அவரது பேச்சாகவும் மூச்சாகவும் திகழ்ந்தது.

இப்பெருமகனாரது தமிழ்ப்பணியை, "சாமிநாத ஐயர் தமிழிலே பிறந்தார்; தமிழிலே வளர்ந்தார்; தமிழிலே வாழ்ந்தார். அவர் பிறப்பும் தமிழ்; வளர்ப்பும் தமிழ்; வாழ்வும் தமிழ். அவர் மனமொழிமெய்களெல்லாம் தமிழே ஆயின; அவர் தமிழாயினர்; தமிழ் அவராயிற்று. அவர் தமிழ்; தமிழ் அவர்!..........

"அக்காலம் சண்டைமயமானது. ஐயர் புலமை அவரைச் சண்டையில் புகுத்தவில்லை; தமிழ்த்தொண்டில் புகுத்தியது. அத்தொண்டு அவரை மஹாமகோபாத்தியாயர் ஆக்கிற்று; தாக்ஷிணாத்ய கலாநிதி ஆக்கிற்று; டாக்டர் ஆக்கிற்று; தமிழ்த் தாத்தா ஆக்கிற்று; தமிழ்க் கோயில் ஆக்கிற்று!..........

"பழந்தமிழ் வெளியீட்டுக்குக் கால்கொண்டவர், ஆறுமுக நாவலர். சுவர் எழுப்பியவர், தாமோதரம் பிள்ளை; கூரை வேய்ந்து நிலையம் கோலியவர், சாமிநாத ஐயர்" [1] எனத் தமிழ்த்தென்றல் பாராட்டுவது குறிப்பிடத்தக்கது.

தமிழ் அகப்பொருள் நூல்களின் ஆய்வுப் பிழிவு எனத் திகழும் "தமிழ்க்காதல்" என்னும் அரிய நூலை எழுதிய திரு. வ.சுப. மாணிக்கம் அவர்கள் அந்நூலில்

"பார்காத்தார் ஆயிரம்பேர் பசித்தார்க் காகப்
பயிர்காத்தார் ஆயிரம்பேர் பாலர்க் காக
மார்காத்தார் ஆயிரம்பேர் வாழ்ந்த நாட்டில்
மனங்காத்த தமிழ்த்தாய்என் உடைமை எல்லாம்
யார்காத்தார் எனக்கேட்க ஒருவன் அம்மா
யான்காப்பேன் எனவெழுந்தான் சாமி நாதன்
நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சின் உள்ளான்
நிலைகாத்த மலைஇமய நெற்றி மேலான்!"

எனப் பாடி இவரது தமிழ்த்தொண்டைப் பாராட்டுவது கருதத்தக்கது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழில் எழுதப்பெற்ற சங்க நூல்கள் என்னும் தங்க அணிகலன்களையும், காப்பியப்

1. தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார்: "திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்."

புதையல்களையும் கண்டெடுத்துத் தமிழ் அன்னைக்கு அளித்தவர் இவர். அறுபது ஆண்டுகள் *(1855-1943)* தமிழ் கற்பித்தவர். தமிழ் நூல்களை இவர் ஆராய்ந்து வெளியிட்ட பிறகே தமிழ் இலக்கிய எல்லையை உலகம் உணர்ந்தது. இவர் நூல்களால் உலக நாடுகள் தமிழின் சிறப்பை அறியத் தொடங்கின; தமிழிலக்கியத்தின் தொன்மை புலனாயிற்று. உலக நாடுகளில் உள்ள தமிழறிஞரும் பிறரும் ஆராய்ச்சி செய்வதற்கு இந்நூல்கள் கருவூலமாய் அமைந்தன. தமிழ் இலக்கிய உலகம் மறுமலர்ச்சி பெற்றது; தமிழ் ஆராய்ச்சி வளர்ந்தது; தமிழ் மாநாடுகள் பல நடந்தன. தமிழ் நூல்கள் பல உலக மொழிகளில் மொழியாக்கம் பெற்றன.

**வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு**

உலகத்தைச் சீர்திருத்தும் சான்றோர்கள் பல ஆண்டுகளுக்கு ஒரு முறையே தோன்றுவர் என மெய் நூல்கள் கூறுகின்றன. எத்துறையில் சீர்குலைவு ஏற்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் அத்துறையில் அறிவாற்றல் மிக்க ஆன்றோர்கள் பிறந்து சீர்படுத்தியுள்ளதை வரலாறுகள் அறிவிக்கின்றன.

சைவ சமயத்துறை தாழ்வுற்ற காலங்களில் அப்பரும் சம்பந்தரும் அருள்மிகு வாதவூரரும் தோன்றி அதனைத் தழைத்தோங்கச் செய்துள்ளனர். வைணவத்தின் அடிப்படைத் தத்துவங்களை விளக்கி மக்களிடையே பரப்ப இராமானுஜர் தோன்ற வேண்டியதாயிற்று. தெய்வத் திருமுறைகளின் மாண்பையும், செயற்கரிய செய்த சிவத்தொண்டர்களின் பெருமைகளையும் விரித்துரைக்கத் தோன்றினார், தெய்வச் சேக்கிழார். வரலாறு உணர்த்தும் உண்மை நியதி இது.

தமிழகத்தின் கவிதைத்துறை மாசூர்ந்து பழைமை நிலை பாழ்பட்டுத் தாழ்வுற்றுக் கிடந்த காலத்தில் அதைத் தலைநிமிர்த்தப் பாரதி தோன்றினான் எனப் பாடுவார் பாவேந்தர்.

"தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமைதிற வாமல் இருந்த நிலையில்
தமிழகம் தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கி டக்கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்"

(புதுநெறி காட்டிய புலவன்)

பண்டைத் தமிழ் நூல் எதுவும் தமிழர்க்குக் கிடைக்கவில்லையே என்று தமிழன்னை கவன்றாள். அக்கவலையை நீக்கச் சாமிநாதையர் பிறந்தார்.

**இளமையும் கல்வியும்**

ஐயரவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த, பாபநாசத்தை அடுத்துள்ள உத்தமதானபுரம் என்னும் சிற்றூரில், அந்தணர் மரபில், வேங்கடசுப்பையர் - சரசுவதி தம்பதிகளுக்குப் புதல்வராய் *19-2-1855*ஆம்

ஆண்டில் பிறந்தார். அது ஆனந்த ஆண்டு. எனவே, தமிழுக்கும் ஆனந்த ஆண்டாகவே அமைந்தது.

இளம்பருவத்தில் தம் பாட்டனார் வேங்கடாசல ஐயரிடம் அரிச்சுவடி கற்றார்; கனம் கிருஷ்ணையரிடம் சில காலம் இசை பயின்றார். எனினும், இசை பயிலுவதைவிடத் தமிழ் நூல்களைக் கற்க வேண்டும் என்ற துடிப்பே இளமை முதல் இவரிடம் மேலோங்கி நின்றது. எனவே, இவர் குன்னம் என்னும் ஊரில் வாழ்ந்த சிதம்பரம் பிள்ளை என்பவரிடம் சில சிறு நூல்களைப் பாடம் கேட்டுவந்தார்.

*16-6-1868* அன்று இவருக்குத் திருமணம் நடைபெற்றது. மனைவியார் மதுராம்பாள்.

**மீனாட்சிசுந்தரம் பிள்ளை தொடர்பு**

பின்னர்ச் செங்கணம் சின்னப்பண்ணை விருத்தாசல ரெட்டியாரிடம் சில நூல்களைப் பாடம் கேட்கும் வாய்ப்பு இவருக்கு வாய்த்தது. சிறப்பாக யாப்பருங்கலக் காரிகையைப் பயின்று செய்யுள் இயற்றும் ஆற்றலையும் பெற்றார். அப்போது, திருவாவடுதுறை ஆதீனத்தில் வித்துவானாய் விளங்கிய திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைப்பற்றி ரெட்டியார் இவரிடம் அடிக்கடிக் கூறுவதுண்டு.

பிள்ளையவர்களின் இலக்கண இலக்கியப் புலமையைக் கேள்வியுற்ற ஐயர், அவரை நாடிச் சென்று, அவர் அன்பைப் பெற்றார்; பல புராண நூல்களையும், சிற்றிலக்கியங்களையும் அவரிடம் பாடம் கேட்டறிந்தார். அதன் பின்னரே இவருக்கு முழுநிறைவு ஏற்பட்டது. பஞ்சத்தில் அடிபட்டு வயிறு காய்ந்தவன் சிறிது சிறிதாகப் பல இடங்களில் உணவு பெற்று உண்டு வரும் காலத்து, ஓரிடத்தில் வயிறு நிறையச் சோற கிடைத்தால் எவ்வாறு மகிழ்வானோ அவ்வாறே இவர் மகிழ்வுற்றார்.

"எனக்கிருந்த தமிழ்ப்பசி மிக அதிகம். மற்ற இடங்களில் நான் பாடம் கேட்டபோது அவர்கள் கற்பித்த பாடம் யானைப் பசிக்குச் சோளப்பொரி போல இருந்தது. பிள்ளையவர்களிடம் வந்தேன். என்ன ஆச்சரியம்! எனக்குப் பெரிய விருந்து, தமிழ் விருந்து கிடைத்தது. என் பசிக்கு ஏற்ற உணவு. சில சமயங்களில் விஞ்சிக்கூட கிடைக்கும். இனி நமக்குத் தமிழ்ப்பஞ்சம் இல்லை என்ற முடிவிற்கு வந்தேன்"[1] என இவரே கூறுவதால் இதை அறியலாம்.

**சுவாமிநாதன்**

'வேங்கடராமன்' என்பது ஐயர் பெற்றோர் இவருக்கு இட்ட பெயர். ஆயினும், திருவேரகத்தில் எழுந்தருளிய தெய்வக்குமரன் நினைவாக இவரைச்

---

*1.* என் சரித்திரம் - ப. *258.*

'சாமா' எனவும் அழைப்பதுண்டு. 'சாமா' என்பது சாமிநாதன் என்ற பெயரின் சுருக்கம் இச்செய்தியை இவர் வாயிலாக வினவியறிந்த பிள்ளையவர்கள் "இனி உன் பெயர் 'சாமிநாதன்' என்றே இருக்கட்டும்" என்று கூறவே, அது வரலாற்றில் நிலை பெறுவதாயிற்று.

**சுப்பிரமணிய தேசிகர்**

பிள்ளையவர்களின் தயவால் திருவாவடுதுறை ஆதீனத் தலைவராய்த் திகழ்ந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகரின் தொடர்பு இவருக்கு ஏற்பட்டது. தேசிகர் சிறந்த தமிழ்ப்புலமையும், சமய நூலறிவும் உடையவர். ஐயர் அவரிடம் பல சித்தாந்த நூல்களையும், நன்னூல் போன்ற இலக்கண நூல்களையும் பயின்றார். தேசிகரால் இவர் அடைந்த நன்மைகள் பல.

அக்காலத்தில் கும்பகோணம் அரசுக் கல்லூரியில் தமிழாசிரியராய் இருந்த வித்துவான் தியாகராசச் செட்டியாரின் நட்பு ஐயருக்குக் கிடைத்தது. அவர் ஓய்வு பெற்ற பின் அவரது இடத்தில் இவர் தமிழாசிரியராய் நியமனம் பெற்றார்.

**சேலம் இராமசாமி முதலியார்**

அந்நாளில் சேலம் இராமசாமி முதலியார் என்பவர் கும்பகோணத்திற்கு முனிசீப்பாகப் பதவி ஏற்று வந்தார். அவர் சிறந்த தமிழறிஞர். ஐயர் அவரைச் சென்று சந்தித்த போது, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பண்டைத் தமிழ் இலக்கியங்கள் உண்டு என்னும் உண்மையை அறிய நேரிட்டது. ஏட்டுச் சுவடிகளில் மறைந்து கிடக்கும் அவ்வரிய கருவூலங்களைப் பதிப்பித்து வெளியிட வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு ஏற்பட்டது. இதற்குத் தூண்டுகோலாய் அமைந்தவர் முதலியாரே எனலாம்.

இராமசாமி முதலியாரிடம் சீவக சிந்தாமணி பிரதியொன்றைப் பெற்று அதைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஐயர் ஈடுபட்டார்.

**சென்னை வாசம்**

*1903*ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராய் இருந்த சீனுவாசாச்சாரியார் ஓய்வு பெற்றார். அங்குக் கல்லூரி முதல்வராய் இருந்த ஜே.எம். ஹென்ஸ்மென், ஐயரவர்களின் புலமையைக் கேள்வியுற்று அவ்வேலையை ஏற்குமாறு வேண்டினார். சென்னையில் தங்கினால் தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதற்கு வசதியாய் இருக்குமென்றெண்ணி ஐயர் அவ்வேலையை ஏற்றுக்கொண்டார். சென்னையில் திருவேட்டீசுவரன் பேட்டையில் தங்கித் தமது தமிழ்ப்பணிகளைத் தொடர்ந்தார். அதன்பின் சிலப்பதிகாரம், மணிமேகலை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, குறுந்தொகை போன்ற பல நூல்களை அச்சில் பதிப்பித்து வெளியிட்டார்; பல நூல்களுக்கு உரை எழுதினார்; பல உரைநடை நூல்களையும் வாழ்க்கை வரலாற்று நூல்களையும் வரைந்தார்.

ஐயர் *1919*ஆம் ஆண்டில் மாநிலக்கல்லூரியினின்றும் ஓய்வு பெற்றுத் திருவாவடுதுறையில் வந்து சில காலம் தங்கினார்; அதன் பின்னரே பெருங்கதையை ஆராய்ந்து பதிப்பித்தார்.

**பணியும் பாராட்டும்**

ஐயரவர்களின் தமிழ்ப்பணி மகத்தானது. ஒரு நிறுவனம் செய்ய வேண்டிய பணியைத் தனி ஒருவராகவே செய்து சாதனை படைத்தவர் இவர்.

இவரது சிறந்த பணிகளைப் பாராட்டி மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் காஞ்சி காமகோடிபீடம் சங்கராச்சாரிய சுவாமிகளால் 'தாக்ஷிணாத்ய கலாநிதி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

சென்னைப் பல்கலைக்கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கியது *(1932)*.

*1924*ஆம் ஆண்டில் இவர் அரசர் அண்ணாமலையாரின் வேண்டுகோளை ஏற்றுச் சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றினார். இதுவே இவரது இறுதிப்பணி. இரண்டாம் உலகப் போரின் நெருக்கடி காரணமாய் ஐயர் திருக்கழுக்குன்றத்தில் சென்று தங்க நேரிட்டது. அங்கே *1942*ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் இவர் இறைவன் திருவடியை எய்தினார்.

இவரது பூதவுடல் மறைந்த போதிலும் இவர் ஆற்றிய அரும்பணிகளின் நினைவு ஒவ்வொரு தமிழர் நெஞ்சிலும் இன்னும் பசுமையாகவே இருந்து வருகிறது. இதனை நன்றியுணர்வோடு சுப்பிரமணிய பாரதியார் பாடுவது நினையத்தக்கது.

**மகாமகோபாத்தியாயர்**

செம்பரிதி ஒளிபெற்றான்; பைந்நறவு
சுவைபெற்றுத் திகழ்ந்தது; ஆங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்று
எவரேகொல் உவத்தல் செய்வார்?
கும்பமுனி எனத்தோன்றும் சாமிநா
தப்புலவன் குறைவில் கீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல், இதற்கென்கொல்
பேருவகை படைக்கின்றீரே? *(1)*

அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி யறியாதார்
இன்றெம்மை ஆள்வோ ரேனும்
பன்னியசீர் மகாமகோ பாத்தியா
யப்பதவி பரிவின் ஈந்து

பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா
 தன்றனக்குப் புகழ்செய் வாரேல்,
முன்னிவனப் பாண்டியர்நாள் இருந்திருப்பின்
 இவன்பெருமை மொழிய லாமோ? (2)

நிதியறியோம், இவ்வுலகத் தொருகோடி
 இன்பவகை நித்தம் துய்க்கும்
கதியறியோம் என்றுமனம் வருந்தற்க;
 குடந்தைநகர்க் கலைஞர் கோவே
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
 காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய், அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
 இறப்பின்றித் துலங்கு வாயே. (3)

– மகாகவி பாரதியார்

## டாக்டர் உ.வே.சா. பதிப்பித்த நூல்களில் சொல்லும் சுவையும்

தமிழ்மீது தணியாக் காதல் கொண்டு, ஓடி ஓடித் தமிழ் ஏடுகளைத் தேடிக் கொண்டுவந்து பதிப்பித்தவர், டாக்டர் ஐயர். அவ்வாறு பதிப்பிக்கும் போது மூலநூலைமட்டும் பதிப்பிப்பது அவர் வழக்கமன்று. அதில் உள்ள சொற்களையும் தொடர்களையும் நன்கு ஆராய்ந்து, நூலின் முன்னும் பின்னும் ஆய்வுக் குறிப்புகளைச் சேர்த்துப் பதிப்பிப்பதே அவர் கொள்கை.

ஒரு நூலுக்குப் பொலிவும், பொருள் அழுத்தமும் தருவன சொற்களே. எனவே, சொல்லாராய்ச்சியிலும், சொற்பொருள் விளக்கத்திலும் அவர் மிகுதியும் ஈடுபட்டுள்ளது வியப்பன்று.

### சொல்லாற்றல்

சொற்கள் மிகவும் வலிவுடையவை; விரைந்து சென்று உள்ளத்தில் பாய்ந்து உணர்வுகளைத் தூண்டும் ஒண்மையன. இராமபாணத்தின் விரைவையும், அழிப்பாற்றலையும் பற்றிக் கம்பராமாயணம் பேசுகிறது. இராமனது அம்பைக் காட்டிலும் விரைவும், வலிமையும் உடையன, சொற்கள். எனவே, அவ்வம்பிற்குச் சொல்லையே உவமையாக்குகின்றார் கம்பர்.

'சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம்,' *(1:தாட:72)*

இலக்கியங்களில் புதைந்து கிடக்கும் சொற்களின் நுட்பப் பொருளை உரையாசிரியர்கள் எடுத்து விளக்கும்போது அவை சுவை தருகின்றன. அடியார்க்கு நல்லார் உரையால் சிலப்பதிகாரமும், நச்சினார்க்கினியர் உரையால் சீவக சிந்தாமணியும் சிறப்புப் பெற்றன அல்லவா?

பொதுவாகவே, கவிதைகளில் சொற்கள் செறிவாகத்தான் அமைந்திருக்கும். அக்கவிதைகளில் அமைந்துள்ள ஓசைநயம், நடைநலம்,

கற்பனை வளம், நுட்பமான நயம், மெய்ப்பாடு, உத்தி ஆகியவற்றை உரையாசிரியர் விளக்கும் போதுதான் அக்கவிதைகள் சுவைபெறுகின்றன.

'நவில்தொறும் நூல்நயம் போலும்' என இதனைக் குறிப்பார், வள்ளுவர்.

சொற்களை ஆராய்ந்து அவற்றின் நுட்பத்தைப் புலப்படுத்துவது ஒரு தனிக்கலை. இக்கலையில் கைவந்த பேராற்றல் உடையவர், டாக்டர் உ.வே.சா. எனவே, அவரது பதிப்பு நூல்களில் அமைந்துள்ள சொற்களைச் சுவைபட விளக்கிக்காட்ட அவர் எவ்வெவ் உத்திகளைக் கையாண்டுள்ளார் என்பதை எடுத்துரைக்கின்றது, இப்பொழிவு.

சொற்களுக்குப் பொருள்விளக்கம் சுட்டுதல்,
சொற்களின் தொனிப்பொருளை விளக்குதல்,
சொல்லுக்கு நயம் கூறுதல்,
இக்காலத்து விளங்காத சொற்களுக்குப் பழைய நூற்சான்று
தந்து பொருளை விளக்குதல்,
வட்டார வழக்குகளைத் தெளிவுறுத்துதல்,
விசேடச் செய்தி கூறல்

இவ்வாறு பலப்பல முறைகளைக் கையாளும் திறத்தை இவர் நூல்களில் பரக்கக் காணலாம்.

**பதிப்புத் திறன்**

டாக்டர் உ.வே. சாமிநாதையரின் பதிப்புத் திறன்பற்றித் தமிழறிஞர் பலர் பாராட்டியுள்ளனர்.

"ஒரு நூலைப் பதிப்பிக்கும் முன்பு நன்கு ஆழமாய்ப் படித்தார். அந்நூலுக்குத் தொடர்பான செய்திகள் எவை எவை என ஆராய்ந்தார். அந்நூலின் பிரதிகள் எவரெவரிடமெல்லாம் இருக்கக்கூடுமெனச் சிந்தித்தார். அவர்களிடம் பிரதிகளைப் பெறும் முறைகளையும் எண்ணினார். நூலின் கருத்து விளக்கம் பெறுவதற்குத் தொடர்பான நூல்களை ஆராயும் போக்கினையும் கொண்டிருந்தார். பல வகை அகராதிகளையும் முதற்கண்ணே தொகுத்துக் கொண்டார். தாம் பதிப்பித்த நூல்களுக்கு அரும்பதம் முதலியவற்றின் அகராதி, விசேடச் செய்திகள் அகராதி, விளங்கா மேற்கோள் அகராதி முதலிய பல. அகராதிகளைத் தொகுத்தார். பதிப்பிக்க இருந்த நூல்களுக்கும் இவ்வாறு அகராதியைத் தொகுத்திருந்தார்." [1]

"இச்சிந்தனை அவருக்களித்த பயனால், தாம் பதிப்பிக்க எடுத்துக்கொண்ட நூலுக்கு மட்டுமன்றி, அதற்குத் தொடர்புடைய

---

1. மு.கோ. இராமன், தினமணி சுடர் 4-3-73. ப. 1.

நூல்களுக்கும், தாம் பதிப்பிக்காத நூல்களுக்கும் பல்வேறு அகராதிகளை அவர் அமைத்துக் கொண்டார்." [1]

இவ்வாறு சிந்தித்துச் சிந்தித்து, அடுத்து வரும் நூல்களில் குறைவில்லாமல் பதிப்பித்தது இவரது தனிச்சிறப்பு. முதல்முதலில் பதிப்பித்த வேணுவனலிங்க விலாசச் சிறப்புக்கும் அதன்பின் பதிப்பித்த நூல்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் இவரது சிந்தனை வளர்ச்சியைக் காட்டுகின்றன.

**பதிப்பித்த நூல்கள்**

டாக்டர் ஐயரவர்களின் பதிப்புப்பணி இவரது *23*ஆம் வயதிலேயே தொடங்கிவிட்டது. பதிப்பித்தவை, எழுதி வெளியிட்டவை ஆகியவை *74* நூல்கள். இது மாபெரும் சாதனை.

**முதல் நூல்**

ஐயர் முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்ட நூல் 'கொலுமண்டபம்' என்னும் வேணுவனலிங்க விலாசச் சிறப்பு *(1878)*. இது *32* பக்கங்களைக் கொண்ட சிறுநூல். எனினும், இவர் மற்ற நூல்களைப் பதிப்பிப்பதற்கு இது வித்தாய் அமைந்தது எனலாம்.

இரண்டாவதாகப் பதிப்பித்த நூல், மீனாட்சிசுந்தரம் பிள்ளை எழுதிய திருக்குடந்தைப் புராணம் *(1883)*.

மூன்றாவது பதிப்பு நூல் ஸ்ரீமத்தியார்ச்சுன மான்மியம் *(1885)*.

பின்னர் வெளிவந்த நூல்களுள் குறிப்பிடத்தக்கவை

| | |
|---|---|
| சீவகசிந்தாமணி .................. | *1887* |
| பத்துப்பாட்டு .................. | *1889* |
| சிலப்பதிகாரம் .................. | *1892* |
| புறநானூறு .................. | *1894* |
| புறப்பொருள் வெண்பா மாலை .................. | *1895* |
| மணிமேகலை .................. | *1898* |
| ஐங்குறுநூறு .................. | *1903* |
| பதிற்றுப்பத்து .................. | *1904* |
| மீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு .................. | *1910* |
| பரிபாடல் .................. | *1918* |
| நன்னூல் - மயிலை நாதர் உரை .................. | *1918* |
| பெருங்கதை .................. | *1929* |
| தக்கயாகப்பரணி .................. | *1930* |
| சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத் திரட்டு .................. | *1932* |

---

*1.* பூ. சொல்விளங்கும் பெருமாள், டாக்டர் உ.வே.சா. பதிப்புப்பணி - ஓராய்வு, *4-88,* மதுரை, *1981*.

| | | |
|---|---|---|
| குறுந்தொகை | ................. | *1937* |
| குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு | ................. | *1939* |

இவை தவிர மற்றவை புராண நூல்கள், சிற்றிலக்கியங்கள், வாழ்க்கை வரலாறுகள், சில உரைநடை நூல்கள்.

**சீவகசிந்தாமணி**

கும்பகோணம் கல்லூரியில் உ.வே.சா. தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அப்போது அங்கு நீதிபதி (முனிசீப்)யாக இருந்தவர் சேலம் இராமசாமி முதலியார். அவரது தமிழறிவைக் கேள்வியுற்ற ஐயர், அவரை நாடிச் சென்று, *21-10-1830* அன்று சந்தித்தார். தாம் கல்லூரியில் பணியாற்றுவதையும், திருவாவடுதுறை மடத்தில் கல்வி கற்றதையும் எடுத்துக் கூறினார்.

"நீங்கள் யாரிடம் பாடம் கேட்டீர்கள்?" என்றார் நீதிபதி. "மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டேன்" எனப் பதிலிறுத்தார், உ.வே.சா. "என்ன என்ன நூல்களைப் பாடம் கேட்டீர்கள்?". "குடந்தையந்தாதி, மறைசையந்தாதி, முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ், திருக்கோவையார்" - இப்படிப் பல நூல்களைப் பாடங்கேட்டதாகப் பட்டியலிட்டுக் கூறினார், ஐயர்.

இதனால் நிறைவு பெறாத முதலியார், "இதெல்லாம் படித்து என்ன பிரயோசனம்? பழைய நூல்களுள் ஏதாவது படித்திருக்கிறீர்களா?" என்றார். "தாங்கள் எந்த நூலைச் சொல்லுகிறீர்கள் என்று தெரியவில்லையே!" என ஐயர் வினவ, "சீவகசிந்தாமணி படித்திருக்கிறீர்களா, மணிமேகலை படித்திருக் கிறீர்களா?" என் வினவினார், முதலியார். ஐயர் தமது அறியாமையை உணர்ந்து, "நூல் கிடைப்பின் படித்துப் பார்ப்பேன்" என்று கூறி, அவரிடமிருந்த சீவக சிந்தாமணிப் பிரதியை வாங்கிச் சென்றார். [1]

இந்நிகழ்ச்சியே ஐயரவர்கள் சிந்தாமணி என ஒரு நூல் உண்டு என அறிவதற்கும், அதைப் பதிப்பிப்பதற்கும் காரணமாய் அமைந்தது.

சீவகசிந்தாமணியின் முதற்பாட்டு, குறிப்பாக "மூவா முதலா உலகம் ஒருமூன்றும் ஏத்த" என்ற கடவுள் வாழ்த்துத் தொடர் அவர் உள்ளத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது; சிற்றிலக்கியங்களை ஏராளமாய்ப் பாடம் கேட்டிருந்த தால் தமிழ் நூற்பரப்பை ஒருவாறு அறிந்துவிட்டதாகக் கொண்டிருந்த அவர் எண்ணத்தை மாற்றியது. தாம் அறிந்தவற்றினும் மேலாக இலக்கிய உலகம் ஒன்று உண்டு என்ற உணர்வை அது எடுத்துக் காட்டியது. உலகம் நிலையாமை உடையது என்பதைத் தமிழ் இலக்கியங்களில் பன்முறை படித்துப் படித்துப் பழகி இருந்த அவருக்கு, இத்தொடர் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

---

*1.* என் சரித்திரம் ப. *731.*

இவ்வாறு அந்நூலின் முதலடியே புதிய பொருளைத் தரத் தொடங்கியதால், ஒரு பிரதியை மட்டும் வைத்துக்கொண்டு படிக்கலாகாது என்ற சிந்தனை தோன்றியது. எனவே, பல இடங்களுக்கும் தேடிச் சென்று, சிந்தாமணியின் ஏட்டுச் சுவடிகள் பலவற்றைத் தொகுத்தார்.

திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் எழுதி வைத்திருந்த ஏட்டுப் பிரதியொன்றையும் கொடுத்துதவினார். இவ்வாறு *23* பிரதிகள் கிடைத்தன. அவற்றை நன்கு ஆராய்ந்த பின்னரே ஐயரவர்கள் சிந்தாமணியைப் பதிப்பித்து வெளியிட்டார்கள்.

**நச்சினார்க்கினியர்**

சீவக சிந்தாமணிக்கு உரை எழுதியவர், நச்சினார்க்கினியர். இவரது உரையால் சீவக சிந்தாமணி சிறப்படைந்தது. இவ்வுரை இல்லாவிடில் பல இடங்கள் பொருள் விளங்காமலே போயிருக்கும். இவ்வுரையாசிரியரை, "உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்" [1] எனப் போற்றுகின்றார், ஐயர். இவரை அறிமுகப்படுத்தும் போது எவ்வாறு பெருமையோடு எழுதுகின்றார் என்று காண்போம்.

"நச்சினார்க்கினியர் பாண்டி நாட்டில், மதுராபுரியைச் சார்ந்த, பிராமண குலத்தில், பரத்துவாச கோத்திரத்தில் உதித்தவர்; தமிழில் மிகுந்த புலமை உடையவர். 'நச்சினார்க்கினியர், நச்சினார்க்கினியாய்' எனத் தேவாரம் முதலான சைவ இலக்கியங்களில் சிவபிரான் குறிக்கப்பெறுதலின், இப்பெயர் தாங்கிய இவர் சைவரே. இவர் பத்துப்பாட்டு, தொல்காப்பியம், கலித்தொகை, குறுந்தொகை ஆகிய நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார்.......... உரை எழுதும் திறத்தில் இவர் வடமொழி மல்லிநாத சூரி போன்றவர்." [2]

இவ்வாறு இவரது பெயரைச் சான்றுடன் கூறிச் சைவர் எனச் சுட்டுவது சிறப்பு. நச்சினார்க்கினியரின் உரை, மூல நூலின் பொருளைச் சிறக்கச்செய்யும் இடங்கள் பல என்று கூறும் ஐயர், அவ்வாறான *140* இடங்களைத் தொகுத்துத் தந்திருக்கின்றார். நச்சினார்க்கினியர் உரை எழுதிய வரலாறு பற்றி ஒரு கதையையும் இவர் கூறுகிறார்.

**அக்கதை**

நச்சினார்க்கினியர் சிந்தாமணிக்கு ஓர் உரை எழுதினார். அதில் சைன சமய மரபுக்கும் வழக்கங்களுக்கும் முரணாகச் சில செய்திகள் இருந்தன. அவற்றைச் சைனர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் நச்சினார்க்கினியர் தம்மைச் சமணர் எனச் சொல்லிக்கொண்டு, சிற்றாம்பூர் சைன மடம் சென்று, சைன நூல்களையும் வழக்கங்களையும் அறிந்து வந்து, புதிய சிறப்புரை ஒன்றை எழுதினார் என்பது.

---

1. சீவக சிந்தாமணி முகவுரை ——— டாக்டர் ஐயர்.
2. சீவக சிந்தாமணி முகவுரை ——— டாக்டர் ஐயர்.

இக்கதை தோன்றக் காரணம் என்ன? சேலம் இராமசாமி முதலியார் கொடுத்த சிந்தாமணிப் பிரதியில் மூலமும் பொழிப்புரையும் இருந்தன. சுப்பிரமணிய தேசிகர் கொடுத்த மடத்துப் பிரதியில் மூலமும் சிறப்புரையும் இருந்தன. பொழிப்புரை, சிறப்புரை என இருபெயர் மாற்றம் எப்படி நிகழ்ந்தது என ஐயர் ஆராய்ந்தார். இவ்வுரை வேறுபாட்டின் காரணமாகவே நச்சினார்க்கினியர், முன்பு உரையும், சமணர்களிடம் சில கருத்துகளை அறிந்த பின் வேறு உரையும் எழுதியிருக்க வேண்டுமென்பதைக் கண்டறிந்தார்.

**நயவுரை கூறல்**

ஆசிரியர் ஒருவரின் புலமைக்கும், அறிவுக்கூர்மைக்கும் சான்றாய் அமைவன அவர் கூறும் நயவுரைகள் ஆகும். உரையாசிரியர்கள் பலர் நயவுரையால் சிறப்புப் பெற்றுள்ளனர்.

டாக்டர் ஐயரவர்கள் தாம் பதிப்பித்த நூல்களிலும், எழுதிய உரைகளிலும் பல இடங்களில் தமது கருத்துகளை நயமுறக் கூறியிருப்பது படித்து மகிழ்வதற்குரியதாகும்.

"நன்மன வேந்தர் தங்கள்
நகையணி மார்பம் நக்கிப்
புன்மன வேந்தர் தங்கள்
பொன்னணி கவசம் கீறி"

(சிந். *799*)

என்ற பாடலுக்கு, "நன்மன வேந்தர்தம் நகையாகிய பிறர்மனை நயத்தலை இனிக் கொள்ளும் உடம்பிலும் துன்னன்மின் என்பன போலச் சுடுசரங்கள் இப்புன்மன வேந்தருடைய கவசத்தைக் கீறி, மணிமார்பைத் தீண்டி, இன்னுயிரைக் கவர்ந்து பரந்தன என்க'' என உரை எழுதினார் நச்சினார்க்கினியர். இதற்கு, 'வேந்தர்தம் நகையாகிய தீமையை இனிக் கொள்ளும் உடம்பினாலும் துன்னமின் என்பவே போல் சுடுசரம் புன்மன வேந்தர் கவசம் கீறி, மார்பம் நக்கி, இன்னுயிர் கவர்ந்து பரந்த என்க,' என உரை விளக்கம் தருகிறார், ஐயர். ஐயர் விளக்கம் சுருக்கமாய் அமைந்து வினை முடிபை எளிதாய் உணர நிற்கிறது.

**உரை விளக்கம்**

நச்சினார்க்கினியரின் உரைக்குப் பல இடங்களில் இவ்வாறு விளக்கம் தருகின்றனார், ஐயர். அவ்விளக்கங்கள் பின்வரும் *9* வகைகளில் அமைகின்றன.

1. உரை விளக்கம்.
2. உரை மறுப்பு.
3. உரை விளக்கத்திற்குப் பிறர் உரை காட்டுதல்.

---

*1.* சீவக சிந்தாமணி முகவுரை ———— டாக்டர் ஐயர்.

4. உரை விளக்க மேற்கோள்.
5. உரைக்கு ஆதாரமான இலக்கணப் பகுதி.
6. உரையில் உள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்புத் தருதல்.
7. சமயச் செய்திகளை விளக்கல்.
8. உரைக்கு நயம் கூறுதல்.
9. உரைக்குச் சான்றாகப் பழைய உரை சுட்டுதல்.

என்பன அவை.

**1. உரை விளக்கம்**

செண்டுவெளி: "யானைச் செண்டு, குதிரைச் செண்டு என்று சில விளையாட்டுகள் உண்டு. யானையின்மீதும் குதிரையின்மீதும் ஏறியிருந்து பந்தை ஆடுதற்குரிய இடம் செண்டுவெளி," *(சிந். 275)*

**2. உரைக்கு மறுப்பு**

**ஆம்பல் :** ஆம்பல் பண்ணையுடைய குழல் *(சிந். 1314)* நச். உரை.

ஆம்பல் குழல் என்பது கருவியாகும்; பண்ணன்று எனக் காரணம் கூறி மறுப்பர், அடியார்க்கு நல்லார் *(சிலப் : பா. 4).*

**3. பிறர் உரை சுட்டுதல்**

முந்நீர் - நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலும் ஆகிய மூன்று தொழிலும் உடைமையின், முந்நீர் எனப்பட்டது. நச்சர் *(சிந். 5)*

அடியார்க்கு நல்லாரும் இங்ஙனமே கூறுவர். *(சிலப் : 17)* ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர் என்பாரும் உளர்.

**4. உரைவிளக்க மேற்கோள்**

உரையாசிரியரின் கருத்தை விளக்குவதற்காகத் தாமே சில மேற்கோள்களை அடிக்குறிப்பாய்க் காட்டுதல் ஐயரின் இயல்பு. "சீவகனை முற்கூறினார் கதைக்கு நாயகன் ஆதலின்" - நச்சர் *(சிந். 6).* "இவளை முற்கூறிற்று கதைக்கு நாயகியாதலின்" *(சிலப். 1-29).*

**5. உரைக்கு ஆதாரமான இலக்கணம் சுட்டல்**

நச்சினார்க்கினியரின் உரைக்கு ஆதாரமாய் அமைந்தது இன்ன இலக்கண நூல் எனப் பல இடங்களில் சுட்டிச் செல்லுவது ஐயர் இயல்பு. "அவ்விலக்கணத்தில் செய்யுளியலின்கண்ணே ஆசிரியப்பா நான்கென்றும், அவற்றை அறம் பொருள் இன்பத்தால் கூறுக என்றும் கூறிப் பின்பு அம்மை முதலிய எட்டும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கணம் *(சிந்.1)* என்பர்

என்று எழுதப்பட்ட நச்சரின் உரை, தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பா *106, 236* என்பனவற்றை ஆதாரமாய்க் கொண்டது" என விளக்குவார்.

**6. இலக்கணக் குறிப்புகளுக்கு விளக்கம் தருதல்**

நச்சினார்க்கினியர் தமது உரையில் பல சொற்களுக்கு இலக்கணக் குறிப்புகள் தந்து செல்லுகிறார். ஆனால், அவற்றிற்கு விளக்கம் தரவில்லை. ஐயரவர்கள் பல இடங்களில் அக்குறிப்புகள் எவ்வாறு பொருந்தும் என்ற விளக்கத்தைத் தருகின்றார்.

வருக்கை - ஆகுபெயர் *(நச்சர்: சிந்: 31)*

பலாப்பழத்திற்கு ஆனமையின் ஆகுபெயராயிற்று - ஐயர்

**7. சமயச் செய்திகளை விளக்கல்**

சிந்தாமணிக்கு உரை எழுதும் போது நச்சினார்க்கினியர், சமணர்களிடம் கேட்டறிந்து பல சமயக் கருத்துகளை எழுதினார் என வரலாறு கூறுகிறது. இவற்றைத் தமது உரையில் அவர் சுருக்கமாய்ச் சுட்டிச் செல்லுமிடங்கள் ஐயரின் விளக்கத்தால் தெளிவு பெறுகின்றன.

ஐயரவர்கள் அழுத்தமான சமயப்பற்று உடையவர். பிற மத வெறுப்பு இல்லாதவர். எதிர்பாராத விதமாய் அவர் பதிப்பித்த நான்கு காப்பியங்களும் புறச்சமயச் சார்பை உடையனவாய் அமைந்தன. எனினும், விருப்பு வெறுப்பின்றி இவர் அவ்வக் காப்பியங்களில் அவ்வம்மதக் கொள்கைகளையும், மரபுகளையும், வழக்குகளையும் விளக்கிச் செல்லுவது பாராட்டுதற்குரியது.

> "உலகம் நித்தியம் என்பது சைனர்களின் கொள்கை" *(சிந். 1)*
>
> "இந்திரன் சைனர்களால் உயர்ந்த தெய்வமாய்க் கொண்டாடப்படுவான்" *(சிந். 35)*
>
> "ஏழுகடல்களுள் பாற்கடலை ஐந்தாவதாகக் கூறுதல் சைன மத சம்பிரதாயம்" *(சிந். 3035)*

"தும்மியவுடன் ஜீவநூறும் புகுக என்றல் சைனமரபு. ஜீவ, நந்த, வர்த்தஸ் என்று ஆசி கூறுதல் சைவ முனிவர்களின் வழக்கம். சிவாய என்றல் சைவருடைய வழக்கம்" *(சிந். 323)*

**8. உரைக்கு நயம் கூறுதல்**

சீவக சிந்தாமணியில் வரும், "காதலான் காதலென்னும் நிகளத்தால்" *(சிந். 2987)* என்னும் தொடருக்கு, "ஈண்டுக் காதல் என்றது பல பிறப்பிலும் தமக்கு மனைவியராய் வந்தவர், இப்பிறப்பில் செய்யும் தவத்தால் பிறப்பற்று

வீடு பெற வேண்டும் என்று காதலித்த காதலை எனப் பொருள் கூறுவர் நச்சர். ஈண்டுக் காதல் என்பதற்கு உரையாசிரியர் எழுதும் பொருள் கூர்ந்தறியற்பாலது என உணர்த்துவர், டாக்டர் ஐயர்.

**9. பழைய உரை சுட்டல்**

*சீவக சிந்தாமணியின் 1526*ஆம் பாடல் உரையின் அடிக்குறிப்பில், "இக்கவியும் இதன் பழைய உரையும் மிக இன்புறற்பாலவை," என எழுதுகிறார்.

**வட்டார வழக்கு**

நாட்டுப்புற இயலை ஆராயும் போது அவ்வவ்வட்டார வழக்குச் சொற்களை எடுத்துக் கூறி ஆராய்தல் இக்கால ஆய்வாளரிடையே காணப்படுகிறது. இம்முறைக்கு வித்திட்டவர் டாக்டர் உ.வே.சா. அவர்களேயாவர்.

சிந்தாமணிச் செய்யுள்களில் இடம் பெற்றுள்ள வட்டார வழக்குச் சொற்களை ஆங்காங்கு விளக்கிச் செல்ல அவர் தவறுவதில்லை.

"தேங்காத மள்ளர் திரள்தோளிணை சிக்க யாத்த" *(சிந். 16)* என்பதில் 'சிக்க' என்பது குடநாட்டில் வழங்குகிறது.

"பாய் கட்டின கட்டை வண்டியை மலைநாட்டார் கொல்லாப்பண்டி என வழங்குவர்."

இவ்வாறு ஐயர் சுட்டிச் செல்லுமிடங்கள் பல.

பொதுவாகக் கூறுமிடத்துச் சொற்களை அப்படியே பதிப்பித்ததோடு அமையாது அவற்றைச் சுவைபட விளக்கிக் காட்டும் முறையையும் கையாண்டு ஐயர் வெற்றி பெற்றுள்ளார் என்பர் துணிபு.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரம் ஐயரால் திருத்தமாய்ப் பதிக்கப்பட்டு வெளிவந்தது *(1892)*. ஆனால், அதற்கு முன்னரே அந்நூலின் சிலச்சில காதைகள் தனியே பதிப்பிக்கப்பட்டுக் கல்லூரி மாணவர்களுக்குப் பாடமாய் வைக்கப்பட்டிருந்தன. இத்தகைய பதிப்பு ஒன்றைப்பற்றிய செய்தியை ஐயர் சுவைபடக் கூறியுள்ளார்.

**சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரத்தில் புகார்க்காண்டத்தின் மூலத்தை மாத்திரம் சென்னை பிரசிடென்சி காலேஜில் தமிழ்ப் பண்டிதராய் இருந்த சீனிவாச ராகவாசாரியார் என்பவர் முன்பு பதிப்பித்திருந்தார். அக்காலத்தில் சிலப்பதிகாரம் பாடமாய் வைக்கப்பட்டதால் இவ்வாறு பதிப்பிக்க

வேண்டியதாயிற்று. ஐயங்கார் பதிப்பில், 'சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய சிலப்பதிகாரம்' என அச்சிடப்பட்டிருந்தது.'

எவ்வளவு பெரிய தவறு இது. இதைத் தவறு என்று சுட்டிக் காட்டக்கூட ஆள் இல்லை என்பதை எவ்வளவு நாகரிகமாக ஐயர் புலப்படுத்துகின்றார் என்பது கருதத்தக்கது.

*1880*ஆம் ஆண்டில் சோடாவதானம் சுப்பராயச் செட்டியார் அக் காண்டத்தின் மூலத்தை அடியார்க்கு நல்லார் உரையோடு அச்சிட்டார். இவ்விரண்டு பதிப்புகளிலும் பல வகையான பிழைகள் இருந்தன. செட்டியார் கடின நடையாய் உள்ளனவற்றை எளிய நடைகளாகச் செய்தும், வேண்டிய இடங்களில் விரித்தும் சுருக்கியும், கானல் வரிக்கு உரை இன்மையால் உரை எழுதியும் அரங்கேற்றுக் காதையுள் வரம்பின்றிப் பரந்த இசைநாடக இலக்கணங்கள் பல இடங்களிலும் வருதலால் ஆங்காங்குணர இங்குச் சுருக்கியும் அச்சிட்டதாக முகவுரையில் தெரிவித்திருக்கிறார்." [2]

இவ்வாறு தமக்கு முன்பு சிலப்பதிகாரப் பிரதிகள்பற்றி ஐயர் கூறுவது அக்காலத் தமிழ் இலக்கிய உலகின் அவல நிலைமையைக் காட்டுவதாய் உள்ளது.

**சிலப்பதிகாரமா, சிறப்பதிகாரமா?**

இக்காப்பியத்தின் பெயரைச் சிலப்பதிகாரம் என்றுகூட அறியாத அப்பாவிகள் அக்காலத்திருந்தனர் என்பதை நகைச்சுவை தோன்ற ஐயர் எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. அவரே கூறுகிறார்:

"திருநெல்வேலியிலிருந்து திரிகூடராசப்பக் கவிராயரையும் அழைத்துக் கொண்டு அம்பாசமுத்திரம் சென்றேன். இடையே ஓர் ஊரில் ஓர் அபிஷீக்தர் (சைவர்களின் குரு) வீட்டுக்குப் போனோம்............

"நாங்கள் திண்ணையில் அமர்ந்தோம். 'எங்கே வந்தீர்கள்? அடிக்கடி உங்களைப் போன்ற கனவான்கள் இங்கே விஜயம் செய்கிறார்கள். நான் அவ்வளவு மரியாதைக்கு ஏற்றவனல்ல. என்ன விசேஷம்?' என்றார்.

'உங்களிடம் ஏட்டுச் சுவடிகள் இருப்பதாகக் கேள்வியுற்றேன். அவற்றைப் பார்க்கலாமென்று வந்தேன்' என்றேன்.

'அப்படியா? உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டார்.

நான் 'சிலப்பதிகாரம் வேண்டும்' என்றேன்.

'சிறப்பதிகாரமா? இருக்கும்', என்று அழுத்தமாகச் சொன்னார்.

'சிறப்பதிகாரமல்ல; சிலப்பதிகாரம்' என்று நான் இடைமறித்துச் சொன்னேன்.

---

1. என் சரித்திரம் பக். 963.
2. என் சரித்திரம் பக். 963.

'சிறப்பதிகாரமென்றுதான் சொல்ல வேண்டும். நீங்கள் சிறுபிள்ளை, உங்களுக்குத் தெரியாது' என்று கூறியபோது, கவிராயர், 'அது கிடக்கட்டும், புத்தகத்தைக் காட்டச் சொல்ல வேண்டும்' என்றார்.

எடுத்துக்காட்டிய போது அவை ஆகம ஏடுகளும் அந்திமக் கிரியை பற்றிய சுவடிகளுமாக இருந்தன." [1]

**வரலாற்று நூல்**

இலக்கியங்களைப் பதிப்பிக்கும் போது அவற்றின் உண்மையான தகுதியை எடுத்துக் கூற இவர் தயங்குவதில்லை. சிலப்பதிகாரம் ஒரு வரலாற்று இலக்கியம் என்பதைத் தெளிவாய் எடுத்துரைக்கின்றார்.

"சிலப்பதிகாரம் மிக அரிய சரித்திரச் செய்திகளை உடையது. தமிழ்நாட்டு அரசனாகிய செங்குட்டுவன் வடநாடு சென்று, வடவேந்தர்களை வென்று, கண்ணகியின் படிமச்சிலை கொணர்ந்த செய்தி மிக்க விம்மிதத்தை உண்டாக்கியது. அன்றியும், சங்க காலத்தை நிர்ணயிப்பதற்குச் சிலப்பதிகாரம் மிகவும் முக்கியமான ஆதாரமாக இருக்கிறது. தமிழ்நாட்டுச் சரித்திர ஆராய்ச்சியில் வல்ல பலருடைய கவனத்தை அந்நூல் கவர்ந்தது." [2]

**நகைச்சுவை**

சிலப்பதிகார நூலின்கண் உள்ள சில பகுதிகளைக் கல்லூரிகளில் பாடமாய் வைத்திருந்ததைச் சுட்டும்போது ஒரு செய்தியை இவர் நகைச்சுவையாய்க் கூறுகிறார். கல்லூரியில் இந்திரவிழவூரெடுத்த காதை பாடமாய் வைக்கப் பட்டிருந்தது. அப்போது சிலப்பதிகாரச் செய்திகளைத் தெரிந்துகொள்வதற்கு வேறு துணைக்கருவிகள் இல்லை. அதனால்,

'இந்திர விழவினை ஊர் எடுத்த காதையா? இந்திர இழவூரெடுத்த காதையா? என்றுகூட அறியுமாறில்லை' என எழுதுகிறார்.

இவ்வாறு குழப்பம் நேரிட்டது போல் நகைச்சுவையாகக் கூறியது அக்காலத்தில் பெரும்பான்மையான தமிழாசிரியர்கள் வேறு துணைக் கருவிகள் இன்றித் தவிக்கும் நிலை இருந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

**மணிமேகலை**

'மணிமேகலை'க் காப்பியத்துக்குத் தாமே அரியதொரு குறிப்புரை எழுதிப் பதிப்பித்தார், உ.வே.சா.

குறிப்புரை என்று கருதாமல் தம் முழு உழைப்பையும் அதற்கு நல்கியுள்ளார். குறிப்புரைகள் எழுதுவதன் வாயிலாகத் தாம் ஒரு சிறந்த

1. என் சரித்திரம் பக். 936, 937.
2. என் சரித்திரம் பக். 974.

பதிப்பாசிரியர் என்பதை நிறுவியுள்ளார். பிற்காலத்தில் இந்நூலை ஆராயப் புகுவோர்க்கு உதவும் அரிய ஆய்வுச் செய்திகள் நிறைந்த கலைக் களஞ்சியமாகவே இக்குறிப்புரை விளங்குகிறது. டாக்டர் அவர்களது நுண்மாண் நுழைபுலனையும், அரிய நினைவாற்றலையும், அறிவியல் நியதியோடு கூடிய ஆய்வு நெறியையும் இக்குறிப்புரை வெளிப்படுத்துகிறது.

தொடக்கத்தில் நூலின் இறுதியில் வைக்கப்பட்டிருந்த குறிப்புரை பின்னர் மூலத்தின் கீழே அவ்வப் பக்கத்தில் அடிக்குறிப்பாய் அமைந்து அணி செய்கிறது. நூலினுள் உள்ள உவமை விளக்கம், மரபுச் செய்திகள், புராணக் கதைகள், வரலாற்றுச் செய்திகள் ஆகியவை சுட்டி விளக்கமும் தரப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாகச் சில:

*1.* ஏது நிகழ்ச்சி : கன்மங்களாகிய காரணங்கள் தத்தம் பயனைக் கொடுத்தற்குத் தோற்றுதலை 'ஏது நிகழ்ச்சி' என்பது பௌத்த நூல் வழக்கு.

இதனை 'ஹேதுப்ரபவதர்மம்' என்பர் *(மணி: 3-4)*

*2.* இலவந்திகை : இலவந்திகை யந்திரவாவி. "நிறைக்குறின் நிறைத்துப் போக்குறிற் போக்கும் பொறிப்படை யமைந்த பொங்கில வந்திகை" *(பெருங். 1.40:311-312)* இலவந்திகை - நீராவியைச் சூழ்ந்த வயந்தச் சோலை; அஃது அரசனும் உரிமையுமாடும் காவற் சோலை *(சிலப். 10: 30-31)* என்பர் அடியார்க்கு நல்லார் *(மணி: 3-45)*

*3.* சம்பாதி : சடாயுவினுடன் பிறந்தவன். காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகிலுள்ளதும் சம்பாதிபுரமென்று வழங்கப்படுவதுமாகிய புள்ளிருக்குவேளூர் இறைவனை, ஒரு யோசனை தூரத்திலிருந்து பூக்கொணர்ந்து சம்பாதி பூசித்தானென்று தெரிதலால் அவன் பூக்கொய்த வனம் சம்பாதி வனமாய் இருத்தல் கூடும் என்று யூகிக்கப்படுகின்றது. *(மணி. 3:54)*

*4.* பதுமபீடம் : மணிச்சுடர் ஒளி விரிந்த தாமரைப் பீடிகை - மாணிக்கச் சோதி பரந்த பதுமபீடம் என்றது, புத்தன் பாத பீடத்தை. புத்தன் பாதத்தை மணிபத்மம் என்றலும், அதனை வழிபடுவோர் அதுபற்றி 'ஓம்மணி பத்மேஹூம்' என்ற மந்திரத்தைச் செபித்தலும் பௌத்த சமய மரபு. *(மணி. 3:65-66)*

*5.* ஐம்படைத்தாலி : காத்தற்கடவுளான திருமாலின் சங்கம், சக்கரம், கதை, கட்கம், சாரங்கம் என்னும் ஐந்து ஆயுதங்களின் வடிவமாக அமைப்பது. இதனைப் பஞ்சாயுதமென்றும் வழங்குவர். ஐந்தாவது நாளில் பிள்ளைகளுக்கு இதைத் தாரணம் செய்வது மரபென்றும், க்ருஹிய ரத்நம் என்னும் வட நூலில் இதற்கு விதி உள்ளதென்றும் கூறுவர்.

"அமளி துஞ்சும் ஐம்படைத் தாலிக்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்" *(7:56-7)*

என்பர் பின்னும்.

இத்தகைய உரை விளக்கத்தை நூல் முழுவதும் காணலாம்.

**பண்பாட்டுச் சின்னம்**

அரும்பத அகராதியில் பண்பாட்டுக் கூறுகளையும், இசை நாடகத் தொடர்பான செய்திகளையும் விளக்கிச் செல்லுகின்றார்.

'பத்தினி இல்லாதவர் பல தருமங்களைச் செய்தாலும் தேவலோகம் அடையார்' *(மணி. 479).*

'பிணங்களைச் சும்மா போடுவர், பாரசீகர்; இவர்களுக்கு அக்கினி தெய்வமாதலின் பிணங்களைச் சுடுவதில்லை' *(மணி. 484)*

**சமயக் கலைச்சொல் விளக்கம்**

மணிமேகலை பௌத்தக் காப்பியம். அதில் இடம் பெற்றுள்ள சமயக் கலைச்சொற்களை இவர் விளக்கும் திறம் அருமையானது.

*1.* அசுகுல வேதனை *:* துக்க அறிவு; பஞ்சஸ்கந்தங்களுள் ஒன்றாகிய வேதனையின் பகுதி மூன்றனுள் ஒன்று *(மணி பக். 401)*

*2.* அரூபப்பிரமர் *:* உலகம் முப்பத்தொன்றனுள் *28*ஆவதான ஆகாசா நந்தியாயதன லோகம் முதலிய நான்கு உலகங்களிலும் முறையே தங்கும் நான்கு வகைப் பிரம கணங்கள். இவர்களைத் தியானம் ஐந்தனுள் ஐந்தாவதில் தேறியவர்கள் என்பர். *(மணி. பக். 405).*

**பெருங்கதை**

சிந்தாமணிக்கு அடுத்தபடியாக ஐயர் பதிப்பித்த பெருங்காப்பியம், பெருங்கதை. இந்நூலைப் பின்வருமாறு இவர் அறிமுகப்படுத்துவர்:

"பெருங்கதை நூலாசிரியர் கொங்குவேளிர், கொங்கவேளிர், கொங்கு வேள் எனப்படுவர்; நூல் மாக்கதை, கதை, உதயணன் கதை, கொங்குவேள் மாக்கதை எனப்படும்; இதன் சமயம் சைனம். இறைவழிபாடு, கல்வியின் பெருமை, நட்பின் சிறப்பு, குடிகளின் கடமை முதலானவற்றின் சிறப்புணர்த்துவது இந்நூல்." [1]

**மூல நூல் சுட்டல்**

மூல நூல் பற்றிய சிந்தனை பெருங்கதை முகவுரையில் இடம் பெறுகிறது. பெருங்கதையின் மூல நூல் வடமொழியில் துர்விநீதன் இயற்றிய

---

*1.* பெருங்கதையின் மூலமும் உரையும் உ.வே.சா. பதிப்பு பக். *25.*

'பிருகத் கதா' என முகவுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். எனினும், இதுபற்றிய விளக்கத்தையும், பெருங்கதை நூல் தொடர்பான விவரங்களையும், நூலைப்பற்றிய சில குறிப்புகள் என்ற பகுதியில் விரித்துரைக்கின்றார்.

குணாட்டியர் நூல் சைவச் சார்புடையதாதலின் கதைக்கு அந்நூல் மூலம் அன்று; கி.பி. 6ஆம் நூற்றாண்டில் துர்வீநீதன் செய்த நூலே இதற்கு மூலம் என விளக்குவர். நூல் எழுந்த காலமும், கதை நிகழ்ந்த காலமும் ஒன்றாதலின் இதன் வேறு கதை மொழியிலிருந்து வந்ததில்லை [1] எனத் தெளிவுறுத்துவர்.

**துர்விநீதன்**

பெருங்கதையின் மூல நூல் ஆசிரியர்களைப்பற்றி ஆராய்ச்சி யாளரிடையே கருத்து வேற்றுமை உண்டு. "இந்த நூலை முதலில் பைசாச பாஷையில் இயற்றிய குணாட்டியரும், வடமொழியில் இயற்றிய துர்விநீதன் என்னும் அரசனும், தமிழில் இயற்றிய கொங்குவேளிரும் ஒருவரே என்று உபசார வழக்குப்பற்றி இங்ஙனம் கூறப்பட்டது என்பாரும் உளர் என இவரே அதைக் குறிப்பிடுவார். எனினும் பெருங்கதை முதற்பதிப்பில் உள்ள 'கங்கநாடும் சைனமதமும்' என்ற பகுதியில் "கி.மு. 50, 60இல் உச்சைனி முனிவர் பத்திரபாகு என்பார், நாடு வற்கடம் பூண, சைன முனிவர்களை வேறிடம் செல்லக் கட்டளையிட்டார். அவர்கள் பல தேயம் சென்று பின் 'தவள ஸரோவரம்' அல்லது 'சிரவணபௌகுளம்' என்னும் இடத்திற்குச் சென்று தென்னாட்டில் சமணம் பரப்பினர். அவர்களுள் ஸிம்ஹ நந்தி ஆசாரியர் கங்கராச்சியம் ஸ்தாபித்தார்" என்னும் கோபிநாதராவ் கருத்தை எடுத்துக் கூறி அதற்கு நன்னூல், நேமிநாதம் ஆசிரியர் முதலானோர் கங்கநாடு, கொங்க மண்டலம் முதலியவற்றைச் சுட்டியுள்ளதைச் சான்று காட்டுவர்.

துர்விநீதன், 'அவிநீதன்' என்று கொங்கு மண்டல சதகத்தில் குறிக்கப் பட்டுள்ளான் எனக் கூறி, அச்சதகச் செய்யுளையும் சான்றாய்க் காட்டுவர்.

**காதையின் தொடக்கம்**

ஐயரவர்கள் பெருங்கதையின் ஒவ்வொரு காதையின் தொடக்கத்திலும் அக்காதையின் கருத்துச் சுருக்கத்தைக் கூறியுள்ளார். இக்கருத்துரைகள் நூல் பகுதியைப் புரிந்துகொள்ளப் பேருதவியாய் உள்ளன.

---

1. பெருங்கதையின் மூலமும் உரையும் உ.வே.சா. பதிப்பு பக்.27, 28.

உதயணன் பிரச்சோதனனுடைய விருப்பத்தின்படி, அவனது பட்டத்து யானையின் மதச்செருக்கை அடக்கி ஊர்ந்ததும், அப்பொழுது அவன் அன்பு பாராட்டியதும், உதயணனும் வாசவதத்தையும் ஒருவரை ஒருவர் நோக்கிக் காமுற்றதும் பிறவும் இப்பகுதியில் அறியலாகும். *(1: 32: 1)*

**பொருள் நயம் புலப்படுத்துதல்**

பெருங்கதை மிகக் கடினமான சொற்கள் அடங்கிய பேரிலக்கியம். அதன் பொருள் புலப்பாடே மிகவும் அரிதானது. ஆனால், ஐயரவர்கள் சில சொற்களுக்குப் பொருள் விளக்கம் தருதலேயன்றி அதன் நயத்தையும் புலப்படுத்துகின்றார்.

"காமனும் விழையும் ............ மன்மதன் பிற மகளிரை விரும்பாத மனத்திண்மையன் ஆதலின் காமனும் என்றார்" *(1: 40: 183)*

கண்ணின் வெம்பனி - கண்ணிலிருந்து உண்டாகும் வெப்பத்தை உடைய நீர்த்துளி; காமம், பரிவு, துன்பம் முதலியவற்றால் உண்டாகும் துன்பக் கண்ணீர் வெப்பமுடையதாய் இருக்கும். *(1: 40-91)*

**பாட பேதங்களுக்கும் உரை**

நூலின் பாட பேதங்களைச் சுட்டுவதோடன்றி அவற்றுக்கும் பொருள் கூறிச் செல்லும் முறையை ஐயரிடம் காணலாம். இதனால் எந்தப் பாட பேதமாயினும் தெளிவு ஏற்படுகிறது.

கண்டு அவாம் கதிர்ப்பின: அவாம் - விருப்பம்.

கண்தாவுக் கதிர்ப்பின் என்ற பாடத்திற்குக் கண்கள் அவ்விடத்தைவிட்டு நீங்கச் செய்யாத ஒளியை உடையன எனப் பொருள் கொள்க *(1: 38: 220)*

கள்ளடு மகடூஉ - கள்ளைக் காய்ச்சி விற்பவர்; கள்ளிடு மகடூஉ - கள்ளை விலைக்கு இடுபவள் எனினும் பொருந்தும். *(1:40:70)*.

**பத்துப்பாட்டு**

டாக்டர் ஐயரவர்கள் *1839*ஆம் ஆண்டில் பத்துப்பாட்டைப் பதிப்பித்து வெளியிட்டார். அதன் முகவுரையும் ஆய்வு நூலாகவே விளங்குகிறது.

**மதுரைக்காஞ்சி**

மதுரைக்காஞ்சிக்கு அவர் எழுதியுள்ள குறிப்பு அவரது சிந்தனையின் ஆழத்தைப் புலப்படுத்துகிறது.

"போர் புரிந்து பகைவரை வெல்வதையே கருதித் தன் வாழ்நாளில் பெரும்பகுதியைக் கழித்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பல்வேறு நிலையாமையை அறிவுறுத்தப் புகுந்த ஆசிரியர், முதற்கண்ணே தம் கருத்தைப் புலப்படுத்தாமல் அவன் முன்னோருடைய நல்லியல்புகளையும், அவனுடைய

கொடை, வீரம், நற்குணம் முதலியவற்றையும் எடுத்துப் பாராட்டிப் புகழ்ந்து, பின்பு தம் கருத்தைக் குறிப்பாகச் சில அடிகளிலே புலப்படுத்திப் பின்னர் மதுரையின் பெருவளத்தைப் பரக்கக் கூறியிருத்தலால் அவரது உலகியலறிவையும் மன்னவர்களிடத்து ஒழுகும் முறையையும் புலப்படுத்துகின்றது." [1] என்று எழுதியுள்ளார். கேட்போனின் உள்ளப் பாங்கை உணர்ந்து முறையோடு உணர்த்தும் உளவியல் உத்தி இங்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

**குறிஞ்சிப்பாட்டு**

பத்துப்பாட்டின் மற்றொரு நூலான குறிஞ்சிப்பாட்டிற்கும் இதைப்போன்றே தொடக்கத்தில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

'ஒர் அரசனுக்கு இது கூறப்பட்டதாதலின் அவனுக்கேற்பத் தோழியின் நிலையை' 'இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர் வினையிடை நின்ற சான்றோர் போல,' என விளக்கியும், நாய்களுக்கு உவமை கூறுகையில்,

"மனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பின்
பகைப்புறங் கண்ட பல்வேல் இளைஞரின்"

எனச் சொல்லியும், மாலைக்காலம் பலவகை நிகழ்ச்சிகளை முன்னிட்டுக் கொண்டுவருதலை,

"சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துணைஇய மாலை துன்னுதல் காணூஉ"

என உவமை கொண்டு அறிவித்தும் அரசர்களையும் வீரர்களையும்பற்றிய செய்திகளை ஆசிரியர் எடுத்தாண்டமை பாராட்டற்பாலதாம்.

இவ்வாறு நூலைப்பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கூறும் மரபினைத் தோற்றுவித்தவர் ஐயரேயாவர்.

**ஆர்வத்தைத் தூண்டும் உத்தி**

வரலாற்றை முன்கூறிப் படிப்பவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் உத்தியை இவர் கையாளுகிறார்.

> "பத்துப்பாட்டில் எட்டாவது பாட்டாக இருப்பது குறிஞ்சிப்பாட்டு. அது சங்கப் புலவர்களில் தலைசிறந்தவராகிய கபிலரால் ஆரிய அரசனாகிய பிரகத்தன் என்பவனுக்குத் தமிழின் நயத்தைத் தெரிவிக்கும் பொருட்டுப் பாடப்பெற்றது." [3]

---

1. பத்துப்பாட்டு; முகவுரை, உ.வே.சா. 1931.
2. பத்துப்பாட்டு; முகவுரை, உ.வே.சா. 1931.
3. பத்துப்பாட்டு; முகவுரை, உ.வே.சா. 1931.

என இவர் எழுதுவதால் இதனை அறியலாம். குறிஞ்சிப்பாட்டைச் சுவைக்கத் தூண்டும் உணர்வை இது எழுப்புகிறது.

குறிஞ்சிப்பாட்டின் முழுக்கருத்தையும் சுருக்கமாய் இவர் விளக்கி எழுதுவது சிறப்பான பகுதி. நூலில் இடம் பெறும் பழக்கவழக்கங்கள், வருணனைகள், உளவியல் அடிப்படையிலான பண்பாடுகள் முதலியவற்றை நிரல்பட அமைத்துள்ள பான்மையை எடுத்துக்காட்டுகின்றார். தமிழரின் களவொழுக்கத்தினை எளிய சொற்களில் இனிமையாக விளக்குவது தனி அழகு!

**மாலை வருணனை**

பாடலில் இடம் பெறும் மாலை வருணனையை இவர் எடுத்துக்காட்டுவது எளிமையாய் உள்ளது. கடுமையான பாடலுக்கு எளிமையான விளக்கம்.

"சூரியன் அத்தகிரியிலே மறைகிறான். மான் கணங்கள் மரத்தடியிலே வந்து கூடுகின்றன. பசுக்கூட்டங்கள் வயிறார மேய்ந்துவிட்டுத் தம்முடைய கன்றுகளை நினைந்து விளித்துக்கொண்டே மந்தைகளில் புகுகின்றன. அன்றில் பறவை பனைமரத்தில் இருந்து துணையை அழைக்கின்றது. பாம்பு இரை தேடும் பொருட்டு மணியை உமிழ்கின்றது.

"ஆடு மேய்ப்பவர்கள் எல்லாம் தம்முடைய புல்லாங்குழலில் ஆம்பற் பண்ணை வாசிக்கின்றனர். ஆம்பல் அரும்புகள் இதழ் விரிக்கின்றன. வீடுகளில் எல்லாம் சுமங்கலிகள் விளக்கேற்றுகின்றனர். அந்தணர் அந்திக்கடனைச் செய்கின்றனர்.

"கிளைகளின் மேல் அமைந்த பரண்களில் வேடர்கள் கொடிய மிருகங்களை அச்சுறுத்தக் கொள்ளிக்கட்டையால் தீ உண்டாக்குகின்றனர். மேகங்கள் மலையைச் சூழ்கின்றன. காட்டிலே 'கல்'லென்ற ஒலி உண்டாகின்றது. புள்ளினங்கள் தத்தம் கூடுகளில் வந்து ஒலிக்கின்றன.

"இப்படி மாலை வந்தது."

வருணனைகளை இயற்கையோடு ஒட்டிச் சுவைபட விளக்குவது ஐயருக்குக் கைவந்த கலை.

**குறுந்தொகை**

எட்டுத்தொகை நூல்களுள் ஐயர் பதிப்பித்தவை குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்பன.

இவற்றுள் பல வகையாலும் சிறப்புப்பெற்றது, குறுந்தொகைப் பதிப்பு. இந்த நூலுக்கு மட்டும் தாமே உரை எழுதி, மிகுந்த உழைப்புடன் ஆராய்ந்து

பதினாறு பக்க முகவுரையோடு ஐயர் பதிப்பித்தார். *(1937)* இதில் 'நூலாராய்ச்சி' என்ற தலைப்பில் நூறு பக்கங்களுக்கு மேல் அரிய ஆய்வுப் பகுதி ஒன்றை எழுதி அமைத்திருப்பது நூலின் சிறப்பை மிகுவிக்கின்றது. சங்க இலக்கியத்தை ஆய்வு செய்வோருக்கு வழிகாட்டும் அரிய படைப்பு இது!

**முதல் - கரு - உரி**

டாக்டர் ஐயரவர்கள் சங்க இலக்கியத்தை உணரும் மனப் பான்மையை முதலில் உருவாக்கிவிட்டுப் பின்னரே நூலுக்குள் புகவிடுகிறார். அகப்பாடல் உருவாக்கத்தின் அடிப்படை நெறியாக அமைந்த 'புலனெறி வழக்கு'ப்பற்றித் தொல்காப்பியர் வகுக்கும் இலக்கணத்தையும், அதற்கு இளம்பூரணர் கூறும் விளக்கத்தையும் விளக்குவதோடு முதல் - கரு - உரிப் பொருள்களின் நுட்பமான கருத்தையும் இவர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

"முதல் கரு உரி என்னும் மூவகைப் பொருள் வரையறையும் கவிச்சுவையை மிகுதிப்படுத்தவே போந்ததென்று தோன்றுகிறது. உலகத்தில் குறிஞ்சி நிலத்துள்ளாரே அளவளாவுவது, பாலை நிலத்துள்ளாரே பிரிவது ............ என்ற வரையறை இல்லை. ஆனால், கவிஞன் அமைக்கும் உலகத்திலோ இவ்வரையறைகள் காணப்படுகின்றன. இது நாடக வழக்காகும். நாடகத்தில் அரங்கில் நிகழும் நிகழ்ச்சிக்கு ஏற்பக் களனொன்றை நாடகப்புலவன் அமைத்துக்கொள்வதும், ஓவியப் புலவன் தான் எழுதப்புகும் ஓவியத்திற்கு ஏற்ற நிலைக்களனை எழுதிக்கொள்வதும் போன்றது இது. பிரிவைப் புனையும் ஆசிரியன் துன்ப உணர்ச்சியை மிகுதிப்படுத்த வேண்டி நீரில்லாத வறுஞ்சுரத்தையும் ஒய்ந்த யானையையும் தான் கூறும் நிகழ்வோடு இயைபு படுத்துகின்றான்." [1]

இவ்வாறு கவிதையின் சுவைக்காகப் பாகுபடுத்தப்பட்டிருப்பதை அறிவால் எண்ணிப் பாராமல் உணர்வால் இயைத்துப் பார்க்க வேண்டும் எனச் சிந்தனையைத் தூண்டுவது குறிப்பிடத்தக்கது.

**துறை விளக்கம்**

குறுந்தொகைக்கு உரை எழுதிய ஐயர், ஒவ்வொரு பாடலுக்கு முன்னும் அப்பாடலில் உள்ள செய்தியை அறிமுகப்படுத்துகின்றார். பாடலுக்குத் தலைப்பாய் அப்பாடலில் வரும் பாத்திரத்தின் கூற்று எழுதப்பெற்றுள்ளது. அடைப்புக் குறியினுள் அமைத்துப் பாடலின் துறையைத் தெளிவாய் விளக்கியுள்ளார். இவ்வாறு ஒவ்வொரு பாடலின் பொருளையும் அதன் துறையோடு தொடர்புபடுத்தி விளக்குவதால் படிப்போர்க்குப் பொருட்சிறப்பு நன்கு புலனாகின்றது.

---

1. குறுந்தொகை உ.வே.சா. பதிப்பு *(1933)* பக். *18, 19*. அண்ணாமலை நகர்.

எடுத்துக்காட்டாய்க் 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் இரண்டாம் பாடல்.

இப்பாடலின் தலைப்பில்,

"இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவியின் கூந்தல் இயற்கை மணம் உடையதென்பதைத் தலைவன் வண்டை வினாவுதல் வாயிலாகப் புலப்படுத்தி நலம் பாராட்டியது". அப்பாடலின் துறை எனக் குறிப்பிட்டு அதன் விளக்கத்தைப் பாடலின் அடியில் தருகின்றார்.

'இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற தலைமகன், தலைமகளை நாணின் நீக்குதற்பொருட்டு மெய் தொட்டுப் பயிறல் முதலாயின அவள்மாட்டு நிகழ்த்திக் கூடித் தனது அன்பு தோற்ற நலம் பாராட்டியது' என்று பொருள் தொடர்பு, துறையுடன் பொருந்துமாறு விளக்குகிறார்.

இப்பாடல்களின் தொடர்கள் அல்லது சொற்களுக்கு மேற்கோள்கள் பலவற்றைக் காட்டி விளக்கம் தந்திருப்பதால் பாடலின் சுவையை அனுபவிக்க முடிகிறது.

"கொங்குதேர் வாழ்க்கை என்பது இளவேனிலாயிற்று, தும்பி கொங்கு தேரும் காலம் அதுவாதலின்."

**கூதிர்ப்பருவம்**

குறுந்தொகை நூலாராய்ச்சிப் பகுதியில் ஐவகை நிலச்செய்திகள் என்ற தலைப்பில் எழுதியுள்ள கருத்துகள் சிறப்பானவை; வரையறையும் விளக்கமும் உடையவை. ஒவ்வொரு பெரும் பொழுதும், சிறுபொழுதும் பாடலில் எந்தெந்த வருணனைக் கூறுகள் வாயிலாகப் படைக்கப் பெற்றுள்ளன என விளக்கப் பட்டுள்ளது. கூதிர்ப்பருவம் பற்றிய ஒரு குறிப்பு பின்வருமாறு அமைந்துள்ளது:

"ஐப்பசி கார்த்திகை மாதங்கள் கூதிர்க்காலம். இப்பருவத்தில் குளிர்காற்று வீசும். மழை பெய்த பின் எஞ்சிய துளிகளை மேகம் துளிக்கும். அதனைச் 'சில பெயல்' என்பர். இப்பருவத்தில் கரும்பு பொதியவிழும். ஈங்கைக் கொடி மலரும். கூதிர்ப் பருவத்தில் வீசும் வாடையின் குளிரினால் மக்கள் நடுங்குவர். விலங்குகளும் பறவைகளும் துன்புறும். இக்காலத்தில் தலைவரோடு இருத்தலைத் தலைவியர் விரும்புவர்.' [1]

**தென்றல்**

கூதிர்ப்பருவம் பற்றிய விளக்கத்தை எழுதியவர், பொழுதுகளோடு தொடர்புடைய காற்று எவ்வாறு இந்நூற்பாடல்களில் வருணனை

---

1. பத்துப்பாட்டு; முகவுரை, உ.வே.சா. 1931.

பெறுகிறது என்பதைக் கூறும் பகுதிகள் நயம் பொருந்தியவை. தென்றல் காற்றைப்பற்றி எளிமையாய் அறியும்படி இவர் தரும் விளக்கம்:

"பெரும் பொழுதுகளில் வீசும் காற்றுகளில் சில வகை உண்டு. தென்திசை யிலிருந்து வரும் காற்றைத் 'தென்றல்' என்பர். 'தென்றல்' என்ற சொல் இந்நூலில் வராவிடினும் 'அசைவளி' என்னும் பெயரில் அது குறிக்கப்படுகிறது. மெல்லென நடத்தலை அசைதல் என்பர். மெல்லென வருவதாதலின் தென்றல் அப்பெயரை உடையதாயிற்று. இக்காரணத் தினாலேயே மந்தமாருதம் என்ற பெயர் அதற்கு வடமொழியில் அமைந்தது. இக்காற்றை இளவேனிற்குரியதாய்க் கூறுவர்" [1]

**குறுந்தொகையில் உ.வே.சா. அணுகுமுறை**

காலத்திற்கேற்ப மாற்றமும் வளர்ச்சியும் பெறுவது கலை என்பர் அறிஞர். இலக்கியக் கலையும் அத்தகையதுதான். காலம் மாறுகிறது. கருத்துகள் மாறுகின்றன. இலக்கிய உத்திகளும் அவற்றிற்கேற்ப மாறுகின்றன. இம் மாற்றங்களை ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றனர் திறனாய்வாளர்கள். இவர்கள் கையாளும் முறைகளுள் அணுகுமுறையும் ஒன்று.

இலக்கியங்களை முழுமையாகப் பயின்று, அவற்றை ஆராய்ந்து சில முடிபுகளைக் காண முயலும் ஆய்வாளர்கள் மேற்கொள்ளும் முயற்சியே அணுகுமுறை எனப்படும். இத்தகைய அணுகுமுறைகளை டாக்டர் ஐயரவர்கள் குறுந்தொகையில் கையாண்டுள்ளார். சங்கநூல் செய்யுள்களின் போக்கையும், அவற்றுக்கு உரையாசிரியர்கள் ஆங்காங்கு விளக்கம் தரும் மரபுகளையும் மனத்தில் கொண்டு இவர் குறுந்தொகை செய்யுள்களுக்கு உரை கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**பன்னிரு நிலை**

கூற்று, கூற்று விளக்கம், மூலம், பிரதிபேதம், பழைய கருத்து, ஆசிரியர் பெயர்கள், பதவுரை, முடிவு, கருத்து, விசேடவுரை, மேற்கோளாட்சி, ஒப்புமைப் பகுதி என்னும் பன்னிரு நிலைகளில் இவரது குறுந்தொகை உரை அமைந்துள்ளது.

''பொருளில் கருத்துச் செல்வதற்கும், தொல்காப்பியத்தில் கூற்றுவகையாகச் சூத்திரங்கள் வகுக்கப்பட்டிருத்தலுமே இங்ஙனம் அமைக்கும் கருத்தை உண்டாக்கியது என இவர் கூறும் காரணம் கருதத்தக்கது.

**மூல பாட அணுகுமுறை (Textual Approach)**

குறிப்பிட்ட ஒரு மூல நூலில் பாடபேதங்கள் மிகுதியாய் வளர்ந்து பெருகிவிட்ட நிலையில் அம்மூலநூலின் சொல்லையும் பொருளையும் நன்கு

---

*1.* பத்துப்பாட்டு; முகவுரை, உ.வேசா. *1931.*

ஆராய்ந்து, இன்ன இடந்தான் இன்ன புலவரால் அல்லது கவிஞரால் அல்லது கலைஞரால் கருதப்பட்டது என்பதைக் கண்டறியத் திறனாய்வாளர்கள் கையாளுகின்ற முறையே மூலபாட அணுகுமுறை எனப்படும்.[1]

**விளக்க முறை அணுகு முறை**

"படைப்பவரின் படைப்புக் கருவூலத்தைத் திறந்து காட்டிப் படிப்பவர்க்குப் பல செய்திகளை நன்கு தெளிவுறுத்தவும், படைப்பினுள் அமைந்துள்ள பலப்பல கூறுகளைப்பற்றி விளக்கிச் சொல்லுதற்கும் திறனாய்வாளர் மேற்கொள்ளும் முறையே விளக்க முறை அணுகு முறை" என்பர்.

"பயில்வோரின் இரசிகத் தன்மையின் எல்லைகளை விரிவுபடுத்துவதே இவ்வகையின் தலையாய நோக்கம்"[2] என்பார், கி.எல். சாஹ்னி.

இம்முறையை ஐயர் இந்நூல் முழுவதிலும் பின்பற்றியுள்ளார். தலைமகள் தேர்ப்பாகனுக்குக் கூறுவதாக வரும் "சேயாறு செல்வா மாயின் இடர்நின்று" *(குறுந்.400)* எனத் தொடங்கும் பாடலில் வரும் "புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்" என்ற தொடருக்குப் 'புதிய வழியை உண்டாக்கிய தேர்ப்பாகனே,' எனப் பொருள் எழுதியதோடு, "செல்வதற்குரிய வழி முரம்பில் இன்றியேயும் புது வழியையுண்டாக்கிச் சென்றானென்றது பாகனது ஆற்றலைக் கூறியபடி. பழைய வழியே செல்லின் நீட்டிக்குமென்று கருதிப் புது வழிப்படுத்தலின் மதியுடை வலவோய் என்றான்" எனவும் விளக்குகிறார்.

**உளவியல் அணுகுமுறை**

இலக்கியம் படைத்த ஆசிரியன் நனவிலி மனக் கருத்துகளையும் (Unconscious Intensions), கற்பனைப் பாத்திரங்களின் நோக்கங்களையும் உளவியல் அடிப்படையில் ஆராய்ந்து விளக்குவதே இம்முறையின் நோக்கம். உளவியல் அறிவை இலக்கியக் கருத்துகளோடு பொருத்தி விளக்க முற்படுவது இவ்வணுகுமுறை.

படைப்பாளனின் கருத்தையும் நோக்கத்தையும் நன்கு ஆராய்ந்து அவன் எண்ணத்தின் உட்பகுதி இன்னதெனப் பல இடங்களில் இவர் கூறிச் செல்வதைக் காணலாம். இன்றைய திறனாய்வாளர்களைப் போலத் தனித்தனியே இன்ன அணுகுமுறை எனக் குறிக்காவிடினும் உருவ இயல் அணுகுமுறை, உளவியல் அணுகுமுறை, தொன்மவியல் அணுகுமுறை, சமூகவியல் அணுகுமுறை என்பன போன்ற பல அணுகுமுறைகளை இவர்

---

*1.* பாலசந்திரன். சு., இலக்கியமும் திறனாய்வும், ப.*38.*

*2.* பாலசந்திரன். சு., இலக்கியமும் திறனாய்வும், ப.. *32-35.*

உரைகளில் காண முடிகிறது. இன்றைய திறனாய்வாளர்களுக்கு இவ்வுரை ஆய்வுத் தளமாய் அமையுமென்பது திண்ணம்.

**உவமை விளக்கம்**

குறுந்தொகையில் வரும் சில உவமைகளுக்கு விரிவான விளக்கம் தருகின்றார். இதனால் அவ்வுவமையின் முழுமையான பொருளை உணர்ந்து சுவைக்க இயலுகின்றது.

சிறைக்குடி ஆந்தையார் பாடிய,

"கடுஞ்சுரை நல்லான் நடுங்குதலைக் குழவி
தாய்காண் விருப்பின் அன்ன
சாஅய்நோக் கினளே மாஅயோளே" *(குறுந். 132)*

என்னும் பாடலில் அமைந்துள்ள உவமையின் நுட்பத்தைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

"கன்று பசுவைப் பார்த்திருத்தலைப் போன்ற விருப்புடையளாதலினாலும், மனங்கவரும் இயல்பினள் ஆதலினாலும் அவளை மறந்து அமைதல் அரிது என்று தலைவன் கூறினான். ஈன்றணிமையை உடைய நடுங்குதலைக் கன்றைத் தலைவிக்கு உவமை கூறினான்; அணிமையிலே முதன் முதல் கண்டு நெஞ்சு கலந்தவனாதலின்."

உவமையின் அடையைப் பொருளோடு பொருத்தி நுட்பத்தை எடுத்து விளக்கும் திறன் பாராட்டுதற்குரியது.

தலைமகன் தூது கண்டு கிழத்தி தோழிக்குக் கூறும் பாடலில் வருவது பின்வரும் உவமை.

"நாடன் தீதில் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்.
வந்தன்று வாழி தோழி நாமும்
நெய்பெய் தீயின் எதிர்கொண்டு
தான்மணந் தனையமென விடுகள் தூதே" *(குறுந். 106)*

இவ்வுவமையை உ.வே.சா. அவர்கள் "மணந்த காலத்தை நினைவுகூர்ந்த தலைவிக்கு அந்நினைவின் மிகுதியே நெய்பெய் தீயை உவமை கூறச் செய்தது" என்று விளக்குகிறார்.

**சொல் நயம்**

சங்கப்பாடலில் சொற்கள் செறிவாய் நிற்கும். அவற்றில் நுட்பமான கருத்துகள் அமைந்திருக்கும். சில சொற்களின் பொருள் இக்காலத்தில் விளங்காதிருக்கும். அவ்வாறான சொற்களுக்கெல்லாம் பல நூல்களையும் ஆராய்ந்து, பொருள் உணர்ந்து நயம்பட விளக்குவது இவர் இயல்பு. எடுத்துக்காட்டாய்,

"நள்என் றன்றே யாமம் சொல்அவிந்து
இனிதுஅடங் கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை உலகமுந் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே" *(குறுந். 6)*

என்ற பாடலுக்கு, "மாக்கள் ஐயறிவுடையோர், தாய் முதலியவர்களையே மாக்கள் எனப் புலவர் குறித்தார். தலைவியின் துயரை அறியும் ஆற்றல் இல்லாதவர் மாக்கள்தாமே! அதனால் மாக்கள் எனக் குறித்தார்" என விளக்கம் தருவர். மேலும் "ஓர் யான் எனப் புலவர் கூறியமையும் சிந்தனைக்குரியது. உடன் இருந்து துயரத்தை ஆற்றக்கூடிய தோழியும் தன் கடமை மறந்து தூங்கினமையால் தான்மட்டும் தனித்து விடப்பட்டாளாம் தலைவி! அதனால் 'ஓர்யான்' என அவளே குறிப்பதாகத் தேர்ந்த சொல்லைக் கையாண்டார் புலவர் பதுமனார்" என நயமுற எழுதுவார்.

'நள்' என்ற சொல்லை விளக்கும்போது பல உரைச்சான்றுகளைக் காட்டுவர். 'நள்' என்ற சொல்லும் இங்கே 'செறிந்த' என்னும் பொருளில் கையாளப்பட்டுள்ளது. ஆனால், இதற்குப் பல பொருள்கள் உள்ளன என அவற்றைச் சுட்டி, 'செறிந்த' என்னும் பொருளே ஏற்றம் உடைத்து என நிறுவுவார்.

'நள்' - நளி என்னும் உரிச்சொல் ஈறு திரிபு செறிவின்கண் வந்த தென்பர் அடியார்க்கு நல்லார் *(சிலப்பதி-பதி. 41)* நள்ளென்னும் ஓசை உடைத்தாயிற்று என்னுமாம் *(நெடுநல்-186); (புறநானூறு-149: 1-2 உரை)* நள் - நடுவுமாம்; நண்பகல் என்புழிப் போல. இவ்வாறு பல் பொருள் அமைந்த குறுந்தொகைச் சொற்களை எல்லாம் சான்று தந்து விளக்கிச் செல்வர்.

**ஞாழல்**

ஞாழல் என்ற சொல் குறுந்தொகையில் ஐந்து பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது.

"ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்" *(குறுந்: 50.1)*

தாவர விளக்கமாய் ஞாழல் குறித்து இவர் கூறுவது: "இது நெய்தல் நிலத்துக்குரிய மரம்; கடற்கரையோரத்தில் வளர்வதாகலின் இதன் வேரில் நண்டுகள் வளையமைத்து வாழும். புன்னையும் இம்மரமும் சேர்த்துக் கூறப்படும். இதன் மலர் சிறிய வடிவினது. அது வெண்சிறு கடுகையும் ஆரல் மீன் முட்டையையும் போலத் தோற்றும். அம்மலர் தண்ணிய நறுமணம் உடையது." இவ்வாறு ஆரல்மீன் முட்டையை உவமை கூறியதற்கு, "ஞாழலினது பூ ஐயவி போன்றதென்று கூறுதலாலும் *(குறுந்: 50.1)* ஐயவிக்கு ஆரல் முட்டையை உவமை கூறுதலாலும் *(புறநா. 34: 2: 2)* இங்கே சினை என்றது ஆரல்மீன் முட்டையை என்று கொள்க" எனச் சான்று தந்து நிறுவுவர்.

**ஆரியர் கயிறாடு பறை**

ஆரியர் கயிறாடு பறை என்ற தொடரின் சொற்களைப் பகுத்து, அகராதியில் அமைத்து விளக்குகின்றார்.

ஆரியர் - ஆரியக் கூத்தர்

கழைக் கூத்து - கழையை நட்டுக் கயிறு கட்டி அதன் மேல் கூத்து ஆடுவது.

ஆரியக் கூத்தர் கழையிற்கட்டிய கயிற்றின்மேல் நின்று ஆடும்பொழுது கொட்டப்படும் பறை என்பர்.

**யானையங்குருகு**

குறுந்தொகையின் *34* ஆம் பாடலின் 'யானையங்குருகு' என்ற பறவை கூறப்படுகிறது.

"முனாஅது யானையங் குருகின் கானலம் பெருந்தோடு"

இதனை 'வண்டாழ்ங்குருகு' என்பர் நச்சினார்க்கினியர். இப்பறவை குறித்து உ.வே.சா. தரும் விளக்கம் சிறப்புடையது.

"யானையங்குருகு - இதனை வண்டாழ்ங்குருகென்பர் நச்சினார்க்கினியர் *(மதுரைக்-674 உரை)* திருவோண நட்சத்திரத்திற்குரிய புள்ளாகச் சோதிட நூலார் கூறுவர். "குஞ்சரக் குரல குருகு" என ஒரு பறவை அகநானூற்றில் *(145:15)* கூறப்படுகிறது. அக்குருகே யானையங்குருகாயின் யானையைப் போன்ற குரலுடைமைபற்றி இப்பெயர் பெற்றதென்று கொள்வதற்கு இடமுண்டு. ஆனைச்சாத்தன் என்னும் பறவை *(திருப்பாவை)* இது போலும்.

நச்சினார்க்கினியர் உரையால் புகழ் பெற்றமை போன்று குறுந்தொகை உரையால் தனிப்புகழ் பெற்றுள்ளார், டாக்டர் உ.வே.சா.

**புறநானூறு**

ஐயரவர்கள் பதிப்பித்த எட்டுத்தொகை நூல்களுள் குறுந்தொகைக்கு அடுத்த சிறப்பு நிலை பெறுவது புறநானூறு. முதன் முதலில் இதைப் பதிப்பித்தவர் ஐயர்.

புறநானூற்றைக் கண்டுபிடித்து இவர் பதிப்பித்திராவிடில் தமிழ்நாட்டின் அரிய வரலாறுகள் பல புதையுண்டிருக்கும். தமிழ்நாட்டின் பண்டைக் கால வேந்தர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள், புலவர்கள் போன்றாரது வரலாறுகளையும், தமிழர் நாகரிகப் பண்பாட்டையும், வீரச் செயல்களையும் அறியவுதவும் வரலாற்றுக் களஞ்சியமாய்த் திகழ்வது இந்நூல். இந்நூலைப்பற்றி இவர் கூறுவது:

"பண்டைக் காலத்தே இத்தமிழ்நாட்டிலிருந்த சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை வேந்தர், சிற்றரசர், அமைச்சர், சேனைத்தலைவர், வீரர் முதலிய பலருடைய சரித்திரங்களும், கடை ஏழு வள்ளல்களின் சரித்திரங்களும், கடைச் சங்கப் புலவர் பலருடைய வரலாறுகளும், அக்காலத்துள்ளாருடைய நடை முதலியனவும், இன்னும் பற்பலவும் இந்நூலால் நன்கு புலப்படும். இந்நூற் செய்யுள்களால் பாடப்பட்டவர்கள் ஒரு காலத்தாரல்லர்; ஒரு குலத்தாரல்லர்; ஒரு ஜாதியாரல்லர்; ஓரிடத்தாருமல்லர்; பாடியவர்களும் இத்தன்மையரே. இவர்களில் அந்தணர் சிலர்; அரசர் பலர்; வணிகர் பலர்; வேளாளர் பலர்; பெண்பாலாரும் உளர்." [1]

## புறநானூற்றுச் செய்தி அகவல்

வேறு நூல்களில் செய்யாத ஒரு புதுமையைப் புறநானூற்றுப் பதிப்பில் ஐயர் செய்துள்ளார். புறநானூற்றால் அறியப்படும் செய்திகளைத் தொகுத்து ஒரு வடிவில் அமைத்துத் தந்திருக்கிறார். பல கருத்துகளை உள்ளடக்கியது இப்பாடல்:

"இம்மைப் பயனொடு மறுமைப் பயனைச்
செம்மையின் வகுத்துத் தெரிவிப் பனவும்
அந்தணர் இயல்பைத் தந்துரைப் பனவும்
அரச நீதியை உரைசெய் வனவும் ..........
வீரச் சிறப்பை ஆரத் தெரிப்பவும்
இல்லற மாகிய நல்லறம் உரைப்பவும்"

இவ்வாறு இனிய எளிய நடையில் அமைந்து ஐயரவர்களின் பாவன்மைக்குச் சான்றாய்த் திகழ்கிறது, இவ்வகவல். புறநானூற்றை எய்ப்பினில் வைப்பு எனச் சுட்டுகின்றமை கருதத்தக்கது.

"செப்புநர் எவர்க்கும் எய்ப்பிடை வைப்பாய்
அரும்பெறன் மரபின் பெரும்பயன் தருமே"

## அறநிலை பொருள்நிலை இன்பநிலை

புறநானூறு அறநிலை, பொருள்நிலை, இன்பநிலை என மூன்று பகுதிகளாய் அமைந்திருக்கக்கூடுமென்பது உ.வே.சா.வின் கருத்து. இதைத் தமது பதிப்பு முன்னுரையில் அவர் குறிக்கின்றார்:

"எனக்குக் கிடைத்த ஏட்டுச் சுவடிகளுள் ஒரு பிரதியின் தொடக்கத்தில் 'அறநிலை' என்று வரையப்பெற்றிருந்தது. அப்படியே பொருள் நிலை, இன்பநிலை

---

1. புறநானூறு முகவுரை., உ.வே.சா. பதிப்பு. 1935

என்ற பகுதிகள் எந்த எந்தப் பாடலிலிருந்து தொடங்குமோ எனத் தேடிப் பார்த்தேன்; ஒரு பிரதியிலும் கிடைக்கவில்லை. ஆனாலும் இந்நூல் அறநிலை, பொருள்நிலை, இன்பநிலை என்னும் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பெற்றிருக்க வேண்டுமென்பது இதனால் ஊகித்தறியப்படுகின்றது." [1]

**புறநானூற்றின் பழைய உரை**

புறநானூற்றிற்குத் தாம் பதிப்பித்த உரையேயன்றிப் பழைய உரை ஒன்று இருந்திருக்க வேண்டுமென்பதைச் சான்றுடன் நிறுவுகின்றார், ஐயர். வேறு நூலிலிருந்தும் உரைச்சான்று தருகின்றார்.

*9*ஆம் பாட்டின் விசேடவுரையில் இவர், "யாற்று நீரும் ஊற்று நீரும் மழைநீரு முடைமையால் கடற்கு முந்நீர் என்ற பெயராயிற்று; அன்றி 'முன்னீர்' என்றோதி, நிலத்திற்கு முன்னாகிய நீர் என்றும் உரைப்ப" என்று முந்நீர், முன்னீர் என்பவற்றின் பெயர்க்காரணத்தைக் கூறுகின்றார்.

சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் இவ்விரண்டு காரணங் களையும் மறுத்து, "முந்நீர் - கடல்; ஆகுபெயர்; ஆற்றுநீர், ஊற்றுநீர், மேனீரென இவை என்பார்க்கு, அற்றன்று; ஆற்றுநீர் மேனீராதலானும் இவ்விரண்டு மில்வழி ஊற்றுநீருமின்றா மாதலானும் இவற்றை முந்நீர் என்றல் பொருந்தியதன்று. முதிய நீரெனின், நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும் என்பதனால் அதுவும் மேனீரன்றி அமையாமையின் ஆகாது. ஆனால், முந்நீர்ப் பொருள் யாதோவெனின் முச்செய்கையை உடைய நீர் முந்நீர் என்பது; முச்செய்கையாவன மண்ணைப் படைத்தலும் மண்ணையழித்தலும் மண்ணைக் காத்தலும் என்று கூறுவர். இம்மறுப்பு முற்கூறிய உரைப்பகுதியை மறுத்ததாகக் கொள்ளின் அடியார்க்கு நல்லார்க்கு இவ்வுரையாசிரியர் முற்பட்டவர் என்று கொள்ள இடமுண்டு." [1]

**சிற்றிலக்கியங்கள்**

'சிற்றிலக்கியம்' என்ற சொல் சிறு பிரபந்தங்களைக் குறித்து வழங்கி வருகின்றது. குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத் திரட்டு என்னும் சொல்வழக்குகளால் இதனை அறியலாம்.

"தொடர்நிலைச் செய்யுளைப் பொருள் தொடர் நிலை, சொல் தொடர் நிலை என இரண்டாகப் பகுப்பர் தண்டியாசிரியர். பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என வரும் நூல்களைப் பொருள் தொடர்நிலை எனவும், அந்தாதி, கலம்பகம் போன்றவற்றைச் சொல்தொடர் நிலை எனவும் குறிப்பர்" [1]

---

*1*. புறநானூறு முகவுரை., உ.வேசா. பதிப்பு. *1935*.

*1*. தண்டியலங்காரம் - பொதுவியல் சூ.*2*.

எனவே, பெருங்காப்பியம் சிறுகாப்பியம் தவிர்ந்த ஏனைய நூல்களைச் சிற்றிலக்கியம் எனக் கொள்ளலாம்.

**காலத்திற்கேற்ற இலக்கியம்**

காலப்போக்கிற்கேற்றவாறு இலக்கியப் போக்கும் மாறுதல் இயற்கை. கம்பன் காவியம், வில்லி பாரதம் போன்ற பேரிலக்கியங்களுக்குப் பின்னர் பெருங்காப்பியங்கள் தோன்றவில்லை. ஆனால், சிற்றிலக்கியங்கள் ஏராளமாய்த் தோன்றின.

கலம்பகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ், மாலை, குறவஞ்சி, பள்ளு, பரணி இவை போன்ற பெயர்களையுடைய சிற்றிலக்கியங்கள் பல புலவர்களால் பாடப்பட்டன.

ஐயரவர்களின் இளமைக் காலத்தில் சிற்றிலக்கியங்களே பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தன. அக்காலத்தில் 'மகாவித்துவான்' எனப் பெரும்புகழ் பெற்ற விளங்கிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களுக்குச் சிற்றிலக்கிய அறிவும், புராணநூற் புலமையும் மிக்கிருந்ததாகத் தெரிகிறது. ஆனால், பண்டைத் தமிழ் இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களைப்பற்றி அவர் அறிந்திருக்கவில்லை என வரலாற்றால் அறிகிறோம்.

எண்ணற்ற சிற்றிலக்கியங்கள் மீனாட்சிசுந்தரனாரால் இயற்றப்பட்டன; புராண நூல்கள் பல எழுதப்பட்டன. சிற்றிலக்கியங்கள் இயற்றுவதும், சித்திரக் கவிகள் பாடுவதும் அக்காலப் புலமையின் அளவுகோலாய் இருந்தன. சிறந்த சிற்றிலக்கியம் பாடுபவர் மிகுந்த புலமை உடையவராய் மதிக்கப்பட்டார். எனவே, பிள்ளையவர்களின் பெரும் புலமை என்னும் நீர், முழுக்க முழுக்கச் சிற்றிலக்கியக் கழனிகளிலேயே பாய்ந்து வந்ததில் வியப்பில்லை.

பிள்ளையவர்களிடம் எண்ணற்ற சிற்றிலக்கியங்களையும், புராணங் களையுமே ஐயர் பாடம் கேட்டார். பண்டைத் தமிழ் நூல்கள் கண்டெடுத்துப் பதிப்பிக்கப்படாமையும், சிற்றிலக்கியச் செல்வாக்குமே இதற்குக் காரணம் ஆயின. எனவே, ஐயர் பதிப்பித்த நூல்களில் சிற்றிலக்கியங்களே எண்ணிக்கையில் மிகுந்திருந்தன.

இவர் பதிப்பித்தவைகளுள்

| | |
|---|---|
| புராண நூல்கள் ........... | 14 |
| பிரபந்தத் திரட்டுகள் ........... | 3 |
| கோவை நூல்கள் ........... | 8 |
| உலாக்கள் ........... | 10 |
| தூது நூல்கள் ........... | 8 |
| பிற வகை சிற்றிலக்கியங்கள்........ | 18 |

இவ்வெண்ணிக்கை சிற்றிலக்கிய நூல்களின்மீது ஐயருக்கிருந்த ஈடுபாட்டை விளக்கப் போதியதாகும். இவற்றைப் பதிப்பித்ததோடு பலவற்றிற்கு உரையும் விளக்கமும் எழுதியுள்ளார். அவற்றில் இவரது புலமைத்திறனும் சொல்லாற்றலும் புலப்படுகின்றன. எவரும் கூறாத நயங்களும் சிறப்புச் செய்திகளும் இவர் உரைகளில் பரந்து கிடக்கின்றன. ஆராய்ச்சியாளர்க்கு அவை பெருந்துணை புரிகின்றன.

'நீங்கள் பிள்ளையவர்களிடம் என்ன பாடம் கேட்பீர்கள்?' எனச் சேலம் இராமசாமி முதலியார் கேட்டபோது,

'குடந்தையந்தாதி, மறைசையந்தாதி, புகலூர் அந்தாதி, திருவரங்கத்து அந்தாதி, அழகர் அந்தாதி, கம்பர் அந்தாதி, முல்லை அந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை என்று சொல்லிக்கொண்ட போனேன்' [1] என இவர் எழுதுவது கருதத்தக்கது.

முதன் முதலில் இவர் பதிப்பித்த நூல் வேணுவனலிங்க விலாசச் சிறப்பு என்னும் சிறுநூலேயாகும். அதைப் பதிப்பிக்கும் போது இவர் எழுதிய ஓர் உண்மை இவரது நேர்மையான மனச்சான்றைப் புலப்படுத்துகிறது.........

"பிற்காலத்தில் எவ்வளவோ புத்தகங்களைப் பரிசோதித்து வெளியிடும் வேலையில் ஈடுபட்ட நான், முதன் முதலாகப் பதிப்பித்தது அந்தப் பாடல் திரட்டே. அக்காலத்தில் பதிப்பு முறை சிறிதும் எனக்குத் தெரியாது" [2]

இவ்வாறு தம்மைப்பற்றி நேர்மையாய் எழுதுவோர் மிகமிகச் சிலரே.

**பதிப்பில் நேர்மை**

சிற்றிலக்கியமாயினும் பெருநூலாயினும் ஏட்டுச் சுவடிகளில் உள்ளவற்றை மனம் போனபடி மாற்றாமல், உள்ளதை உள்ளவாறே பதிப்பிக்கும் நேர்மைப்பண்பு இவரிடம் இருந்தது. ஆதாரமின்றி ஏட்டுச்சுவடிச் சொற்களை இவர் திருத்துவதில்லை.

"புராதன தமிழ் நூல்களும் உரைகளும் பண்டை வடிவம் குன்றாதிருத்தல் வேண்டுமென்பதே எனது நோக்கமாதலின் பிரதிகளில் இல்லாதவற்றைச் சுட்டியும், உள்ளவற்றை மாற்றியும் குறைத்தும் மனம் போனவாறு அஞ்சாது பதிப்பித்தேனல்லேன். ஒருவாறு பொருள் கொண்டு பிரதிகளில் இருந்தவாறே

1. என் சரித்திரம் ப. 729.
2. என் சரித்திரம் ப. 450.

பதிப்பித்தேன். யானாக ஒன்றும் செய்திலேன்"[1] என்ற இவரது கூற்று இதனை உணர்த்தும்.

**பல நூல் மேற்கோள்**

ஒரு நூலைப் பதிப்பிக்கும் போது அதற்கு மேற்கோளாய் எண்ணற்ற நூல்களைக் காட்டுதல் இவர் தனித்தன்மை.

திருவாவடுதுறைக் கோவை என்னும் சிற்றிலக்கிய நூலை இரண்டாம் பதிப்பாய் *1926* ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார். இதன் உரைக்கு மேற்கோளாய் *42* நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளதைப் பட்டியல் கூறுகிறது. ஒரு சிற்றிலக்கிய நூலுக்கு இத்துணை மேற்கோள் நூல்கள் காட்டப்பட்டது வியப்புக் குரியது.

**தமிழ்விடு தூது**

ஐயரவர்களால் மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது என்னும் நூல் *1930*ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிடப்பட்டது. இதற்கான ஏட்டுச்சுவடி *1900*ஆம் ஆண்டிலேயே இவருக்குக் கிடைத்துவிட்டது. ஆனால், *30* ஆண்டுகள் ஆராய்ச்சி செய்ததன் விளைவாகவே இது வெளிவந்துள்ளது. இந்நூலுக்காக இவர் உழைத்து ஆராய்ச்சி செய்த திறத்தை இவரிடம் பாடம் கேட்ட ஒருவர் எழுதிய கடிதம் புலப்படுத்துகிறது.[2]

இந்நூலின் *22*ஆம் கண்ணியில் சார்பெழுத்து *240* என இதன் ஆசிரியர் பாடியிருக்கிறார்.

"..............................................................தலைதிரும்பி
ஏற்பமுதல் முப்பதெழுத் தாய்ச்சார் பிருநூற்று
நாற்ப தெழுத்தா நனிபிறந்தாய்"

இவ்வாறு சார்பெழுத்து *240* என்பதற்கான ஆசிரிய வசனம் தொல்காப்பியம் முதலிய நூல்களில் கிடைக்கவில்லை.

சார்பெழுத்துகள் *369* என்ற நன்னூல் கூறுகிறது,

"..............................................சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபான் என்ப"[3]

இவ்வாறு வந்துள்ளதே என ஆராயும் பொழுது இலக்கண விளக்கத்தில் இக்கணக்கு காணப்பட்டது.

---

*1.* சீவக சிந்தாமணி - ஏழாம் பதிப்பு, முகவுரை ப. *7*.

*2.* டாக்டர் உ.வே.சா. சதாபிசேஷக வரலாறு, சென்னை, *1936*, ப.*127*.

*3.* நன்னூல் சூ.*61*.

இதனை உணர்ந்த மாணவர் ஒருவர் இவரிடம், "ஆகவே, தமிழ்விடு தூதின் நூலாசிரியர் இலக்கண விளக்கமுடையார்க்குக் காலத்தால் பிற்பட்டவர் என்ற கொள்ளலாமல்லவா?" என வினவிய போது இவர், "அவசரப்படாதே; இலக்கண விளக்கத்தார் எதனையும் சொந்தமாய்ச் செய்யவில்லை; பல நூல்களில் உள்ள கருத்துகளையும் சூத்திரங்களையும் அப்படியே எடுத்து அமைப்பவர். ஆகையால், அவருடைய சார்பெழுத்துத் தொகைக்கும் வேறு நூலில் மேற்கோள் இருக்கும். எனவே, தமிழ்விடுதூது, இலக்கண விளக்கத்திற்குப் பின்புதான் இருக்கவேண்டும் என்று துணிந்து கூற முடியாது. என்றாலும் அதனை ஒரு பட்சமாய்க் கருதலாம்" என விடையளித்தார்.

நடுநிலையோடு ஆராயும் நேர்மை மனத்தவர் இவர் என்பதை இம் மொழிகளால் அறியலாம்.

**அட்டாதச வருணனை**

மேற்குறிப்பிட்ட இவர் மாணவர், உ.வே.சாவின் ஆய்வறிவை விளக்க மற்றொரு நிகழ்ச்சியையும் கூறுகின்றார். அவரது வாய்மொழியாலேயே இதையும் கேட்கலாம்.

"தமிழ்விடு தூதின் *34*ஆம் கண்ணியில், அட்டாதச வன்னனைகள் என்ற ஒரு குறிப்பு கூறப்பட்டிருக்கிறது. இலக்கணங்களையெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தும் அதற்குரிய மேற்கோள் கிடைக்கவில்லை. மாறனலங்கார உரையாசிரியர் ஒரிடத்தில் பதினெட்டு வருணனையும் எனக் கூறிச் சென்றாரேனும் அவை இவை எனச் சுட்டிக் காட்டினாரல்லர். தண்டியலங்காரம் காப்பிய நிலை பேசுங்காலை பலபல கூறுகின்றது. பதினெட்டென்னும் எண்ணிற்கு வழியில்லை. அச்சூத்திரத்தில் கூறப்படும் பிறவற்றை ஒழித்துப் புனையத் தருவனவாய்க் கூறப்படும் மலை, கடல் முதலியவற்றை எண்ணுகையில் வழக்கம் போலவே சிறுபொழுது ஐந்தெனக் கொண்டு எண்ணினோம். மொத்தம் *17* வருணனைகள் வந்தன. இன்னும் ஒன்றுக்கு வழியில்லை. திடீரென்று, 'இருங்கள்! இருங்கள்! கண்டுபிடித்துவிட்டேன்!', என்றார் எங்கள் குருநாதர்.

"நாங்கள் ஈப்புகுவதும் தெரியாமல் வாயைத் திறந்து அவர்களைப் பார்த்து நின்றோம். அவர்கள் தோளைத் தட்டிக்கொண்டே காலை அசைத்தார்கள்.

'சிறுபொழுதை ஆறாய் வைத்து எண்ணிப் பாருங்கள்!' என்றதுதான் தாமதம் 'அப்பொழுது சரியாகப் பதினெட்டாயின' என்று முறுவலுடன் உள்ளக் களிப்பு வெளியில் குதிக்கக் கூறினோம்.'

---

*1.* டாக்டர் உ.வே.சா. சதாபிஷேக வரலாறு, சென்னை, *1936*, ப*127*.

தமிழ்விடு தூதுதில் இடம் பெற்ற ஒரு தொடருக்கு ஆராய்ந்து விளக்கம் கண்டதால் இவருக்குத் தண்டியலங்கார நூற்பாவுக்கும் அரிய பொருளைக் காண முடிந்தது.

**சிற்றிலக்கியங்களின் பயன்**

சிற்றிலக்கியங்கள் என்று குறைவாய் மதிப்பிடக்கூடாது. அவற்றின் மேல் பெருமதிப்பு வைத்திருந்தார் உ.வே.சா. "பிரபந்தங்கள் பலவற்றை ஒருவன் படித்தாலன்றித் தமிழின் உள்ளுறையாகிய மற்ற பல கொள்ளுதல் அரிதாம்" என்பது இவர் கொள்கை. யாராவது தம்மிடம் பாடங்கேட்க வருவார்களாயின், "முதலில் பிரபந்தங்களைப் பாடம் கேள்" என்பார். தமிழ்விடு தூது முகவுரையில் பிரபந்தங்களைத் தமிழாகிய அரசுக்கு மெய்காப்பாளர்கள் என இவர் கூறியிருக்கிறார்.

**அவரை நிழல்**

தமிழ்விடு தூதின் *153*ஆம் கண்ணியில் அவரை நிழல் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. அத்தொடருக்கு விளக்கம் கண்டறிய ஐயர் எடுத்துக் கொண்ட முயற்சி மிகப்பெரிது. அம்முயற்சியில் நூற்றில் ஒரு பங்கு இருந்தால் கூடக் கம்பராமாயணம் முழுமைக்கும் பொருள் கூறிவிடலாம் என்பர் அவர் மாணாக்கர்கள்.

அவரை நிழல் பற்றி, "நல்ல அவரைக் கொடி படர்ந்த பந்தரின் நிழலில் உள்ளார் அறிவுபோல - அவரை நிழலில் இருப்பவர்களின் அறிவு தேயுமென்பது ஆயுள் நூல் துணிபு.

"உன்னைவிட்டு மற்றொன் றெண்ணாது
அவரை நிழல்பாற் பயிலினு மென்மனமே"
- திருக்குடந்தைத் திரிபந்தாதி-*70*

வடமொழி நைஷத நூலாசிரியர் சரிதத்தானும் இது விளங்கும்" என ஆய்வுடன் விளக்குவது இவரது அறிவுத் திறனை விளக்கவல்லது.

**ஓலைப்பூ**

ஓலைப்பூ என்ற சொல்லின் பொருள் விளக்கத்தையும் இவர் தந்துள்ளார். தமிழ்விடு தூதின் *8*ஆம் கண்ணியில் மட்டோலைப் பூவையார் என்ற சொற்றொடர் வந்துள்ளது. இதன் பொருள் என்ன என ஆராய்ந்து இரத்தினச் சுருக்கத்தில் ஓலைப்பூ என்பது தாழம் பூவைக் குறிக்குமென்பதைக் கண்டறிந்து விளக்கம் தந்துள்ளார்.

**கோவை நூல்கள்**

உ.வே.சா. பதிப்பித்த கோவைப் பிரபந்தங்களில் திருவாவடுதுறைக் கோவை, *(1903)*, கோடீசுரக்கோவை *(1932)*, சிராமலைக் கோவை *(1937)* முதலியன குறிப்பிடத்தக்கவை.

## கோவை - பெயர் விளக்கம்

இச்சிற்றிலக்கியம் 'கோவை' எனப்பட்டதன் காரணத்தை ஐயர் விளக்கு கிறார். பண்டைய தமிழ் அக இலக்கிய நூல்கள் அகப்பொருள் துறைகளைத் தனித்தனியே கூறுகின்றனவேயன்றி நிரல்படக் கூறவில்லை. அகப்பொருட் செய்திகளைக் கிளவிகளாக வகுத்துத் துறைகளாக விரித்து ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி அமையக் கோக்கப்பெற்றுப் பாடப்படுவதாலின் இது கோவை என்னும் பெயர் பெற்றது. அகப்பொருட்குரிய ஐந்திணைகளும் அமைந்திருத்தலின் இஃது 'ஐந்திணைக் கோவை' எனவும் வழங்கப்பெறும் [1] என இவர் தரும் விளக்கம் நுட்பமும் சுவையும் பொருந்தியதாகும்.

"கோவைகள் அகப்பொருட்கோவை எனவும் நானூற்றுக் கோவை எனவும் பெயர் பெற்றன. ஐந்திணையேயன்றிக் கைக்கிளை, பெருந்திணைபற்றியும் இவை அமைந்திருந்தன. ஆண்பால் கைக்கிளையே கூறப்பட்டது. "வறிது நகை தோற்றம் என்னும் துறை கவிக்கூற்றாக உள்ளது. அகப்பொருள் காரணமாக இயற்றமிழாகவும், சந்த வகையில் இசைத்தமிழாகவும், கூற்றுவகையால் நாடகத் தமிழாகவும் விளங்கும் கோவை முத்தமிழே" [2] எனக் கோவை நூல் பற்றி ஆய்ந்து கூறுகிறார்.

## உலா நூல்கள்

தமிழில் வழங்கும் *96* வகைப் பிரபந்தங்களுள் உலாவும் ஒன்று. தலைவன் வீதியில் பவனி வரும்போது அவனைப் பேதைமுதல் பேரிளம்பெண் ஈறான எழுவகைப் பருவ மகளிரும் கண்டு மையல் கொண்டதாய் அமைத்துக் கலி வெண்பாவால் பாடப்படுவது உலாப் பிரபந்தம். இது தொல்காப்பியம் புறத்திணை இயல் *30*ஆம் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையால் அறியப் படுகின்றது.

## உலா மகளிர்

உலாவில் கூறப்பெறும் எழுவகை மகளிரும் குலமகளிர் எனப் பொருந்துமா என்ற ஆய்வை ஐயரவர்கள் நிகழ்த்தியுள்ளார்.

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" *(3:2:30)* என வரும் தொல்காப்பிய நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் கூறும் உரையைச் சான்று காட்டி, இங்குக் குறிக்கப்பட்டவர்கள் உருத்திர கணிகையர் என விளக்குவர். [3]

தமிழ்ப் பண்பாட்டு அடிப்படையில் மகளிர் நிலைபற்றிய இவ்வாராய்ச்சி பாராட்டத்தக்கது. இதற்கு இலக்கியவழிச் சான்றும் காட்டுகிறார்.

---

*1.* கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள், உ.வே.சா. பதிப்பு. *1932.* ப. *12.*

*2.* சிராமலைக் கோவை. உ.வே.சா. பதிப்பு. *1937.* ப. *5.*

*3.* கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள். உ.வே.சா. பதிப்பு *1932.*ப. *213.*

சீவக சிந்தாமணியில் சீவகன் உலா வருகையில் ஆசி கூறிய மகளிரைக் கற்புடையோர் என்றும், அவனைக் கண்டு மயங்கியவரை ஒழிந்தோர் என்றும் நச்சினார்க்கினியர் கூறுவதை எடுத்துக்காட்டுகிறார். அன்றியும், பெருங்கதையில் உதயணன் உலா வரும்போது, உத்தம மகளிர் ஒழியப் பிறர் காமுற்ற நிலையையும் கூறி, இவர்கள் பொதுமகளிரே என நிறுவுகிறார்.

**பரணி நூல்கள்**

பரணி நூல்களுள் பக்தியை வளர்க்கும் நூல்களான தக்கயாகப் பரணி *(1930)*, பாசவதைப் பரணி *(1933)* என்னும் இரண்டும் இவரால் பதிப்பிக்கப்பட்டன.

தொல்காப்பியர்,

"ஏரோர் களவழி யன்றிக் களவழித்
தேரோர் தோன்றிய வென்றியும்" *(3:2:21)*

என நூற்பா அமைத்துப் பரணி இலக்கியத்துக்குப் பாதை வகுத்தார். இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், "நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்துப் போர் அடித்து அதரி திரித்துச் சுற்றத்தோடு நுகர்வதற்கு முன்னே, கடவுட்பலி கொடுத்துப் பின்னர் பரிசிலர் முகந்து கொள்ள வரிசையின் அளிக்குமாறு போல,

அரசனும் நாற்படையையும் கொன்று 'களத்திற்குவித்து எருது களிறாக வாண்மடல் ஓச்சி' அதரி திரித்துப் பிணக்குவையை நிணச்சேற்றோடு உதிரப் பேருலைக்கண் ஏற்றி ஈனா வேண்மாள் இடந்துழந் தட்ட கூழ்ப்பலியைப் பலியாகக் கொடுத்து, எஞ்சி நின்ற குதிரை யானைகளையும் ஆண்டுப் பெற்றன பலவற்றையும் பரிசிலர் முகந்துகொள்ளக் கொடுத்தலாம்", என விளக்குவர். இக்கால இயைபுக்கேற்ப இதனைப் பொருத்திக் கூறுவர், ஐயர்.

ஏர்க்களமும் போர்க்களமும் அறக்களமாய்க் கொண்டிருந்த இயைபு நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாய் மாறவும் தொடங்கின. அதனால் மறப்புகழ் அறப்புகழாய் மாறியது. போர்க்களத்தில் வலிமை வாய்ந்த யானைப் படையின் சிறப்பே பெரிதும் பேசப்படும் நிலை உருவாயிற்று.

அதனால்,

'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி'

என்ற இலக்கணம் தோன்றியது. போர்க்களம் பாடும் போக்கிலும் மாற்றம் ஏற்பட்டுப் பரணி வடிவெடுத்தது.[1]

---

*1.* பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், ப. *69.*

பரணியின் தோற்றம் பற்றி இவர் கூறும் ஆய்வுக் கருத்து சிந்தனைக்கு விருந்தளிக்கிறது.

பாசவதைப் பரணியின் முகவுரையில் இவர் சிறந்த கருத்துகளை வழங்குகிறார். இப்பரணி நூலின் முகவுரை பக்தி, ஞானம் போன்ற உள் தலைப்புகளைப் பெற்று இந்நூலை ஒரு ஞான நூலாய்ச் சித்திரித்துக் காட்டுகிறது.

இப்பகுதியில்,

"பாசவதைப் பரணி பாசத்தைப் போக்கிச் சிவஞானம் அருளிய செயலை உருவக வகையில் அமைத்துப் பாசமன்னனொடு பொருது வென்றதாகப் பாடப்படுகிறது" என்றும். இவ்வாறு பண்புகளை உருவகம் செய்வது திருக்குறளில் உண்டு என்றும் கூறி,

'அழுக்காறு என ஒரு பாவி'
'இன்மை என ஒரு பாவி'
'நாணென்னும் நல்லாள்'

என வரும் தொடர்களைச் சான்று காட்டுகிறார்.

**அந்தாதி இலக்கியம்**

ஐயரவர்கள் அந்தாதி நூல்களுள் திருமயிலைத் திரிபந்தாதி, *(1930)*. சங்கரநயினார் கோயில் அந்தாதி *(1934)*, திருமயிலை மகவந்தாதி *(1935)* என்னும் மூன்றனைப் பதிப்பித்துள்ளார். இவற்றின் முகவுரையில், அந்தாதி பக்தியாலும், நன்றியாலும் தோன்றியது என இந்நூல்களின்வழி அறிய முடிகின்றது [2] எனக் குறிப்பிடுகின்றார்.

நினைவாற்றலைப் பெருக்கிக்கொள்ள அந்தாதியைப் பயிலலாம். என அதன் பயன்பாட்டைக் குறிக்கின்றார். அந்தாதியில் கலித்துறை அந்தாதி, வெண்பா அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, யமக அந்தாதி என்பன போன்ற பல வகைகள் உண்டு என ஆராய்ந்து கூறுகின்றார்.

**குறவஞ்சி**

ஐயர் பதிப்பித்தவற்றுள் இரண்டு, குறவஞ்சி நூல்கள். திருமலை ஆண்டவர் குறவஞ்சியில் பேச்சு மொழிச் சொற்கள் நிறைய வந்துள்ளது குறை எனக் கூறுகின்றார்.

---

1. பாசவதைப் பரணி முகவுரை. உ.வே.சா. பதிப்பு, *1933*. ப. *6*.
2. இராமையர் இயற்றிய திருமயிலைத் திரிபந்தாதி உ.வே.சா. பதிப்பு. *1936*. ப. *1*.
3. சங்கரநயினார் கோயிலந்தாதி, உ.வே.சா. பதிப்பு. *1934*. ப. *2*.

"இலக்கியத்தில் கொச்சை வழக்கு இடம் பெற்றால் மொழியின் நிலைத்த தன்மை சிதையக்கூடும் என்னும் கோட்பாட்டினைக் கொண்டவர் உ.வே.சா. என்பதை இக்கூற்று நமக்குக் காட்டுகிறது.[1] என்பர் ஆய்வாளர்.

## பிரபந்தத் திரட்டுகள்

சிற்றிலக்கியங்கள்மீது பெரும்பற்றுடையவரான ஐயர் மூன்று பிரபந்தத் திரட்டுகளைப் பதிப்பித்தார்.

1. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு *(1910).*
2. சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத் திரட்டு *(1932).*
3. குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு *(1939).*

இவற்றுள் பல சிற்றிலக்கியங்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொன்றன் முன் பகுதியிலும் சிற்றிலக்கிய வகைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அந்தந்த நூல்களைப் படிக்கும் முன்பு அவற்றின் முன்னருள்ள ஐயரின் ஆய்வுக் குறிப்புகளைப் படித்தால் நூல்களைப் படிப்பது எளிதாகிவிடும்.

குமரகுருபரர் பிரபந்த முகவுரையில்,

"தமிழில் அடிப்படையான உணர்ச்சி வருவதற்குப் பிரபந்தங்கள் உதவியாய் இருந்தன" என எழுதியிருப்பது சிற்றிலக்கியங்கள்மீது இவர் வைத்திருந்த மதிப்பைப் புலப்படுத்தும்.

### சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத் திரட்டு

திருப்பனந்தாள் காசி மடத்தில் ஐயரவர்கள் காலத்தில் அதிபராய் இருந்தவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத தேசிகர். இவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் மரபில் வந்தவர். எனவே, இவரது விருப்பப்படி சிவக்கொழுந்து தேசிகரின் பிரபந்தங்களை இவர், குறிப்புரைகள் எழுதிப் பதிப்பித்தார்.

### பிரபந்தங்களின் பெருமை

பிரபந்த நூல்களின் பெருமையை ஐயர் பின்வருமாறு விளக்குவர்:

"கவிஞர்கள் தாம் பிறந்த இடங்களிலும் பழகிய இடங்களிலும் உள்ள தெய்வங்களையும், தம்மை ஆதரித்தோர்களையும் பாராட்டி முறையே பக்தியாலும் செய்ந்நன்றியறிவாலும் தம் உள்ளக் கருத்தை அமைத்துப் பிரபந்தங்களையும் தனிப்பாடல்களையும் இயற்றுதல் மரபு.

---

1. எஸ்.டி. காசிராசன், உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், *1987.* ப.*60.*

பெருங்காப்பியங்களைப் படித்து அறிந்துகொள்ள வேண்டிய செய்திகளைப் பிரபந்தங்களால் எளிதில் அறிந்துகொள்ளலாமென்று அறிஞர் கூறுவர்." [1]

பெருங்காப்பியங்களோடு இவற்றை ஒப்பிட்டு எழுதியிருப்பதிலிருந்து இவருக்குச் சிற்றிலக்கியங்கள்பால் உள்ள மதிப்பு புலனாகிறது.

**வரலாற்று நூல்**

இப்பிரபந்தத்தில் அடங்கிய தஞ்சைப் பெருவுடையார் உலா, சரபேந்திரப் பூபாலக் குறவஞ்சி என்னும் நூல்களுக்கு ஐயர் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரைகள் வரலாற்று நூலைப் போல விளங்குகின்றன. இலக்கியக் குறிப்புகளோடு வரலாற்றுக் குறிப்புகளையும் கலந்து தருவது ஐயர் இயல்பு.

தஞ்சைக் கோயிலில் வயது முதிர்ந்தோராய் இக்காலத்துள்ள அர்ச்சகர் முதலியோர், இராஜராஜன். தஞ்சையில் கற்றளி அமைப்பதற்கு முன்னர்த் திருவாரூர்த் தியாகேசரை உபாசித்துத் தரிசனத்துக்கு அத்தலத்திற்கு அடிக்கடி போய் வந்ததாகவும், தஞ்சையிற்கோயில் அமைத்த பொழுது திருவாரூர் கோயிலிலுள்ள ஏற்பாடுகளையே கைக்கொண்டதாகவும், தஞ்சை நாயக்கர் ஆட்சியில் வந்த காலத்து அவர்கள் வைணவப் பற்றுடையவர்களாய்த் தஞ்சைக் கோயிலைக் கவனிக்காமையினாலே இராஜராஜன் காலத்தும் அவன் மகன் இராஜேந்திரன் காலத்தும் ஏற்படுத்தப்பட்ட வழக்கங்கள் நழுவினதாகவும், மராட்டியர் ஆளுகையில் தஞ்சை வந்த பொழுது அவர்கள் சைவர்களாதலால் சோழர்கள் காலத்து நழுவிய வழக்கங்களைச் செவ்வனே விசாரித்து எழுத்தில் அமைத்துக் கொண்டுவந்து, நழுவிய வழக்கங்களை நடைபெறும்படி செய்ததாகவும், எழுத்தில் அமைத்தது பத்திரம் முதலிய கடிதங்கள் வைத்திருக்குமிடத்தில் இருப்பதாகவும் கூறுகின்றனர். [2]

தஞ்சை சரபோஜி மன்னரைப்பற்றிய வரலாற்றுக் குறிப்பைப் பூபாலக் குறவஞ்சி நாடகத்தின் முன்னுரையில் கூறுகின்றார்.

மகாராட்டிர நாட்டை ஆண்டுவந்த கொற்ற வேந்தராகிய சிவாஜி மன்னருடைய சகோதரரும், வெங்காஜி என்று வழங்கப்பட்டவருமாகிய 'ஏகோஜி' என்பவர் தஞ்சையில் கிபி *1674*இல் மகாராட்டிர அரசை நிறுவினார். [3] அக்காலமுதல் தஞ்சையரசை மகாராட்டிர மன்னர்கள் ஆளத் தொடங்கினர். ஏகோஜிக்குப் பின் ஆண்ட மன்னர்களுள் 'துளஜாஜி' என்பவருக்குப் பிள்ளை யின்மையின் அவர் சரபோஜியைச் சுவீகாரம் செய்துகொண்டார்.

---

*1.* சிவக்-பிரபந்தத் திரட்டு - முகவுரை ப. *1.*

*2.* தஞ்சைப் பெருவுடையார் உலா - நூன்முகம் ப*215.*

*3.* Annual Report of South Indian Epigraphy. 1924.

அப்பொழுது அவரால் இடப்பட்ட பெயரே சரபோஜி என்பது. மகாராட்டிர மன்னர்களுள் இவருக்கு முன் மூன்று அரசர்கள் இப்பெயரை யுடையவர்களாய் இருந்தமையின் இவர் சரித்திர ஆராய்ச்சியாளர்களால் நான்காம் சரபோஜி என்று குறிக்கப்படுவார்.[1]

அக்காலத்தில் தஞ்சையிலிருந்த ஸ்குவார்ட்ஸ் என்னும் பாதிரியார் சரபோஜியே அரசுக்குரியவர் என்பதையறிந்து அவ்வுரிமைக்குரிய நியாயங்களைக் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிருவாக சபையாருக்கு எடுத்துரைத்தார். அவற்றின் உண்மையறிந்த அச்சபையார் *1798*இல் சரபோஜியையே அரசராக்கினார்.[2]

**சரசுவதி மகால்**

தஞ்சை சரசுவதி மகால் பற்றி இவர் எழுதுவது குறிப்பிடத்தக்கது:

பெரிய புத்தகசாலையொன்றை அமைத்து, அதில் தமிழ், தெலுங்கு, வடமொழி, மகாராட்டிரம் முதலிய பல மொழிகளில் பல அச்சுப் புத்தகங்களையும், ஏட்டுச் சுவடிகளையும் தொகுத்து வைத்தார் (சரபோஜி). அது ஸரஸ்வதி மகால் என வழங்கும். அப்புத்தக சாலையில் *22,000* நூல்கள் இருந்தன என கூறுவர்[3]

**அம்மையார் நிழல்**

சிற்றிலக்கியங்களுக்கு எழுதிய குறிப்புரையில் ஆங்காங்கு வரலாற்று நிகழ்ச்சிகளையும் இவர் குறிப்பிட்டுச் செல்லுகின்றார். தஞ்சைப் பெருவுடையார் உலாவில்,

> "நதியுடைக்கோன் முன்னோர் நரைமுதியா ணீழல்
> வதிகின்றோ மென்ன வந்தான் வந்தான்" *(70)*

என்னும் கண்ணிக்குப் பொருள் எழுதும்போது,

"ஸ்ரீ பிரகதீசரது ஆலயம் கட்டப்படுகையில் சிற்பிகளுக்கெல்லாம் உணவு, நீர் முதலியன அளித்த ஒரு முதியாளிடம் தங்கள் நன்றியைக் காட்டுதற்கு அறிகுறியாக அச்சிற்பிகள், அம்முதியாள் விரும்பியபடி, அவள் வீட்டிலிருந்த கல் ஒன்றை விமானத்தில் சிகரத்தின் நடுவில் அமைத்துக் கோயிலைக் கட்டி நிறைவேற்றினார்களாம். ஒருநாள் சோழனது கனவில் பெருவுடையார், 'யாம் கிழவியளித்த நிழலில் உவந்திருக்கின்றோம், எனத் திருவாய் மலர்ந்தருள, சோழன் உண்மையறியாது மயங்கிப் பின்னர் அறிந்தனனென்பது வரலாறு. இது பிரகதீசுவர மகாத்மியத்தில் கண்டது."

---

1. Annual Report of South Indian Epigraphy. 1924.
2. சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, தஞ்சை சரபோஜி மன்னர் சரித்திரம் ப. *285*.
3. சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, தஞ்சை சரபோஜி மன்னர் சரித்திரம் ப. *285*.

**குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு**

பிரபந்தங்கள் அக்காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கையும் அவற்றின் பயனையும் இப்பிரபந்தத் திரட்டின் முகவுரையில் ஐயர் விளக்குவர்:

"தமிழ்நாட்டில் பண்டைக் காலந்தொடங்கித் தமிழ் பயிலும் மாணாக்கர்கள் முதலில் சிறுநூல்களைக் கற்றல் வழக்கமாய் இருந்தது. அந்தாதி, சிலேடை வெண்பா, மாலை, கலம்பகம், கோவை, மடல், பரணி என்பனவற்றை ஒன்றன் பின் ஒன்றாகப் படித்து வருவார்கள். தமிழில் அடிப்படையான உணர்ச்சி வருவதற்குப் பிரபந்தங்கள் உதவியாக இருத்தலின் அவற்றை வித்துவான்கள் கருவிநூல்கள் என்று வழங்குவர்." [1]

குமரகுருபரர் வரலாற்றைக் கூறும் பகுதியில் அரிய சில கர்ணபரம்பரைச் செய்திகளையும் இவர் சுட்டிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

"குமரகுருபர முனிவர் காசியில் தங்கியிருந்த மடத்திற்குக் குமாரசாமி மடம் என்று பெயர். அங்கே இவர் சிவயோகம் செய்துகொண்டு வாழ்ந்துவந்தார். இவர் தாம் வாழ்ந்திருந்த மடாலயத்தில் புராண சாலை ஒன்று ஏற்படுத்தி, அங்கே ஹிந்துஸ்தானி பாஷையிலும் தமிழிலும் புராணப் பிரசங்கமும் செய்ததுண்டு. சிறந்த இராம பக்தராகிய துளசிதாசர் அந்தப் பிரசங்கங்களைக் கேட்டு வந்தனரென்றும், கம்பராமாயணத்திலுள்ள கருத்துகளைத் தாம் இந்துஸ்தானியில் இயற்றிய இராமாயணத்தில் அமைத்துக்கொண்டனரென்றும் கூறுவர்." [2] மற்ற பிரபந்தங்களுக்கு எழுதிய முகவுரைகளைக்காட்டிலும் இப்பிரபந்தத்திரட்டுக்கு இவர் எழுதியுள்ள ஆராய்ச்சி முன்னுரை மிகவும் சிறப்பாகவுள்ளது.

தலச்செய்திகள், அகப்பொருட்செய்திகள், மதுரைச் செய்திகள், காசிச் செய்திகள், புறப்பொருளிலக்கண அமைதி, யாப்பிலக்கண அமைதி என்பன போன்ற தலைப்புகளில் பல அரிய நுட்பங்களைப் புலப்படுத்தியுள்ளார்.

**திணை மயக்கம்**

திணை மயக்கம் பற்றிய இவரது விளக்கம் எளிமையாகவும், நயமாகவும் உள்ளது. "நெய்தலொடு தழீஇய மருத வேலித் தெய்வப் புலியூர்" *(சிதம்பர:5:22-23)* என்ற பாடலுக்கு இவர் தரும் விளக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது:

முள்ளைப் புறத்தே கொண்ட நீண்ட இலையையுடைய தாழையானது தனது வெள்ளிய மடலிலே சுழித்த முகத்தையுடைய சங்கையும், அதனால்

1. குமரகுருபரர் பி.திரட்டு. முகவுரை ப.1.
2. குமரகுருபர சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் ப. xix

ஈனப்பட்ட முத்துகளையும் தாங்கி நிற்கின்றது. அச்சங்கு சந்திரனைப் போலவும், முத்துகள் நட்சத்திரங்களைப் போலவும் தோற்றுகின்றன. தாழை தான் பெறுதற்கரிய சிவபெருமானது சடைமுடியிலே வாழும் பேறுடைய சந்திரனை, "கருங்குழிக் கரையில் வெண்பொடி பூசி இருந்தவம் உஞற்றியும் யாம்பெறற்கரிய செஞ்சடைக் கிடந்த வெண்மதிக் கடவுள் வருக என்று அழைத்துக் கண்ணீர் வார வெண்சோறேந்தி அச்சந்திரனோடு நட்சத்திரங்களையும் தன் மடலின்கண்ணே தாங்குவதை ஒத்தது இக்காட்சி" என்பது அப்பகுதி.

இதன்கண் தாழையாகிய நெய்தல் நிலக் கருப்பொருளும் வயலில் உள்ள சங்கும் முத்துமாகிய மருத நிலக் கருப்பொருளும் வந்து மயங்கின.[1]

**சொல்லுக்கு நயம்**

"வையம் முழுதும் உழுது உண்ண வல்லாற்கு" *(திருவாரூர்: 24)* என்ற தொடருக்கு உழுதுண்ண வல்லான் - திருமால்.

வராகவவதாரத்தில் உழுது *(நிலத்தை)* கிருஷ்ணாவதாரத்தில் திருவயிற்றில் அடக்குதலின் இங்ஙனம் கூறினார்.

உழவுத்தொழில் செய்து அதனால் பெறும் விளைவு கொண்டு உண்பான் என்பது வேறொரு பொருள்; அத்தகையோனுக்கே நிலம் பயன்படுமாதலின் வையமுழுதும் அளித்ததாகக் கூறினார்................

''அடிப்பதுமத்து ஒன்று எடுத்து'' *(சிதம்பர: 16)* என்ற மும்மணிக்கோவைப் பாடல் தொடருக்கு, "திருவடியாகிய தாமரைகளில் ஒன்றைத் தூக்கி" எனப் பொருள் கூறியதோடு, யமன் தென்திசைத் தலைவனாதலின் சிவபிரான் அத்திசையை நோக்கித் திருவடியைத் தூக்கி ஆடுதல், தம் திருவடியால் அவனை உதைத்து அடக்கும் குறிக்கோள் உடையது என்றார். நமனை உதைத்த திருவடியும் இடத்திருவடியே என்பது இங்கே அறிதற்குரியது" என நயம் கூறுவர்.

**வாழ்க்கை வரலாற்று நூல்களில் சொல்லும் சுவையும்**

டாக்டர் ஐயரவர்கள் ஏராளமான நூல்களைப் பதிப்பித்ததோடன்றி அவர் காலத்திலும், அதற்குச் சிறிது முன்னரும் வாழ்ந்த பெருமக்களது வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளை நூல்களாகத் தொகுத்து எழுதியுள்ளார். அவை உண்மையான வரலாற்று நிகழ்ச்சிகள். அந்நிகழ்ச்சிகளை ஐயர் எவ்வாறு சுவைபட விளக்குகின்றார் என்பதையே நோக்கமாய்க் கொண்டு இப்பொழிவு அமைகிறது.

---

1. குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு ஆராய்ச்சி-*8*.

**டாக்டர் எழுதிய வரலாற்று நூல்கள்**

1. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் பகுதி1 (1933)
2. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் பகுதி2 (1934)
3. மகா வைத்தியநாதையர் (1936)
4. கனம் கிருஷ்ணையர் (1936)
5. கோபாலகிருஷ்ண பாரதியார் (1936)
6. என் சரித்திரம் (1940-1950)
7. வித்துவான் தியாகராசச்செட்டியார் (1951)

இவற்றுள் என் சரித்திரத்தின் முதல் *122* அத்தியாயங்கள் *1940* ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக ஆனந்த விகடனில் வெளிவந்தன. பின்னர் உள்ளவை ஐயர் காலமானபின் அவர் எழுதியுள்ள குறிப்புகளைக்கொண்டு அவர் குமாரர் சு. கலியாணசுந்தர ஐயரால் வெளியிடப்பட்டன. தியாகராசச் செட்டியார் சரிதம் கலைமகளில் வெளி வந்து பின்னர் *1951*ஆம் ஆண்டு நூலாக வெளியிடப்பெற்றது.

**வரலாற்றுக் களஞ்சியம்**

இந்நூல்கள் குறிப்பிட்ட ஒருவரது வரலாற்று நூலாய் மட்டும் அமையவில்லை. அவர் காலத்தில் வாழ்ந்த எண்ணற்ற பெருமக்களின் வரலாறுகளையும், அவர்கள் காலத்தில் நிகழ்ந்த சுவைமிக்க நிகழ்வுகளையும் தன்னகத்தே கொண்டு தமிழ்நாட்டின் வரலாற்றுக் களஞ்சியமாய் விளங்குகிறது.

சான்றாக, ஐயரவர்களின் தன் வரலாற்று நூலான என் சரித்திரம் என்பது ஐயரவர்களின் வரலாற்றை மட்டும் கூறவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தமிழகத்தில் வாழ்ந்த பெரும் புலவர்கள், பேறிஞர்கள், பதிப்புத்துறை முன்னோடிகள், புகழ் பெற்ற பெருமக்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், நீதிபதிகள், மடாதிபதிகள், தமிழ்த் தொண்டு ஆற்றியவர்கள் போன்ற பலருடைய வரலாறுகளும் அதில் கூறப் பட்டுள்ளன. அவர்களைப்பற்றிய செய்திகளை விளக்கமாய்க் கூறுகின்றார் ஐயர். இதன் காரணமாகவே இவரது என் சரித்திரம் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது. ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் *750*க்கு மேற்பட்டப் பக்கங்களைக் கொண்டுள்ளது.

தனித்தனியே சிலருடைய வரலாறுகளை நூல் வடிவில் எழுதியதுடன் பலருடைய வரலாறுகளைக் கட்டுரை வடிவிலும் எழுதியிருக்கின்றார். பேராசிரியர்

பூண்டி அரங்கநாத முதலியார், சேலம் இராமசாமி முதலியார், இசைப்புலவர் ஆனை ஐயா, தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் போன்ற பலரைப்பற்றிக் கட்டுரைகள் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம்**

ஐயரவர்கள் எழுதிய வரலாற்று நூல்களுள் முற்பட்டது மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம். இது இரண்டு பாகங்களைக் கொண்ட பெருநூல்.

பிள்ளையவர்கள், டாக்டர் ஐயரின் பேரன்புக்குரிய ஆசிரியர்; ஐயருக்குப் பல சிற்றிலக்கியங்களைப் பாடமாய்க் கற்றுத் தந்தவர். ஐயரின் வாழ்க்கைக்கும், பெற்ற பெருமைக்கும் ஏணியாய் அமைந்து பல்லாற்றானும் பேருதவிகள் புரிந்தவர். எனவே, ஐயர் தமது ஆசிரியருக்கு ஆற்ற வேண்டிய நன்றிக்கடனை இந்நூல்கள் வாயிலாக ஆற்றியுள்ளார் எனக் குறிப்பிடலாம்.

இந்நூல் எழுதும்போது உடனிருந்து எழுதிவந்தவர், ஐயரின் முதல் மாணவரான கி.வா. ஜகந்நாதன். இந்நூல் முற்றுப்பெற்றமைபற்றி அவர் கூறும் கருத்து: "1930ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒருநாள் மாடியில் படுத்திருந்த ஆசிரியர் எழுந்திருந்து கீழே இறங்கி வந்தார். வரும்போதே கீழே இருந்த கதவு தடுக்கி விழுந்துவிட்டார். காலில் நன்றாய் அடிபட்டு வீங்கிவிட்டது. அவரது வீட்டிற்கு அருகில் இருந்த டாக்டர் வந்து பார்த்தார்; குணமாகவில்லை. பிறகு மிகச்சிறந்த டாக்டராகிய ரங்காசாரியாரை அழைத்து வந்தார்கள். அவர் ஆசிரியருக்கு வீட்டிலேயே இரண சிகிச்சை செய்தார். ஆசிரியர் சில நாள்கள் படுக்கையில் இருக்கும்படி நேரிட்டது.........

"இவருடைய சிந்தனை பிள்ளையவர்களுடைய வரலாற்றை முடித்துவிட வேண்டும் என்பதில் இருந்தது. பல விதமான குறிப்புகளைப் பல காலமாகச் சேர்த்திருந்தார். முன்பகுதிகளை எழுதிவிட்டார். கடைசிப் பகுதி எஞ்சியிருந்தது. படுத்த படுக்கையாய் இருந்தபோது இவருக்குப் பிள்ளையவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை முடிப்பதற்குள் தம் வாழ்க்கை முடிந்துவிடுமோ என்கிற அச்சம் இருந்தது.

"ஒருநாள், 'அந்தக் கட்டை எடுத்துக்கொண்டு வா!' என்று என்னிடம் சொன்னார். 'டாக்டர் எதுவும் செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கிறாரே,' என்றேன் நான். 'டாக்டருக்கு என்ன தெரியும்? என் கடமையை நான் செய்தால் ஆண்டவன் என்னைக் காப்பாற்றுவான்' என்றார். அந்தக் கட்டை எடுத்து வந்தேன். மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் இறுதிக் காலத்தைப்பற்றிச் சொல்லத் தொடங்கிவிட்டார். கண்ணீர் விட்டுக்கொண்டே இவர் சொல்லச் சொல்ல நானும் கண்ணீர் விட்டுக்கொண்டே அந்தப் பகுதியை எழுதிவந்தேன். பிள்ளையின்

வரலாறு ஒருவாறு பூர்த்தியாயிற்று பிறகு, அது இரண்டு பாகங்களாய் வெளிவந்தது.

ஆசிரியர் வரலாற்றை எழுதுவது தம் உயிரினும் சிறந்த கடமை என இவர் கருதியிருந்ததை இந்நிகழ்ச்சி அறிவிக்கிறது.

**பெயர் சுட்டாப் பேரன்பு**

ஆசிரியர்களைத் தெய்வமாய் மதிக்கும் காலம் ஒன்றிருந்தது.

"அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர்என்ப இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக" *(ஆசாரக் கோவை:16)*

எனப் பண்டை நூல் பாடுகிறது.

காலம் மாறிவிட்டது. மாணவர்கள் ஆசிரியர்மீது வைக்க வேண்டிய மதிப்பும் மாறிவிட்டது. ஆசிரியர்கள் மாணவர்மீது கொள்ள வேண்டிய அன்பும் மாறிவிட்டது.

இந்த நிலைக்கு அப்பாற்பட்டவர் டாக்டர் ஐயர். தமிழ்நாட்டில் கணவன் பெயரை மனைவி கூறுவதில்லை. இது பண்டைய பண்பாட்டு மரபு: ஆனால், ஆசிரியர் பெயரைக் கூறுவதற்கு அஞ்சும் மாணவரைக் கண்டிருக்கின்றீர்களா? அத்தகைய மாணவருக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவர், டாக்டர் உ.வே. சாமிநாதையர்!

தம் ஆசிரியரின் வரலாற்றை எழுத முனைந்தார், ஐயர். அவரது கல்விப் பயிற்சியைப்பற்றிக் கூறத் தொடங்கும் போது, மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு ஐந்து பிராயமானவுடன் சிதம்பரம்பிள்ளை வித்தியாரம்பம் செய்வித்துத் தம் பள்ளிக்கூடத்திலேயே கல்வி பயிற்றத் தொடங்கினார்" [2] என்று எழுதிவிட்டார். தம் ஆசிரியரை எந்த இடத்திலும் இவர், பிள்ளையவர்கள் என்றுதான் குறிப்பிடுவது வழக்கம். ஆனால், இங்குப் பெயரையே குறிப்பிட்டுவிட்டதற்காக வருத்தம் தெரிவித்து, "பிள்ளையவர்களை இவ்வாறு பெயர் குறித்து எழுதுவதற்கு அஞ்சுகிறேன்." [3] என மனம் கசிந்து குறிப்பிடுகிறார். எத்தகைய பண்பாடு இது, "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என்ற வள்ளுவரின் கூற்றுக்கு இலக்கியமானவர், ஐயர்.

**இயற்கைப் புனைவு**

பிற்காலப் புலவர்களின் பாடல்களிலோ, உரைநடைகளிலோ கற்பனை மிகுதியாய் இருக்கும். உயர்வு நவிற்சி என்ற போர்வையில் உண்மைக்கு மாறான புனைவுகள் இடம் பெற்றிருக்கும்.

---

1. கி.வா. ஜகந்நாதன், இந்திய இலக்கியச் சிற்பிகள், தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர்.1994, ப.62.
2. மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் - பாகம் 1, பக். 9.
3. மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் - பாகம் 1, பக் 9.

ஆனால், ஐயரவர்களின் எழுத்தில் இயற்கையோடு ஒட்டிய புனைவைத்தான் காணமுடிகிறது. சங்க நூல்களில் காணப்படும் எதார்த்த வாதம் என்ற உண்மை நிலையை அடியொற்றி இவரது புனைவுகள் அமைந்துள்ளன.

தம் ஆசிரியரைப்பற்றிய வருணனையில் இவர் இயற்கையைக் கையாண்டு, உள்ளது உள்ளவாறே அவர் தோற்றத்தை நம் கண்முன் நிறுத்துவதைப் பின்வரும் பகுதியால் அறியலாம்:

"அப்புலவர் பெருமான் வரும்போதே அவருடைய தோற்றம் என் கண்ணைக் கவர்ந்தது. ஒரு யானை மெல்ல அசைந்து நடந்து வருவதைப் போல அவர் வந்தார். நல்ல வளர்ச்சியடைந்த தோற்றமும், இளந்தொந்தியும், முழங்கால்வரை நீண்ட கைகளும், பரந்த நெற்றியும், பின்புறத்துள்ள சிறிய குடுமியும், இடையில் உடுத்திருந்த தூய வெள்ளை ஆடையும் அவரை ஒரு பரம்பரைச் செல்வரென்று தோன்றச் செய்தன. ஆயினும், அவர் முகத்திலே செல்வர்களுக்குள்ள பூரிப்பு இல்லை. ஆழ்ந்து பரந்த சமுத்திரம் அலையடங்கி நிற்பது போன்ற அமைதியே தோன்றியது.

"..........அவருடைய நடையில் ஓர் அமைதியும் வாழ்க்கையில் புண்பட்டுப் பண்பட்ட தளர்ச்சியும் இருந்தன. அவருடைய தோற்றத்தில் உற்சாகம் இல்லை, சோம்பலும் இல்லை, படபடப்பில்லை, சோர்வும் இல்லை.

"அவர் மார்பிலே உருத்திராட்ச கண்டி விளங்கியது. பல காலமாய்த் தவம் புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாசகனைப் போல நான் இருந்தேன். அவனுக்குக் காட்சியளிக்கும் அத்தெய்வம் போல அவர் வந்தார். என் கண்கள் அவரிடத்தே சென்றன. என் மனத்தில் உற்சாகம் பொங்கி அலை எறிந்தது. அதன் விளைவாக ஆனந்தக் கண்ணீர் துளித்தது." [1]

இயற்கையோடு ஒட்டிய எளிய நடையில் இப்புனைவு அமைந்துள்ள தல்லவா? இதைப் படிக்கும்போது பிள்ளையவர்களை நேரில் காண்பது போன்ற ஒரு மன நிலையை நாம் அடைகிறோம்.

**பிள்ளையவர்களின் தமிழ்ப்பற்று**

மீனாட்சிசுந்தரம் பிள்ளை தமிழ்மொழிமீது அளவு கடந்த பற்று உடையவர்; தம் உயிரினும் மேலாக நேசிப்பவர். இதனை ஒரு நிகழ்ச்சி வாயிலாக ஐயர் விளக்கிக் காட்டும் திறம் உணர்ச்சியூட்டக்கூடியது. ஐயர் கூற்றாகவே இந்நிகழ்ச்சியைக் காணலாம்.

---

*1.* உ.வே.சா. என் சரித்திரம். *1950* ப. *226.*

"ஒரு நாள் *10* மணிக்குமேல் இவர் பூஜை செய்வதற்குச் சென்றார் பூஜை செய்துகொண்டிருக்கையில் கடுமையான ஜுரம் வந்துவிட்டமையால் விரைவில் அதனை முடித்துக்கொண்டு ஆகாரம் பண்ணாமலே வந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டார். என்னைப் பார்த்து,

'கையில் உள்ளது என்ன புத்தகம்?, என்றார். தஞ்சைவாணன் கோவை என்றேன். படிக்கும்படி சொன்னார். படித்துக்கொண்டு வந்தேன். மிகுந்த அயர்ச்சியோடு இருக்கிறார் என்று நான் நினைத்து நிறுத்தினால், இவர் கண்ணைத் திறந்து படிக்கச் சொல்லுவார்.

"இவரைப் பார்க்க வந்த அன்பர்களில் சிலர் என்னைக் கோபத்தோடு நோக்கி, 'இப்போதுகூடவா பாடங்கேட்டு இவர்களுக்குத் துன்பத்தை உண்டுபண்ண வேண்டும்? நிறுத்திக்கொள்ளக்கூடாதா? பாடம் எங்கே ஓடிப் போகிறது? இதை நீர் தெரிந்துகொள்ளவில்லையே' என்று கடுமையாய்க் கூறினார்கள் அதைக் கேட்ட இவர், 'நிறுத்தச் சொல்ல வேண்டா; அதுதான் இப்பொழுது எனக்கு மருந்தாய் இருக்கிறது. சுர நோயின் துன்பத்தை மறந்து என் மனம் அந்நூலிலேயே ஈடுபட்டுவிட்டது' என்று கூறி, அந்த நூலாசிரியருடைய பெருமையையும் வாக்கு விசேடத்தையும் அவர் முருகக் கடவுள் அருள் பெற்றவர் என்பதையும் எடுத்துக் கூறினார். தமிழ்ச்செய்யுளில் இவருக்கிருந்த ஈடுபாடும் அதனை இவர் நோய்க்கு மருந்தாய் எண்ணிய இயல்பும் என் மனத்தை உருக்கின."[1]

**தமிழ் - பாடம் சொல்லும் முறை**

பிள்ளையவர்கள் மாணவர்களுக்குத் தமிழ் நூல்களைப் பாடம் சொல்லும் முறைபற்றித் தெளிவாய் இவர் கூறுவது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் உணர வேண்டிய கருத்துகள் அதில் அடங்கியிருப்பதை அறியலாம்.

"இவர் பாடம் சொல்லும்போது கடின பதங்களுக்கு மட்டும் பொருள் சொல்லுவார். கற்பனைகளை இன்றியமையாத இடங்களில் விளக்கிக் காட்டுவார். இன்ன கருத்துகளை ஒழுங்காக மனத்தில் வைத்திருக்க வேண்டும் என்று கூறுவார்.......... பாடம் சொல்லும் நூல்களில் உரைகளில் மேற்கோளாக வரும் செய்யுள்களுக்குப் பொருள் கூறுவார். புலவர்களைப்பற்றிய வரலாறுகளை அடிக்கடி சொல்லுவார்." [2]

**சொல் திரிபு**

தமிழ்மீது பேரன்பு கொண்டவராயினும் வடமொழிச் சொற்கள் எல்லா வற்றையுமே தமிழ் ஒலிக்கேற்பத் திரித்து வழங்குவது சரியன்று என்பது

---

*1.* மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம், பாகம்*2*, ப*105, 106*.

*2.* மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம், பாகம்*2*, ப*275*.

இவர் கொள்கை. வடமொழிச் சொற்களைத் திரித்து வழங்கும் போது மனம் போனவாறு மாற்றுதலை இவர் விரும்புவதில்லை. "என் பெயரைத் திரித்து மீனாக்கிசுந்தரம் என்று வழங்கினால் நன்றாய் இருக்குமா?" என்று கேட்பார். 'மனஸ்' என்ற வடமொழிச் சொல்லை 'மனது' என்று வழங்கக்கூடாதென்பது இவர் கொள்கை. மனஸ்-மனம் என்றுதான் திரியும்; சிரஸ் என்பது சிரமென்று வருகிறதே தவிர 'சிரது' என்று வருகிறதில்லையல்லவா?" என்பார்.

இவ்வாறு ஆங்காங்குத் தமிழ்ச்சொற்கள்பற்றிய நுண்கருத்துகளை ஐயர் கூறிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

**தமிழ்நாடு பெற்ற பயன்**

பாஸ்வெலுக்கு ஒரு ஜான்சன்; பரமஹம்சருக்கு ஒரு விவேகானந்தர்; பாரதிக்கு ஒரு பாரதிதாசன்; இதைப் போலவே மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு சாமிநாதையர் என்றால், மிகையாகாது.

பிள்ளையவர்களின் பெருமையைத் தமிழகம் அறியச்செய்தவர் டாக்டர் உ.வே.சா. பிள்ளையவர்களின் புகழைத் தமிழின் பொன்னேட்டில் பதிப்பித்தன இவர் சொற்கள். 'நடமாடும் புத்தகசாலை' [1] என ஓரிடத்தில் இவரைக் குறிப்பிடு கின்றார்.

"இப்புலவர்பிரான் பல இடங்களில் பல வகையில் சேகரித்து வைத்திருந்த தம் அறிவைத் தம் மாணாக்கர்களுக்கு வரையாது வழங்கினமையால் பிரபந்தங்கள் உயிர் பெற்றன. அதுகாறும் தெரிவிப்பாரின்றிக் கிடந்த குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்களிற்சில, சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தங்களிற்சில, சிவஞான முனிவர் பிரபந்தங்களிற்சில, இன்னும் வேறு சில, தமிழ்நாட்டாருடைய கைகளில் விளங்கின. இவர் பாடம் சொல்லியதனாலேயே அப்பிரபந்தங்களின் நயங்களைத் தமிழ்மக்கள் உணரத் தலைப்பட்டனர். காஞ்சிப்புராணம், தணிகைப் புராணம், திருவானைக்காப்புராணம் முதலியவற்றிற்கு இவர் பாடம் சொன்ன உரையே பிற்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்குவதாயிற்று.' [2]

இவரது எழுத்தில் பெரும்பகுதி பிள்ளையவர்களின் தொண்டிற்காகவே செலவிடப்பட்டதை வரலாறு அறிவிக்கின்றது.

**என் சரித்திரம்**

ஐயர் அவர்கள் தம் வாழ்க்கை வரலாற்றைப் பல அன்பர்களின் வற்புறுத்தலால் எழுதி, 1940ஆம் ஆண்டு, ஆனந்த விகடன் இதழ்களில்

---

1. மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம். பாகம்2. ப. 274.
2. மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம். பாகம்2. ப. 276.

தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தார். இது முதல் பாகமாய் வெளி வந்தது. ஐயர் காலமான பிறகு அவர் எழுதிய குறிப்புகளின் துணை கொண்டு இரண்டாம் பாகம் அச்சிடப்பட்டது. ஐயரவர்களின் சுய சரிதம் ஒரு பேரிலக்கியமாய் விளங்குகிறது. ஏராளமான சுவைமிக்க வரலாறுகளை இந்நூலில் காணலாம். ஐயரவர்களின் ஆழ்ந்த தமிழ்ப்புலமையையும், அவ்வப்போது அவர் பேசிய சொல் சாதுரிய நிகழ்ச்சிகளையும் மையமாய்க் கொண்டுள்ளது இக்கட்டுரை:

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாவதில்லை; அவ்வாறே, சொல்லெல்லாம் பழகுதமிழ் சொல்லாவதில்லை. தமிழ்ச்சொற்களைக் காலமறிந்து இடமறிந்து கையாண்டு வெற்றி பெற்ற கன்னித்தமிழ்ப் புலவர்கள் பலர். அவர்களுள் சிறப்பிடம் பெறுபவர் டாக்டர் உ.வே.சாமிநாதையர். இவர் எழுதிக் குவித்த ஏடுகள் சில; பதிப்பித்தவை பல. அவற்றில் எல்லாம் இவரது சொல்வித்தகம் பளிச்சிடுகிறது. இவற்றை மிகுதியாக 'என் சரித்திரம்' என்ற நூலில் காணலாம்.

''தமிழ் இலக்கியம் எங்கெல்லாம் அறிமுகமாகியிருக்கின்றதோ அங்கெல்லாம் உ.வே.சா. பெயரும் அறிமுகமாகியிருக்கும். மறைந்து போக இருந்த தமிழ் இலக்கிய நூல்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தொகுத்துப் பதிப்பித்துப் புத்துயிர் பெறச் செய்தவர், உ.வே.சா. அவரைத் தமிழாராய்ச்சி உலகம் நன்றியோடு என்றும் பாராட்டும்." [1]

"கான்ஸ்டாண்டிநோபில் நகரிலிருந்து தப்பியோடும் கிரேக்க சாஸ்திரிகள் இத்தாலிய தேசத்துக்குக் கொணர்ந்த ஏடுகளே ஐரோப்பா புனர் ஜன்மம் பெற்றதற்கு ஒரு முக்கிய காரணம் என்பர். பாரதியாருக்குக் கவிதையிலும், தமிழர் அனைவருக்குமே வாழ்க்கையிலும் உயிரும் உற்சாகமும் ஊட்டித் தமிழ்நாட்டுக்குப் புனர் ஜன்மம் அளித்தவர் இவரே. எத்தனையோ புலவர்களும் கல்விக் கழகங்களும் அரச குடும்பங்களும் ஒன்றுசேர்ந்து வருஷ காலத்தில் ஐரோப்பாவில் நடத்தி வைத்த ஒரு காரியத்தை இந்தத் தமிழர் ஒருவராகச் செய்து முடித்திருக்கிறார்.'' [1] என இவ்வாறெல்லாம் அறிஞர்கள் பாராட்டியுள்ளனர். இதற்குக் காரணம் இவரது உழைப்பும், நூற்புலமையும் மட்டுமல்ல; சொல்லாற்றலும் காரணமாகும் என்பதை இவர் நூல்கள் உணர்த்துகின்றன. சொற்களைக் கையாளுவது முக்கியமன்று; அவற்றை எளிமையாய், இனிமையாய், உணர்ச்சியோடு படிப்பார் மனத்தில் பதியும்வண்ணம் கையாள வேண்டும் என்பது இவர் கொள்கை.

தம் பாட்டனாரிடம் இவர் கல்வி பயின்ற இளம் பருவ நிகழ்ச்சியை எவ்வாறு சொல்லுகிறார் என்பதைக் காணலாம். "என் பாட்டனாரை எனக்கு

1. எஸ்.டி. காசிராசன், உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு, *1987*. ப. *23*.
2. உ.வே.சா. சதாபிஷேக வரலாறு, ப. *134*.

நன்றாய் ஞாபகம் இருக்கிறது. எனக்கு அரிச்சுவடி சொல்லிக் கொடுத்தவர் அவரே. எவ்வளவோ தெய்வத் தோத்திரங்களைப் பாடமாய்ச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அவை இப்போது மறந்து போய்விட்டன. ஆனால், அவர் கொடுத்த பலமான அடிகளை மாத்திரம் நான் மறக்கவில்லை." [1]

**சுவையான விளக்கம்**

சில நிகழ்ச்சிகளை விளக்கும் போது இவர் சுவைபட விளக்குவதைக் காணலாம்.

பிராமணர்களுக்குள் 'அஷ்ட ஸகஸ்ரம்' என்பது ஒரு பிரிவு. அதற்கு எண்ணாயிரம் என்பது பொருள். இதனைச் சார்ந்தவர் ஐயர். தம் குலப்பிரிவை இவர் விளக்கும் முறை சுவையானது. "பதினாயிரம் பிராமணர்களுக்கு அன்னதானம் செய்ய எண்ணியிருக்கிறேன்; அதற்கு மகாராஜா உதவி செய்ய வேண்டும்", என ஒருவர், ஓர் அரசரை வேண்டிக்கொண்டாராம். அந்த அரசர் அதற்காக நிறையப் பொருளுதவி செய்தார். அந்தத் தொகையைப் பெற்று அவர் தம் வீட்டில் இரண்டே அந்தணர்களை அழைத்து அவர்கள் திருப்தி அடையும்படி போஜனம் செய்வித்து, மிகுதியாகத் தட்சணையும் கொடுத்தனுப்பினார்.

"ஐயர் வீட்டிலுள்ள ஒருவர் அவருடைய விஷயங்களை நன்கு அறிந்து கொண்டவராதலின் அவரை, 'பதினாயிரம் பேருக்கு அன்னம் இடுவதாக ராஜாவை ஏமாற்றி விசேஷமான பொருளை வாங்கி வந்தீரே; இரண்டு பேருக்குத்தானே சாப்பாடு போட்டீர்!', என்று கேட்டபோது அவர், 'நான் பதினாயிரத்துக்கு மேல் ஆயிரம் சேர்த்துப் பதினோராயிரம் பேர்களுக்குப் போஜனம் செய்வித்தேனே!' என்றார். கேள்வி கேட்டவர், 'இது பெரும் புரட்டாக அல்லவோ இருக்கிறது! இரண்டு பேருக்குப் போட்டுவிட்டுப் பதினோராயிரம் பேருக்குப் போட்டதாகவும் சொல்லுகிறீரே!' என்று மீண்டும் கேட்டார்.

"அந்தச் சாமர்த்தியசாலி, 'நான் போஜனம் செய்வித்தவர்களில் ஒருவர் எண்ணாயிரத்தார்; மற்றொருவர் மூவாயிரத்தார். இருவரும் சேர்ந்து பதினோராயிரம் பேர் ஆகவில்லை?' என்று சமத்காரமாகப் பதிலளித்தார். கேட்டவர், அஷ்ட ஸகஸ்திரப் பிராமணர் ஒருவரும், சிதம்பர தீட்சிதர் ஒருவரும் அவர் வீட்டில் உணவருந்தினார்கள் என்று உணர்ந்து கொண்டாராம்.

"இந்தக் கதை உண்மையோ பொய்யோ, எப்படியிருந்தாலும், இத்தகைய தந்திரத்தை விரோதார்த்தமாக நானும் உபயோகிப்பதுண்டு.

---

*1. என் சரித்திரம் (உ.வே.சா.), ப. 19.*

நான் ஒருவனாக இருந்தாலும் எண்ணாயிரம் என்று சிலேடை தோன்றச் சில இடங்களில் சொல்லி இருக்கிறேன்" [1] என எழுதுகிறார்.

**நம்பிக்கையின் ஊற்றம்**

பகுத்தறிவுவாதிகள் பலர் வாழ்வது இக்காலம். அவர்கள் சகுன சாத்திரங்களையோ, சோதிடப்பலன்களையோ நம்புவதில்லை. அவை வெறும் புரட்டு எனப் பேசுவார்கள். ஆனால், தங்களுடைய சொந்தக் காரியங்களில் யாருமறியாமல் சென்று ஜாதகம் பார்ப்பார்கள். தம்மையுமறியாமல் இத்தகைய நம்பிக்கை நம் இரத்தத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாய் ஊறிவந்திருக்கிறது என்பதை எவரும் மறுக்க இயலாது.

வாழ்க்கையில் பின்பற்றப்படும் சில செயல்பாடுகளில் ஐயரவர்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருந்தார். இந்த நம்பிக்கை, அடிமனத்தில் தோன்றும் ஆவலின் விளைவாய் ஏற்படுகிறதென்பதைப் பின்வரும் நிகழ்ச்சி வாயிலாய் விளக்குகிறார்:

"இங்ஙனமே வேறு சிலரும் பிள்ளையவர்களுடைய நற்குணத்தையும் புலமைச் சிறப்பையும் எங்களிடம் கூறிவந்தனர். அதனால் எனக்கு அப்புலவர் பிரானைப்பற்றிய தியானமே பெரிதாகிவிட்டது. ஒருநாள் காலையில் திருவிளையாடற்புராணத்தைப் படிக்கலாமென்று எடுத்தேன். அப்போது மிகவும் நைந்து அயர்ந்து போன என் உள்ளத்தில் ஓர் எண்ணம் தோற்றியது. 'இந்தப் புத்தகத்தில் கயிறு சார்த்திப் பார்ப்போம்' என்று நினைத்து அவ்வாறு செய்யலானேன். இராமாயணம், திருவிளையாடல் முதலிய நூல்களில் வேறு ஒருவரைக் கொண்டு கயிறு சார்த்திப் பிரித்து, அப்பக்கத்தின் அடியிலுள்ள பாடலைப் பார்த்து அச்செய்யுட்பொருளின் போக்கைக்கொண்டு அது நல்ல பொருளுடையதாயின் தம் கருத்து நிறைவேறுமென்றும், அன்றாயின் நிறைவேறாதென்றும் கொள்ளுதல் ஒரு சம்பிரதாயம்.

"நான் ஒரு சிறுவனைக்கொண்டு கயிறு சார்த்தச் செய்து புத்தகத்தைப் பிரித்தேன். அந்தப் பக்கத்தின் அடியில் *23* என்னும் எண்ணுடைய செய்யுளை நான் பார்த்தேன். என் உள்ளக் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்ற பயத்தோடு நான் மெல்ல புத்தகத்தைப் பிரித்தேன்........

"சீதமணி மூரல்திரு வாய்சிறி தரும்ப
மாதவர்கள் காணவெளி வந்துவெளி நின்றார்

---

*1.* உ.வே.சா. என் சரித்திரம். ப. *13.*

நாதமுடி வாயளவி னான்மறையி னந்தப்
போதவடி வாகிநிறை பூரண புராணன்"

என்ற பாட்டைக் கண்டேனோ இல்லையோ, எனக்கு மயிர்க்கூச்செறிந்தது; என் கண்களில் நீர் துளிர்த்தது. மிகவும் நல்ல நிமித்தம் உண்டாகிவிட்டது. ஒரு குருவை வேண்டி நின்ற எனக்கு, தட்சிணாமூர்த்தியாகிய குருமூர்த்தி வெளிப்பட்டதைத் தெரிவிக்கும் செய்யுள் கிடைத்ததென்றால் என்பால் பொங்கிவந்த உணர்ச்சிக்கு வரம்பு ஏது?

'கடவுள் எப்படியும் கைவிடார்'

என்ற நம்பிக்கை உதயமாயிற்று. மதுரை மீனாட்சிசுந்தரக் கடவுள் முனிவர்களுக்கு அருள் செய்தார். எனக்கும் அந்தப் பெருமான் திருநாமத்தை உடைய தமிழாசிரியர் கிடைப்பார் என்ற உறுதி உண்டாயிற்று." [1]

ஆசிரியரிடம் பாடம் கேட்பதற்கு முன்னரே அவரிடம் தாம் கொண்டிருந்த தெய்விக அன்பை இந்நிகழ்ச்சிவாயிலாக வெளிப்படுத்துவது பாராட்டத்தக்கது.

**குட்டிகள்**

ஐயரவர்கள் சொல் நடையில் ஆங்காங்கு நகைச்சுவையும் ஊடுருவி நிற்பதைக் காணலாம். பற்பல இடங்களில் பற்பல நிகழ்ச்சிகளை இவர் நகைச்சுவையோடு கூறிச் செல்லுகிறார்.

திருவாவடுதுறை ஆதீனம் அப்போது சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்திருந்தது. அப்போது கர்த்தராய் இருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகருடைய குருபூசை வந்தது. அதற்கு வர வேண்டுமென்று ஆதீன கர்த்தர் பிள்ளையவர்களுக்குத் திருமுகம் அனுப்பியிருந்தார். அதன்படி பிள்ளையவர்களும் அங்குச் சென்று திரும்பி வந்து, தாம் சென்று வந்த செய்தியைக் கூறினார்.

"மகாசந்நிதானம் [2] மிகவும் அன்போடு விசாரித்துப் பாராட்டியது. திருவாவடுதுறைக்கே வந்து இருந்து மடத்திலுள்ளவர்களுக்குப் பாடம் சொல்லி வர வேண்டுமென்று கட்டளையிட்டது. அங்கேயுள்ள **குட்டிகளும்** என்னை மொய்த்துக்கொண்டு, 'எப்படியாவது இங்கே வந்திருந்து பாடம் சொல்லித் தர வேண்டும்,' என்று வற்புறுத்தினார்கள். நான் வருகிறேன் என்று ஒப்புக்கொண்டு வந்தேன்," என்று ஆசிரியர் விளக்கினார்.

---

1. என் சரித்திரம், ப. 195 - 196
2. ஆதீன கர்த்தர் அவர்களை மகாசந்நிதானம் என்றும், சந்நிதானம் என்றும் சொல்வது வழக்கு.

"நான் கவனித்து வரும்போது, குட்டிகள் என்ற வார்த்தையைக் கேட்டவுடன் திடுக்கிட்டேன். 'மடத்தில் குட்டிகள் இருக்கிறார்களா?' என்று பிரமித்தேன். குட்டிகள் என்று இளம் பெண்களை யாவரும் கூறும் வழக்கத்தையே நான் அறிந்தவன். பக்கத்திலிருந்த சவேரி நாத பிள்ளையிடம், 'குட்டிகள் மடத்தில் இருப்பதற்குக் காரணம் என்ன?' என்று கேட்டேன். அதற்கு அவர் முதலில் சிரித்துவிட்டு, 'சிறிய தம்பிரான்களை மடத்தில் குட்டித் தம்பிரான்கள் என்று கூறுவார்கள். அந்தப் பெயரையே சுருக்கிக் 'குட்டிகள்' என்று வழங்குவதுமுண்டு' என்று விளக்கினார். என் சந்தேகமும் நீங்கியது."

இந்நிகழ்ச்சி மிகச் சாதாரணமானதென்றாலும் ஐயரின் நகைச்சுவை நடைக்கு எடுத்துக்காட்டாய் அமைகின்றது.

**ஆதீனக் காட்சி**

தமிழ்நாட்டிலுள்ள மடாலயங்கள் சைவத்தையும் தமிழையும் இரு கண்ணெனக் கொண்டு பணியாற்றி வருகின்றன. காலத்திற்கேற்ற மாற்றமும் முற்போக்குச் சிந்தனைகளும் அங்கே ஊடுருவிவிட்டன என்பதை மறுக்க இயலாது. காலப் போக்கிற்கேற்ற மாற்றம் தேவை என்பதை அறிஞர் ஒப்புவர். திருவாவடுதுறை ஆதீனம் சைவத் துறவிகளின் தவச்சாலையாகவும், தமிழ் வளர்ச்சிக்கு நிலையமாகவும் திகழ்ந்து வருகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அது எவ்வாறு காட்சியளித்தது என்பதைத் தமது சொல்லில் வடித்துக் காட்டுகிறார், ஐயர்.

"தம்பிரான்களுடைய தோற்றத்தைக் கண்டு நான் விம்மிதமடைந்தேன். இவ்வளவு நீண்ட சடை இவர்களுக்கு எப்படி வந்தது என்று பிரமித்தேன். அவர்கள் அணிந்திருந்த உடையின் அழகும், சடையின் மேல் போட்டிருந்த வஸ்திரத்தின் அமைப்பும், காதில் உள்ள வேடமும் ருத்திராட்சமும், விபூதி அணிந்த பளபளப்பான மேனியின் வனப்பும், கண் கொள்ளாக் காட்சியாக இருந்தன. அவர்கள் பூண்டிருந்த உடையும் சிவச் சின்னங்களும் அலங்காரமான ஆடைகளையும் ஆபரணங்களையும் விஞ்சி நின்றன.

"சைவ ஆதீனமாகிய அவ்விடத்தை 'சிவராஜதானி' என்று கொண்டாடுவர். அங்கே ஆதீன கர்த்தராக இருப்போர் சைவத் துறவிகளுக்கு அரசர். அந்த அரசின் ஆட்சியின்கீழ் வாழும் தம்பிரான்கள் சைவக் கோலம் பூண்ட ஞான வீரர்கள்!"

ஐயர் பல இதழ்களில் கட்டுரைகளும் எழுதியுள்ளார். அவற்றின் நடை தெள்ளத் தெளிந்த நீரோட்டம் போன்றது; எளிமையானது; இனியது;

1. என் சரித்திரம், பக். 307, 308.

நீர்ப்பளிங்கு போல் இருந்தாலும் ஆழ்ந்துள்ள அருவி போலப் பொருள் ஆழம் உடையது.

எளிமையான சிறிய சிறிய தொடர்களை அமைத்து எழுதுவதில் இவர் திரு.வி.க.வுக்கு ஒப்பானவர். அறிஞர்களைப்பற்றி வருணிக்கும்போது புற வருணனையைத் தந்து நம் கண்முன் நிறுத்துவார்; அவ்வாறே அவர்களின் மன ஆழத்தில் புதைந்து கிடக்கும் உணர்ச்சிகளையும் எடுத்துக் காட்டுவார். தம் அருமை ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் புறத்தோற்றத்தை வருணித்தவர், அவரது அகத்தின் ஆழத்தையும் வருணித்திருப்பதைக் காணலாம்.

"காட்சிக்கு எளிமையும் பணிவும் சாந்தமும் இவர்பால் உள்ளன என்பதை இவரைக் கண்டவுடன் அறியலாம். ஆழ்ந்த அறிவும், இணையற்ற கவித்துவமும் வாய்க்கப்பெற்றிருந்தும் அவைகளெல்லாம் அடங்கி ஒலியற்றிருக்கும் ஆழ்ந்த கடலைப் போல், அறிவின் விசித்திர சக்தி எல்லாம் கண்டவுடன் அறிய முடியா வண்ணம் அடங்கியிருக்கும் தோற்றம் உடையராய் இருந்தார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை பெரும் புலமை வாய்ந்தவர். ஆனால், அவரது புலமை எனும் நீர் முழுவதும் புராண வயல்களுக்கே பாய்ச்சப்பட்டன. டாக்டர் ஐயரவர்கள் குருவை விஞ்சிய சீடராய்ப் புகழ் பெற்றுத் திகழ்கிறார். மீனாட்சிசுந்தரரின் புகழுக்கே இவர் காரணமாய் உள்ளார் என்று கூறுதல் மிகையாகாது.

## வித்துவான் தியாகராசச் செட்டியார்

ஐயரவர்கள் வாழ்க்கையில் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் இருவர். ஒருவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை; மற்றவர் வித்துவான் தியாகராசச் செட்டியார். முன்னவர், கல்வியறிவு தந்த ஆசான்; பின்னவர், உத்தியோகப் பதவி தந்து வாழ்க்கையில் உயர்த்திய நண்பர். இவ்விருவரது வாழ்க்கை வரலாறுகளை மிகச்சிறப்பாகப் படைத்துத் தமிழுக்குத் தந்திருக்கிறார். ஐயர் தம் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து நின்ற நால்வரைப்பற்றிக் கூறுவது கவனிக்கத்தக்கது.

"என் வாழ்க்கையில் எவ்வளவோ மனிதர்களோடு பழகியிருக்கிறேன். நல்லவர்களால் நன்மை அடைந்திருக்கிறேன்; உபகாரிகளிடமிருந்து உபகாரம் பெற்றிருக்கிறேன். மகோபகாரிகளுடைய அன்பிலே ஊறி இன்புற்றிருக்கிறேன்.

"என் உடம்பை எடுத்து நிறுத்திய என் தந்தையார், என் அறிவை நிலைநிறுத்திய என் ஆசிரியர், என் நிலையை உயர்த்திய திருவாவடுதுறை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், எனக்கு ஒரு பதவியை அளித்து நிலைபெறச்செய்த

ஸ்ரீ தியாகராசச் செட்டியார் ஆகியவர்கள் எனக்கு மகோபகாரம் செய்தவர்களின் வரிசையிலே முன்னணியில் நிற்பவர்கள். இந்த நால்வரும் நால்வேறு குணம் உடையவர்கள்; நால்வேறு நிலையை உடையவர்கள்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் எனக்குத் தெய்வமாய் விளங்குகின்றனர்.'

இச்சொற்கள் ஐயரின் தமிழ்வழிப் பண்பாட்டையும், குடிவழி நன்றியுணர்வையும் காட்டுகின்றன.

தமிழர்கள் நன்றியுணர்வில் தலைநிற்பவர்கள்; அவர்கள் குருதியோடு குருதியாய்க் கலந்து நிற்பது நன்றி மறவாப் பண்பு. கப்பலோட்டிய தமிழர் வஉசிதம்பரனார் தமக்கு உதவிய 'வாலஸ்' துரைக்கு நன்றி செலுத்தும் வகையில் தம் மகனுக்கு 'வாலீஸ்வரன்' என்று பெயரிட்டார். தமிழ்ப்பெருங்கவிஞர் கனக சுப்புரத்தினம் பாரதிக்கு நன்றி செலுத்தும் முகமாய்த் தம் பெயரையே பாரதிதாசன் என மாற்றி வைத்துக்கொண்டார். அவ்வாறே தம் வாழ்வை உயர்த்திய தியாகராசச் செட்டியாருக்குத் தம் நன்றியைப் புலப்படுத்துவதற்காக ஐயர் தம் இல்லத்திற்குத் தியாகராஜ விலாசம் எனப் பெயர் வைத்துள்ளார்.

கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய தியாகராசச் செட்டியார் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு மாணவர். அவர் ஓய்வு பெறும்போது "நீங்கள் தக்கவர் ஒருவரை உங்கள் இடத்திற்கு நியமிக்க ஏற்பாடு செய்யுங்கள்" எனக் கல்லூரி முதல்வர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஐயரை அவ்வேலையில் அமர்த்தினார் செட்டியார். தமக்குச் செய்த நன்றியை மறவாமல் அவருடைய வரலாற்றை ஐயர் சிறந்த முறையில் எழுதினார். அவ்வரலாற்றைப் படிக்கும் போது செட்டியார் மிக்க துணிவும், முரட்டுத் தன்மையும் உடையவர் போல் தோன்றும். அந்நிகழ்ச்சிகளை விவரிக்குமிடங்களிலெல்லாம் செட்டியார்மீது குற்றம் காண முடியாதவாறு ஐயர் நயமாய் எழுதிச் செல்லுகிறார்.

**தியாகராசரைப்பற்றி**

தியாகராசச் செட்டியாரைப்பற்றி இவர் கூறியிருப்பதைக் கொண்டு இதை அறியலாம்.

"தியாகராசச் செட்டியார் சிறந்த தமிழ் வித்துவான். இவர் காலத்தில் தமிழ் வித்துவான்களுக்குப் புகழ் மாத்திரம் இருந்தது, பொருள் இல்லை. செட்டியாரோ அவ்விரண்டையும் உடையவராய் விளங்கினார். இயல்பாகவே இவருக்கு மனோதைரியம் அதிகம். ஒரு நல்ல உத்தியோகத்தில் இருந்ததால் அத்தைரியம் மேன்மேலும் அதிகரித்தது— தம்முடைய கடமைகளைத் திருத்தமாக நிறைவேற்றுவதும், குற்றம் செய்பவர் யாரானாலும் அவரை வெளிப்படையாகக்

---

*1.* வித்துவான் தியாகராசச் செட்டியார், முன்னுரை, பக். *1.*

கண்டிப்பதும், மனத்தில் தோன்றியதை வெளிப்படையாக எடுத்துரைப்பதும் இவரிடம் பொருந்தியிருந்த விசேஷ இயல்புகள்." [1]

## எழுத்துப்பேறு தந்த பேறு

ஐயரவர்களின் தமிழ் நடையில் தலைப்புகள் மிகச்சிறப்பாய் அமைந்திருக்கும்; இக்காலத்தில் செய்தியிதழ்களில் இடம் பெறும் தலைப்புகளில் காணப்படும் விறுவிறுப்பை ஐயர் நடையில் காணலாம். **நிலவில் மலர்ந்த முல்லை, தளிரால் தளிர்த்த தயை, இந்திர இழவூரெடுத்த காதை, என்ன பிரயோஜனம், சிவபோகம் திறந்தது** போன்ற தலைப்புகளையும் அவற்றிற்குரிய விளக்கங்களையும் இவர் நூல்களில் காணலாம். அத்தகைய தலைப்புகளுள் ஒன்றுதான் 'எழுத்துப்பேறு தந்த பேறு' என்பது.

'எழுத்துப்பேறு' என்ற இலக்கணத் தொடரை அடிப்படையாய் வைத்துச் சுவையான நிகழ்ச்சியொன்றை இவர் நயமுறக் கூறியிருக்கின்றார். இதை அவரது எழுத்து வாயிலாகவே இங்குக் காணலாம்:

"கோபால் ராவ் தமிழில் நல்ல பயிற்சி உடையவர். நன்னூலையும் பிற நூல்களையும் அழுத்தமாய்ப் படித்தவர்.

"ஒரு நாள் கோபால் ராவ் காலேஜில் (கும்பகோணம்) இலக்கணப்பாடம் நடத்திக்கொண்டிருந்தார். வழக்கப்படி முதல் நாள் நடந்த பாடத்தில் கேள்விகள் கேட்கத் தொடங்கினார். ஒரு மாணாக்கனை நோக்கி,

"செல்வுழிச் செல்க என்பதை எப்படிப் பிரிப்பது?' என்று கேட்டார். அவன், செல்+உழி+செல்க என்று பிரித்துச் சொன்னான்.

'வகரம் இடையில் வந்திருக்கிறதே 'அதற்குப் பெயர் என்ன?' என்று கேட்டார். அந்த மாணாக்கன் விடை கூறவில்லை. ஒவ்வொரு மாணவனாய்க் கேட்டு வருகையில் பலர் விடை தெரியாமல் விழித்தனர்.

"ஒரு மாணாக்கன் மாத்திரம், செல்வுழி என்பதில் இடையே வந்த வகரம் எழுத்துப்பேறு. விண்வத்துக் கொட்கும் என்பதில் விண், அத்து என்னும் இரண்டும் சேரும்போது இடையில் வந்த வகரமும் அத்தகையதே என்று தைரியமாகச் சொன்னான்.

"அந்த வகரத்தை உடம்படுமெய் என்று ஏன் சொல்லக்கூடாது?' என்று கேட்டார் கோபால் ராவ்.

'உயிரீற்றின் பின் உயிர் வந்தால் இரண்டும் நின்றவாறே சேராவாதலால் அவற்றை உடம்படுத்தற்கு வரும் யகர வகர மெய்களை மட்டும்

---

1. வித்துவான் தியாகராசச் செட்டியார், பக். 2.

உடம்படுமெய் என்று சொல்வர். இது வேறு வகையில் தோன்றிய எழுத்தாதலால் எழுத்துப்பேறு என்றுதான் சொல்ல வேண்டும்' என்று அவன் தெளிவாய்க் கூறினான். 'நீ இந்தப் பள்ளிக்கூடத்தில் எவ்வளவு காலமாகப் படிக்கிறாய்? இதற்குமுன் எங்கே, யாரிடம் படித்தாய்?'

"இந்த வருஷந்தான் இங்கே வந்தேன். இதற்குமுன் ஸ்ரீரங்கம் பள்ளிக்கூடத்தில் தியாகராசச் செட்டியாரிடம் படித்தேன். அவரிடந்தான் நன்னூலைக் கற்றக்கொண்டேன்' என்றான் அவன்.

"கோபால ராவ் ஏதோ ஒரு புதிய பொருளைக் கண்டுபிடித்தவர் போல் உற்சாகமடைந்தார். தியாகராசச் செட்டியாரின் திறமையை அறிந்தவுடன் அவரையே வருவித்து அங்கே நியமிக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. இவ்வாறு எழுத்துப்பேறு செட்டியார் கும்பகோணத்தில் உத்தியோகப் பேறு பெறக் காரணமாயிற்று.'[1]

**தமிழ்ச்சுவையை உணர்த்துதல்**

தியாகராசச் செட்டியார் மிகவும் துணிவு உடையவர். சிறுமை கண்டு பொங்கும் இயல்பினர். அக்காலத்தில் ஆங்கில ஆட்சி நடைபெற்று வந்தமையால் ஆங்கிலம் படித்தவர்கள் பெரிதும் மதிக்கப்பட்டனர். தமிழின் பெருமையை அறியாது ஆங்கிலமே சிறந்ததெனக் கருதியவர்களும் இருந்தனர். அவ்வாறு, தமிழைக் குறைவாக மதிப்பிட்டுப் பேசிய அறிஞர் ஒருவரை இடித்துக் கூறித் தமிழின் மாண்பை இவர் அறிவுறுத்திய செய்தியை ஐயரவர்கள் சுவைபடக் கூறுகின்றார்:

"திரிசிர புரத்தில் ஒரு கனவான் வீட்டில் மிகச்சிறப்பாக ஒரு கலியாணம் நடைபெற்றது. பெரிய உத்தியோகஸ்தர்களும் பிரபுக்களும் அதற்கு வந்திருந்தார்கள். செட்டியாரும் போயிருந்தார். அவர்களில் ஆங்கிலம் படித்தவர்கள் பலர் ஓரிடத்தில் கூடிப் பேசினர். திரு. பட்டாபிராம் பிள்ளை என்னும் கனவானும் செட்டியாரும் இவர் மாணாக்கர் சிலரும் அக்கூட்டத்தில் இருந்தனர். அவர்கள் ஆங்கில இலக்கியத்தின் பெருமையை எடுத்துப் பேசிவந்தார்கள். இடையே சிலர், 'இவ்வளவு அருமையான சுவை வேறு எந்தப் பாஷையில் இருக்கிறது? தமிழ் தமிழென்று சொல்லுகிறார்களே, இதில் நூற்றில் ஒருபங்கு வருமா?' என்று கூறினார்கள்.

"ஆங்கிலத்தின் சிறப்பைச் சந்தோஷத்தோடு கேட்டுவந்த செட்டியாருக்குத் தமிழைக் குறை கூறுதலைக் கேட்கப் பொறுக்கவில்லை. அவர் பேச ஆரம்பித்தார்: 'ஆங்கிலத்தில் பல நூல்களைப் படித்து அவற்றின் சுவையை நுகர்ந்த நீங்கள் அந்நூல்களின் சிறப்பை எடுத்துச் சொன்னது மிகவும் பொருத்தந்தான். ஆனால்,

1. வித்துவான் தியாகராசச் செட்டியார், பக். 36-38.

தமிழைப்பற்றி அபிப்பிராயம் சொல்ல வந்தீர்களே, தமிழ் நூல்களை நீங்கள் படித்திருக்கிறீர்களா? படிக்காமல் தமிழில் ஒன்றும் இல்லையென்று சொல்லிவிடலாமா? நான் இங்கிலீஷில் ஒன்றும் இல்லை என்றால் நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா?

"தமிழில் எவ்வளவோ சுவையுடைய பாடல்கள் இருக்கின்றன. ஒரு பாடல் சொல்லுகிறேன்; கேளுங்கள்', என்று சொல்லிவிட்டு, 'சுடர்த்தொடீஇ கேளாய்' என்ற செய்யுளைக் கூறி விரிவாகப் பொருளும் சொன்னார்.

"அதைக் கேட்டு அங்கிருந்த கனவான்கள், 'மிகவும் நன்றாயிருக்கிறது! நாங்கள் இதுகாறும் இத்தகைய பாடல்களைக் கேட்டதே இல்லை' என்றார்கள்.

"'தெரிந்துகொள்ள வேண்டுமென்ற கவலை இருந்தாலல்லவா உங்களுக்குத் தெரியவரும்? இதைப் போல ஆயிரக்கணக்கான பாடல்கள் தமிழில் இருக்கின்றன. நம்முடைய சொந்த பாஷையைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளாமல் போனால் வேறு யார் தெரிந்துகொள்ளப் போகிறார்கள்?' என்று செட்டியார் அறிவுறுத்தினார்". '

கபிலர், ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழின் பெருமையை இவ்வாறுதான் அறிவுறுத்தியிருப்பார் என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா?

**திருவாசக உரை**

சைவத்திருமுறைகளான தேவாரம், திருவாசகம் போன்றவற்றிற்கு அக்காலத்தில் சிறப்பான உரைகள் எழுதப்படவில்லை. இன்றுவரை தேவாரத் திருமுறைகளுக்கு விரிவுரை எழுதப்படவேயில்லை. காரணம், அச்சந்தான்! 'தாங்கள் எழுதிய திருவாசகத்தின் பொருள் யாது' என மாணிக்கவாசகரைக் கேட்டபோது, அவர் யாதும் கூறாது தில்லையம்பலம் சென்று அங்கு எழுந்தருளிய கூத்தப்பெருமானைக் காட்டியதாக வரலாறு கூறுகிறது.

தேவார திருவாசகப் பாடல்களின் பொருளாய் விளங்குபவன் இறைவன். அம்முழுமுதற்பொருளைப்பற்றி எழுதினால் ஏதேனும் அபச்சாரம் நேரிட்டுவிடுமோ என்ற அச்சந்தான் உரை எழுதவிடாமல் தடுத்து வந்தது. தேவாரங்களுக்கு உரை எழுதுவோர் விரைவில் இறைவன் திருவடி அடைந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை இன்றளவும் இருந்து வருகிறது.

இவ்வாறு, உரை எழுத வேண்டும் என்ற அவா அக்காலத்திலேயே இருந்தது என்ற வரலாற்றுக் குறிப்பை ஆசிரியர் இந்நூலில் சுட்டுகின்றார். திரு. பட்டாபிராம பிள்ளை, தமிழ் வித்துவான்களை ஆதரிக்கும் இயல்புடையவர்.

அறிவாளிகளைக் கொண்டு உபயோகமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்பது அவர் விருப்பம்.

தேவார திருவாசகங்களுக்கு உரையில்லையே என்ற குறை அவருக்கு இருந்து வந்தது. வைஷ்ணவராகிய அவர் திவ்வியப் பிரபந்தங்களுக்குப் பல வகையான உரைகள் இருப்பதை உணர்ந்தவராதலின் சைவத் திருமுறைகளுக்கும் தக்க பண்டிதர்கள் உரை எழுதினால் உலகத்திற்கு உபகாரமாய் இருக்கும் என்ற கருத்தினால், யாரேனும் வித்துவான்களைச் சந்திக்க நேர்ந்தால் அவரை எழுதும்படி சொல்வது வழக்கம்.

பட்டாபிராம பிள்ளை இவரைச் சந்திக்கும் காலங்களிலெல்லாம் உரை எழுத வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார். 'நீங்கள் இப்போது ஓய்வாக இருப்பீர்கள். நன்கு ஆராய்ந்து செய்வதற்கு நேரம் இருக்கிறது. இந்தப் பருவத்தில் நீங்கள் இதைச் செய்தால் இம்மை மறுமைப் பயன்களை அடையலாம்' என்று சொல்லித் தூண்டுவார்.

ஒரு நாள் செட்டியார், திரிசிர புரத்தில் நிகழ்ந்த ஒரு துக்கத்தை விசாரித்து விட்டுக் காவிரியில் நீராடிவிட்டு ஈர ஆடையோடு காவிரிப் பாலத்தின் மேல் திருவானைக்காவை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தார். நடுப்பகலாதலால் வெயில் கடுமையாய் இருந்தது. செட்டியாருக்குப் பசியும் உண்டாயிற்று.

அப்போது எதிரே ஒரு வண்டி வந்தது. செட்டியாருக்கருகில் அது வந்தவுடன் நின்றது. அதிலிருந்து ஒருவர் திடீரென்று கீழே குதித்தார். செட்டியார் நிமிர்ந்து பார்த்தார். பட்டாபிராம பிள்ளை, மார்பில் சந்தனம் மணக்க நின்றார்.

"எங்கே போய் வருகிறீர்கள்?" என்று செட்டியார் கேட்டார். "ஸ்ரீரங்கம் போய்ப் பெருமாளைத் தரிசித்து வருகிறேன். நான் சொன்னதைக் கவனித்தீர்களா? திருவாச உரை ஏதாவது ஆகியிருக்கிறதா?" என்று அவர் கேட்டார்.

"இதோ பாருங்கள்; இவ்வளவு நாளாக உங்களிடம் ஒன்றும் சொல்ல வேண்டாமென்று இருந்தேன். உங்களுக்குத் திருவாசகத்தின் பெருமை கொஞ்சமாவது தெரியுமென்று தோன்றவில்லை. அதற்கு நானா உரை எழுதுவது? திருவாசகம் எங்கே, நான் எங்கே? அதற்கு உரை எழுதுவதற்கு என் படிப்பு எம்மாத்திரம்? வேதம், ஆகமம், உபநிஷதம், புராணங்கள், சாஸ்திரங்கள் எல்லாம் தெரிந்தாலல்லவா அதற்கு உரை எழுத முடியும்? மிகவும் சுலபமாகச் சொல்லுகிறீர்களே!"

பட்டாபிராமபிள்ளை: என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? திவ்வியப் பிரபந்தங்களுக்கு வியாக்கியானங்கள் எழுதவில்லையா?

செட்டியார்: திவ்வியப் பிரபந்தங்களுக்கு வியாக்கியானம் எழுதினவர்கள் பெருமை உங்களுக்குத் தெரியாது போல் இருக்கிறதே. அவர்கள் வடமொழி, தென்மொழி இரண்டிலும் தேர்ந்த புலமை உடையவர்கள். அவர்கள் வியாக்கியானத்தால் எவ்வளவு உயர்ந்த இரகசியங்கள் வெளிப்படுகின்றன! திவ்வியப் பிரபந்தத்தால் வியாக்கியானங்களுக்குப் பெருமையா, வியாக்கியானங்களால் அப்பிரபந்தங்களுக்குப் பெருமையா என்று எண்ணும்படியல்லவா அவை இருக்கின்றன!

இனிமேலும் இப்படித் தொந்தரவு செய்வதாயிருந்தால், இதோ இந்தக் காவிரியில் பொத்தென்று விழுந்து என் பிராணனை விட்டுவிடுவேன். பட்டாபிராம பிள்ளை திருவாசகத்துக்கு உரை எழுதச் சொல்லித் தொந்தரவு செய்தமையால் அந்தத் துன்பத்தைப் பொறாமல் தியாகராசச் செட்டியார் காவிரியில் விழுந்துவிட்டார் என்ற அபக்கியாதி உங்களுக்கு ஏற்படட்டும்!

பட்டாபிராம பிள்ளை, செட்டியாருடைய கோபத்தின் அளவை உணர்ந்துகொண்டார். இவர் கையைப் பிடித்துக்கொண்டு, "ஐயா! ஐயா! வேண்டாமையா! இனிமேல் இதைப்பற்றி உங்களிடம் பிரஸ்தாபிப்பதே இல்லை, ஐயா!" என்று பணிவாகக் கூறி ஒருவாறு செட்டியாருடைய படபடப்பை ஆற்றினார்.[1]

இவ்வாறு ஐயரவர்கள் பல நிகழ்ச்சிகளைச் சுவைபடக் கூறியிருக்கிறார்கள். அவை அக்கால வரலாற்றுக் குறிப்புகளாய் அமைந்துள்ளன.

---

1. வித்துவான் தியாகராசச் செட்டியார், பக்.124-126.

## உரைநடை நூல்களில் சொல்லும் சுவையும்

டாக்டர் ஐயரவர்கள், பலருடைய வாழ்க்கை வரலாற்று நூல்களேயன்றி, **நான் கண்டதும் கேட்டதும், பழையதும் புதியதும், நல்லுரைக் கோவை - 4 பாகங்கள், நினைவு மஞ்சரி - 2 பகுதி** ஆகிய உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். இவரது நடைநலத்தை அறிவதற்கு இந்நூல்கள் துணையாய் உள்ளன.

ஐயர் பதிப்பித்தனவும், உரை எழுதி வெளியிட்டனவுமாகிய நூல்களில் தனித்தனிச் சொற்களை இவர் சுவை பெற எடுத்துக் கூறி விளக்கம் தந்திருக்கிறார். ஆனால், இவரது உரை நூல்கள் அனைத்தும் வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்கும் கதைப்போக்கில் அமைந்துள்ளன. எனவே, அந்நிகழ்ச்சிகளை இவர் எவ்வாறு சுவை பெற எழுதி விளக்குகின்றார் என்பதை எடுத்துக்காட்டுவதே இப்பகுதியின் நோக்கமாய் அமைகிறது.

எந்த நிகழ்ச்சியைக் கூறினாலும் அதைப் படிப்பவர் மனத்தில் பதியும்படி சுவையுடன் விரித்தெழுவது ஐயர் இயல்பு. இவரது உரைநடை நூல்களில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரையிலும் இதைக் காணலாம்.

"தெளிவான நடையில் எல்லோருக்கும் விளங்கும் சொற்களைப் பெய்து, உயிரோவியத்தைப் போலத் தாம் கூறுவதை எழுதும் ஆற்றல் ஐயருக்கு இருந்தது. சிறிய வகுப்பில் படிக்கும் பிள்ளை முதல் பெரும்புலவர் வரையில் அவருடைய கட்டுரைகளைப் படித்து மகிழலாம். அவரவர்கள் தகுதிக்கு ஏற்றபடி அவற்றின் சுவையை உணரலாம்." [1]

"பாட்டியற்றும் வன்மை, உரை காணும் திறம், உரைநடை எழுதும் ஒட்டம், கேட்பவர் உளங்கொள எடுத்துரைக்கும் பேச்சாற்றல், நகைச்சுவை ஆகிய இவை ஒருங்கே அமைந்து விளங்கியமை அவர்தம் பல திறத் தொண்டுகளுக்கும் அணிக்கு அணி செய்வதுபோல் விளங்காநின்றன." [2]

என்னும் அறிஞர் பாராட்டுகள் இதனை வலியுறுத்தும்.

### குறளைத் திருத்திய பாதிரியார்

பழைய தமிழ் இலக்கியங்களை உயிரென மதிப்பவர் டாக்டர் உ.வே.சா. தாம் பதிப்பித்த இலக்கியங்களில் ஒரு சொல்லைக்கூட ஆதாரம் இல்லாமல் திருத்தமாட்டார். மனம் போனவாறு தம் இச்சைப்படி மாற்றவும் மாட்டார். ஆன்றோர் வாக்கு தெய்வ வாக்கு என்பது இவர் கோட்பாடு. வித்துவான்

---

1. கி.வா. ஜகந்நாதன், இந்திய இலக்கியச் சிற்பிகள், தமிழ்த்தாத்தா, உ.வே.சா. *1994.* ப*78-79.*

2. எஸ்டி. காசிராசன், உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு. *1987*, ப*107.*

தியாகராசச் செட்டியாரிடம் இவர் பழகிவரும் போது, ஒரு பாதிரியார் திருக்குறளைத் தம் மனம் போனவாறு மாற்றி எடுத்துவந்தார். அவ்வாறு எடுத்து வந்தவர் பெற்ற வெகுமதியையும், தியாகராசச் செட்டியார் அதனால் அடைந்த கடுங்கோபத்தையும் நயமுற ஒரு கட்டுரையில் விவரிக்கின்றார், ஐயர்.

மதுரையிலிருந்த ஓர் ஐரோப்பியர் தமிழின்பால் விருப்பமுற்று ஒரு பண்டிதருடைய உதவி பெற்றுப் படித்து வந்தார். தமிழ்ச் செய்யுள்களுக்கு ஒருவாறு பொருள் தெரிந்துகொள்ளும் அறிவைப் பெற்ற பின்பு தமிழில் மிகச் சிறப்பான நூல் யாதென்று விசாரித்தார். திருக்குறள் ஒப்பற்ற நூல் என்பதை அறிந்து அதனைப் படித்தார்; இலக்கண நூலையும் இடையிடையே பயின்று வந்தார்; போப்பையர் எழுதிய இலக்கணத்தைப் படித்தார். பிறகு யாப்பிலக்கண வசனத்தைப் படித்து அசை, சீர், தளை, தொடை என்பவற்றை ஒருவகையாகத் தெரிந்துகொண்டார். அதனால், தாம் படித்த நூல்களில் உள்ள செய்யுள்களில் எதுகை மோனை சரியாக அமைந்திருக்கின்றனவா என்று ஆராயத் தொடங்கினார்.

ஒரு சமயம் அவர் தாம் படித்து வந்த திருக்குறள் புத்தகத்தை எடுத்துத் திறந்தார். திறந்த பக்கத்தில்,

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்' *(114)*

என்ற குறள் அவர் கண்ணில் பட்டது. இதில் எதுகை நன்றாக அமையவில்லையே என்று எண்ணினார். எச்சம் என்பதற்கு 'மக்கள்' என்பது பொருள் என்று அறிந்துகொண்டபிறகு, 'ஏன் மக்கள் என்றே இதை மாற்றிவிடக்கூடாது! அப்படிச் செய்தால் எதுகை அழகாய் அமையுமே!, என்று எண்ணித் தம் புத்தகத்தில் அவ்வாறே திருத்திக்கொண்டார். திருக்குறளைத் திருத்திவிட்டோம் என்ற எண்ணத்தால் அவருக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. இப்படியே மேலும் சில குறள்களைத் திருத்தினார்.[1]

தாம் பாடம் கேட்ட பண்டிதரிடம் இதுபற்றிக் கூறியபோது, அவர் "இதுபற்றி நான் ஒன்றும் கூறுவதற்கில்லை. வித்துவான் தியாகராசச் செட்டியார் போன்றோர் இதற்கு ஒத்துக்கொண்டால்தான் சரியாகும்'' என்று கூறிவிட்டார். உடனே அப்பாதிரியார் செட்டியார் இருப்பிடத்தை நாடி வந்து சேர்ந்தார். அவரிடம் "நான் யாப்பிலக்கணம் படித்தேன், திருக்குறள் படித்தேன். அந்த இலக்கணப்படி குறளைச் சில இடங்களில் திருத்தியிருக்கிறேன். தங்களிடம் காட்ட வந்தேன்" என்றார்.

"என்ன? குறளையா திருத்தினீர்கள்?"

---

1. நல்லுரைக் கோவை. நான்காம் பாகம். பக். 110-111.

"ஆமாம், எதுகை மோனை சிலவிடங்களில் சரியாக அமையவில்லை. தக்கார் தகவிலர் என்பதவரவர் எச்சத்தாற் காணப்படும் என்றிருக்கிறதே! இதில் எதுகை நன்றாக அமையவில்லையே; இரண்டாவது அடியை மக்களாற் காணப்படும் என்று திருத்தினேன். அந்தத் திருத்தம் எவ்வளவு நேர்த்தியாகப் பொருந்துகிறது பார்த்தீர்களா?'

செட்டியாருக்குக் கோபம் மூண்டது, பதறி எழுந்தார். இவ்விடத்தில் செட்டியாரது மனத்துடிப்பை எவ்வளவு உணர்ச்சிப்பெருக்கோடு ஐயர் எழுதுகிறார் என்பதைப் பின்வரும் பகுதி உணர்த்துகிறது:

"தலையிலே இரண்டடி அடித்துக்கொண்டு, காதைப் பொத்திக்கொண்டார். 'ஐயோ! குறளையா திருத்தினீர்கள்? அது மதிப்புள்ள பழைய நூலாயிற்றே! இவ்வளவு நாளாக அறிவாளிகள் செய்யாத ஒன்றைச் செய்துவிட்டதாக எண்ணமோ? எச்சமென்னும் சொல்லின் பொருள் மக்கள் என்பதற்கு உண்டா? ஒருவருக்குப் பிறகு அவருடைய குணம் முதலியவை எஞ்சி நிற்கும் சந்ததி என்ற காரணத்தைப் புலப்படுத்தும் சொல் அல்லவா எச்சம் என்பது! அவ்விடத்தில் அச்சொல் அமைந்ததனால் உண்டாகும் பொருட்செறிவு மக்களென்னும் சொல்லால் உண்டாகுமா?

"ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தமிழில் இருந்தாலும் அவை ஒன்றற்கொன்று சிறிது சிறிது வேறுபட்ட பொருளுடையனவாக வன்றோ இருக்கும்! அவற்றை இடமறிந்துதானே பெருங்கவிஞர்கள் உபயோகிப்பார்கள்! அது தெரியாமல் திருத்திவிடலாமா? எதுகை நயத்தைவிடப் பொருள் நயம் அல்லவா சிறந்தது?' என்று சொல்லிவிட்டு, 'குறளைத் திருத்தினவர் முகத்தில் விழிப்பதுகூடப் பாவம்!' என்று கூறிக்கொண்டே உள்ளே சென்று கதவைத் தாழிட்டு இடைக்கழித் திண்ணையில் அமர்ந்துவிட்டார். [1]

அந்த ஐரோப்பியரால் பெரும் இலாபம் உண்டாகும் எனப் பலர் கூறிப் பார்த்தார்கள். ஆனால், 'உலகம் போற்றும் திருக்குறளைத் திருத்த மனம் கொண்டவரால் எனக்கு இலாபம் வேண்டா; போகச் சொல்லுங்கள்!' என்று கூறிவிட்டார், தியாகராசர்.

இந்நிகழ்ச்சியை இளிவரல் சுவையும், வெகுளிச் சுவையும் விரவுமாறு ஐயர் விவரித்துள்ளமை பாராட்டத்தக்கது.

**நிலவில் மலர்ந்த முல்லை**

உரைநடை நூல்களில் தாம் எழுதியுள்ள கட்டுரைகளுக்கு இவர் அருமையான தலைப்புகள் இடுவார். அத்தலைப்புகளே செய்தியின் சுவையைக் கூட்டும்; கட்டுரையைப் படிக்கத் தூண்டும்.

---

1. நல்லுரைக் கோவை - நான்காம் பாகம் பக். 113-114.

சுவடிகளைப் பதிப்பிப்பதற்காக இவர் ஏடு தேடிப் பல ஊர்களுக்கும் செல்வதுண்டு, அவ்வாறு சென்று தேடி வரும் பொழுது பத்துப்பாட்டுச் சுவடியின் ஒரு பகுதியான முல்லைப்பாட்டு அடங்கிய ஏடொன்று கிடைத்தது. அது கிடைத்த போது இவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. நிலவு ஒளி வீசும் இரவில் அது கிடைத்ததால், நிலவில் மலர்ந்த முல்லை என்ற அருமையான தலைப்பிட்டுக் கலைமகள் மாத இதழில் விரிவாக எழுதினார். நல்லுரைக் கோவை இரண்டாம் பாகத்தில் அது இடம் பெற்று நூலாய் வெளிவந்தது. அந்நிகழ்ச்சியை சுவைபடக் கூறுவதைக் காணலாம்.

"என் நண்பர்களுடன் நான் ஆகாரம் செய்துகொண்ட வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தேன். நிலா ஒளி நன்றாக வீசியது. அப்போது லட்சுமணக் கவிராயர் மிகவும் வேகமாக நாங்கள் இருந்த இடம் வந்து, 'இந்தப் புத்தகத்தைப் பாருங்கள். இந்த ஒன்றுதான் என் மாமனாரிடம் உள்ளது. பார்த்துவிட்டுத் திருப்பியனுப்பிவிடுவதாக வாங்கி வந்திருக்கிறேன்' என்று ஒரு சுவடியைக் கொடுத்தார். எனக்கிருந்த ஆவலினாலும் வேகத்தினாலும் நிலா வெளிச்சத்திலேயே அதைப் பிரித்துப் பார்த்தேன். சட்டென்று, 'முல்லைப்பாட்டு'' என்ற பெயர் என் கண்ணிற்பட்டது. அப்போது எனக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லை இல்லை. திருமுருகாற்றுப்படை முதல் ஏழு பாட்டுக்கள் வரிசையாக இருந்தன."

**தளிரால் தளிர்த்த தயை!**

அக்காலத்தில் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் புகழ் தமிழ்நாட்டில் பெருமளவுக்குப் பரவி இருந்தது. சிறந்த தமிழ்ப்புலமை பெற்றிருந்த அவரிடம் வந்து பாடம் கேட்கப் பெரிதும் விரும்பினர். அப்போது பிள்ளையவர்கள் மாயூரத்தில் வசித்துவந்தார். அவருடைய அன்பை எப்படியாவது பெற்று அவரிடம் பாடம் கேட்க வேண்டுமென்பது ஐயரவர்களின் வேணவா.

ஐயரின் தந்தையார் பிள்ளையவர்களிடம் அழைத்துச் சென்று ஒப்படைத்தார். பிள்ளை இவரை ஏற்றுக்கொண்டார். ஆனால், நேரிடையாகப் பாடம் சொல்லவில்லை. வேறு ஒருவரைக்கொண்டு பாடம் கற்பித்துவந்தார்.

பிள்ளையவர்களின் அன்பை எப்படியாவது பெற்றுவிட வேண்டும், அவரிடம் நேரிடையாகப் பாடம் கேட்க வேண்டும் என ஐயர் எண்ணினார்.

---

1. இந்த முறை ஏடு தேடும் விஷயத்தில் எனக்கு ஏற்பட்ட துன்பங்களையும், கவலையையும் நிலவில் மலர்ந்த முல்லை என்ற தலைப்புடன் கலைமகள் பத்திரிகையில் விரிவாக எழுதியிருக்கிறேன். நான் வெளியிட்டிருக்கும் நல்லுரைக் கோவை இரண்டாம் பாகத்திலும் பதிப்பித்திருக்கிறேன்.

ஆசிரியர் எவ்வகையால் மகிழ்ச்சியடைவாரோ அவ்வகைப் பணிவிடைகளைச் செய்து அவரை வழிபட்டு அன்பைப் பெற வேண்டுமென நன்னூல் கூறுகிறது:

> "எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்
> அறத்திற் றிரியாப் படர்ச்சிவழி பாடே"

இவ்வழியை நன்குணர்ந்த ஐயர் அதைச் செயல்படுத்த முயன்றார். இம்முயற்சி பற்றி அவர் கூறுவது:

"ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் என் ஆசிரியர் தோட்டத்துக்குப் போய்ச் செடிகளைப் பார்வையிடுவார். அவைகளில் ஏதாவது பட்டுப்போய்விட்டதோ என்று பார்ப்பார். எந்தச் செடியாவது தளிர்த்திருக்கிறதா என்று கவனத்தோடு நோக்குவார். ஏதாவது தளிர்க்காமல் பட்டுப்போய்விட்டதாகத் தெரிந்தால் அவர் மனம், பெரிய தனத்தை இழந்தது போல் வருத்தமடையும். ஒரு தளிரை எதிலாவது கண்டுவிட்டால் அவருக்கு உண்டாகும் சந்தோஷத்திற்கு அளவே இராது. தம்முடைய கையாலேயே சில செடிகளுக்கு ஜலம் விடுவார்.

"அவர் இவ்வாறு காலையும் மாலையும் தவறாமல் செய்து வருவதை நான் கவனித்தேன். அவருக்கு அந்தச் செடிகளிடம் இருந்த அன்பையும் உணர்ந்தேன். அவருடைய அன்பைப் பெறுவதற்கு இச்செடிகளைத் துணையாகக் கொள்வோம் என்று எண்ணினேன்.

"மறுநாள் விடியற்காலையில் தோட்டத்திற்குச் சென்றேன். அங்குள்ள செடிகளில் ஒவ்வொன்றையும் கவனித்தேன். சில செடிகளில் புதிய தளிர்கள் உண்டாகியிருந்தன. அவற்றை நன்றாகக் கவனித்து வைத்துக்கொண்டேன். சிறிது நேரத்தில் ஆசிரியர் அங்கே வந்தார். அவர் ஒரு மரத்தின் அருகே சென்று மிக்க ஆவலோடு தளிர்கள் எங்கெங்கே உள்ளன என்று ஆராயத் தொடங்கினார். நான் மெல்ல அருகில் சென்றேன். முன்பே அத்தளிர்களைக் கவனித்து வைத்தவனாதலின் 'இக்கிளையில் இதோ தளிர் இருக்கிறது' என்றேன். அவர் நான் காட்டின இடத்தைக் கவனித்தார். அங்கே தளிர் இருந்தது கண்டு சந்தோஷம் அடைந்தார்..........

"'இதோ, இச்செடிகூடத் தளிர்த்திருக்கிறது' என்று நான் சொன்னதுதான் தாமதம் 'என்ன! அதுவா? அது பட்டுப்போய்விட்டது என்றல்லவா எண்ணினேன்! தளிர்த்திருக்கிறதா? எங்கே பார்க்கலாம்' என்று சொல்லிக்கொண்டே விரைவாக அதனருகில் வந்தார். ஆனால், அவர் பார்வையில் தளிர் காணப்படவில்லை. நான் அதைக் காட்டினேன். நான் அதோடு விடவில்லை. நான் ஆராய்ந்து வைத்திருந்த வேறு சில தளிர்களையும் காட்டினேன். காட்டக்காட்ட அவர் பார்த்துப் பார்த்துச் சந்தோஷமடைந்தார்.

"இந்தச் செடிகளைப் பார்த்து வைக்கும்படி யாராவது உம்மிடம் சொன்னார்களா?' என்று கேட்டார்.

"ஒருவரும் சொல்லவில்லை, நானாகவே கவனித்து வருகிறேன்.'

"எதற்காக இப்படிக் கவனித்து வருகிறீர்?'

"ஐயா அவர்கள் தினந்தோறும் கவனித்து வருவது தெரிந்தது. நான் முன்னதாகவே கவனித்துச் சொன்னால் ஐயா அவர்களுக்குச் சிரமம் குறையுமென்று எண்ணி இப்படிச் செய்து வருகிறேன்.

"எங்களுடைய சம்பாஷணை வரவர எங்களிடையே அன்பை வளர்த்து வந்தது. நான் ஒருநாள் பிள்ளையவர்களிடமே பாடம் கேட்க வேண்டுமென்ற ஆவலைப் புலப்படுத்தினேன்." நைடதம் முழுவதும் பாடம் கேட்டாகட்டும்; பிறகு ஏதாவது நூலைப் பாடம் கேட்கத் தொடங்கலாம்' என்றார். தளிரால் கிடைத்த தயை இது."

இதில் உவகைச் சுவை நிறைந்துள்ளதைக் காணலாம்.

**பவ்ய ஜீவன்**

நல்லவன் என்று பலரும் போற்றும்படி பெயர் எடுப்பது அரிது. சாரமற்ற வாழ்க்கை வாழ்வது எளிது. தன்னைப் பிறர் நல்லவன் என்று பாராட்டும் போது எவருக்கும் மகிழ்ச்சி உண்டாவது இயற்கை.

பவ்ய ஜீவன் என்ற சொற்றொடரால் தம்மை ஒருவர் குறிப்பதைக் கேட்ட ஐயர் தாம் அடைந்த மகிழ்ச்சியைத் தாம் எழுதிய நல்லுரைக் கோவையில் மகிழ்ச்சியோடு எழுதுகிறார். எழுதும்போது, உடல் மயிர்க்கூச்செறியத் தாம் மகிழ்ந்ததாகக் குறிப்பிடுகிறார். அப்பகுதியை எஸ்.டி. காசிராசன் அவர்கள் பின்வருமாறு விளக்குவர்:

"சந்திரநாதன் சிந்தாமணிக் கதையையும் சில விளக்கங்களையும் சாமிநாதனுக்குக் கூறினார். சிந்தாமணிக்கு வாய்மொழியாக ஓர் உரை உள்ளதையும் அறிந்தார்' சாமிநாதன். அதில் சமண சமயச் சார்பான குறியீடுகள் கலக்கப்பெற்றுள்ளன எனவும் அறிந்தார். வீரன் தாள் நிழல் சமவசரணம் என்பது பெரிய ஜைனாலயம் என அறிந்தார். அவ்வாலயத்தின் படம் குணபாலன் என்பவரிடம் இருப்பதைத் தெரிந்து அவர் வீட்டிற்குச் சென்றார்.........

''குணபாலன் சாமிநாதனைக் கண்டவுடன்', 'வாருங்கள், உட்காருங்கள்' என்று அன்பு மொழி மொழிந்துவிட்டு வீட்டிற்கு உள்ளே போனார். ஏதோ புத்தகம் எடுத்துவரச் செல்லுகிறார் போலும் என நினைத்தார் சாமிநாதன். ஆனால் எவ்வளவு வேகமாக வெறுங்கையோடு

உள்ளே சென்றாரோ அவ்வாறே வெளியே வந்தார். வந்தவர், 'சரி, இப்போது உங்கள் சந்தேகங்களை எல்லாம் சொல்லுங்கள்,' என்றார்.

"சாமிநாதன் ஒரு சந்தேகம் கேட்டார். குணபாலன் அதைக் கேட்டு சன்னல் வழியாக உள்ளே சொன்னார். உள்ளிருந்து ஒரு மெல்லிய குரல் பதில் பகர்ந்தது. அக்குரல் ஒரு முதிர்ந்த பெண்பாலார் குரல் என்று தோன்றியது. அளித்த விடை தெளிவாக இருந்தது. இப்படியே ஐயப்பாடுகளைச் சாமிநாதன் சொல்லச் சொல்லக் குணபாலன் அவற்றைக் கேட்டுச் சன்னல் வழியே உள்ளே அனுப்ப அனுப்ப, உள்ளிருந்து அந்தக் குரலிலே விடை வந்துகொண்டிருந்தது. உள்ளிருந்து வரும் விடைகளை நன்றாகத் தெரிந்து குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்' சாமிநாதன்_

"இப்படி நிகழும்போது உள்ளிருந்த குரல்,

"இவர் பவ்யஜீவன் போலிருக்கிறதே' என்றது. அதனைக் கேட்ட சாமிநாதனின் உடல் மயிர்க்கூச்செறிந்தது. மகிழ்ச்சி அவரை ஆட்கொண்டது. காரணமென்ன? அருக பரமேட்டியின் பக்தி அவருக்கு அதிகமென்றெண்ணி உவகை கொள்ளவில்லை. சைனர் கூறும் மோட்சபதம் அவருக்கு எய்தும் என்றும் மகிழ்வு அடையவில்லை.

"சிந்தாமணியை ஆய்வு செய்ய ஓரளவு தகுதி தமக்கு இருக்கிறதென அந்த மெல்லிய, இனிய மேதாவிக்குரல் கூறி ஒப்புதல் நல்கிவிட்டது என எண்ணி மகிழ்ந்தாராம்.

"பவ்யஜீவன் என்பது சைனர்களுள் கிரமமாக மோட்சம் அடைவதற்குத் தகுதியான நிலையில் இருக்கும் ஆத்மாவைக் குறிக்கும். இது சாமிநாதனுக்கு முன்னமே தெரியுமாம். எனவேதான் அவருக்கு அளப்பிலா மகிழ்ச்சி ஏற்பட்டது"[1]

இந்நிகழ்ச்சி நல்லுரைக் கோவையில் விரிவாக ஐயரவர்களால் விளக்கப்படுகிறது. [2]

**நகைச்சுவையும் உ.வே.சா.வும்**

சுவைகள் எட்டு என்பர் தொல்காப்பியர்

"அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப" *(3:7:3)*

இவ்வெட்டுச் சுவைகளுள் சிறப்புடையது, நகைச்சுவை. நகைச்சுவைதான் கவலைகளை நீக்கி மக்களை வாழவைப்பது! டாக்டர் ஐயரவர்கள் தமது உரைநடை நூல்களில் சில நிகழ்ச்சிகளை நகைச்சுவை

---

*1.* எஸ்டி. காசிராசன், உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு. ப. *68,39.*

*2.* நல்லுரைக் கோவை, நான்காம் பாகம், ப. *136-144.*

ததும்ப எழுதி வாசகர்களுக்கு மகிழ்வூட்டுகிறார். அவற்றுள் ஒன்று இங்கே தரப்பெறுகிறது.

ஐயர் எழுதிய உரைநடை நூல்களுள் முதலில் எழுதப்பட்டது, 'நான் கண்டதும் கேட்டதும்' என்ற நூல் *(1938)*. இது பன்னிரண்டு கட்டுரைகளைக் கொண்டது. அவ்வளவும் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறும் கதைகளேயாகும்.

**டிங்கினானே**

'நான் கண்டதும் கேட்டதும்' என்னும் நூலின் *12*ஆவது கட்டுரை டிங்கினானே என்ற தலைப்பை உடையது. இது நகைச்சுவைக்கு நிலைக்களமாய் விளங்குகின்றது.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் ஐயர் மாணவராய்த் தங்கிப் பல நூல்களைப் பாடம் கேட்டு வந்தார். அப்பொழுது சவேரிநாத பிள்ளை என்ற கிறித்தவரும் உடனிருந்து பாடம் கேட்டு வந்தார்.

ஒருநாள் பிற்பகலில் பிள்ளையவர்கள் சவேரிநாத பிள்ளையை ஒரு காரியமாக அங்கு முனிசீப்பாக இருந்த வேதநாயகம் பிள்ளையிடம் அனுப்பினார்கள். அங்குச் சென்ற சவேரிநாத பிள்ளை இரவு *12* மணியாகியும் திரும்பி வரவில்லை பிறகு *2* மணிக்கு வந்தார். வந்தவரை "ஏன் இவ்வளவு கால தாமதம்?" என்று பிள்ளை வினவினார். அதற்குப் பின்வருமாறு சவேரிநாதர் பதில் கூறினார்:

"நான் இரண்டு மணிக்கு வந்ததே பெரும் பிரயாசையாகிவிட்டது. முனிசீப் வீட்டிற்கு வருகையில் இரவு *9* மணியாகிவிட்டது. அவர்களோடு பேச வேண்டிய காரியத்தைப் பேசிவிட்டுத் திரும்பும் போது இரவு மணி பதினொன்று. எங்கும் மையிருட்டாய் இருந்தது.

"அங்கிருந்து புறப்பட்டுச் சிறிது தூரம் வந்தேன். பெரிய மைதானத்துக்கு அருகில் வந்தபோது, திடீரென்று காலில் ஏதோ தட்டியது. கட்டையாக இருக்கலா மென்று எண்ணி நான் சிறிது ஒதுங்கி வர ஆரம்பித்தேன். அந்த இடத்திலும் என காலில் ஒன்று இடித்தது. இருட்டு மிகுதியாய் இருந்ததால் எனக்குப் பயம் ஏற்பட்டது. மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அந்த இடத்தை ஊன்றிக் கவனித்தேன்.

"என்ன ஆச்சரியம்! அங்கே வழி நெடுக அநேக ஜனங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் சிறிதேனும் சத்தம் செய்யவில்லை. மெல்லக் குனிந்து ஒருவரைத் தடவித் தொட்டுப் பார்த்து வழிவிட வேண்டும் என்று வேண்டிக்கொண்டேன்......... அதற்குள், மற்றொருவர் எழுந்து என் காதில், 'முட்டாளே, பேசாதே! பாரதக்கதை நடக்குது' என்று சொல்லிவிட்டு என் கையைப் பிடித்து இழுத்துக் கீழே உட்கார வைத்துவிட்டார். நாம்

நினைத்தபடி அவ்வளவு அபாயம் இல்லை என்று எனக்கு ஆறுதல் உண்டாயிற்று. பெருமூச்சு விட்டேன். எங்கே பாரதம் நடக்கிறது என்று கவனித்தேன்.

"ஏதோ பாட்டுப் போன்ற ஒரு தொனி காதில் விழுந்தது. அதனொடு இடையிடையே 'ஆமாமா!' என்ற சத்தமும், உடுக்கையொலியும் பம்பையின் முழக்கமும் ஒன்றன்பின் ஒன்றாய்க் கேட்டன. என்ன கூறப்படுகின்றன என்று காதை நிமிர்த்திக்கொண்டு கேட்டேன்.

" 'பீமசேன மவாராசா, மவாராசா, மவாராசா!' என்றார் முதல்வர்.

" 'ஆமாமா!' என்றார் பின்பாட்டுக்காரர்.

" 'மரத்தேப்பூ மரத்தேப்பூ!' என்று உற்சாகத்தோடு கைகளைக் கீழும் மேலும் அசைத்துக்கொண்டு கர்ச்சனை செய்தார்', பிரசங்கியார்.

"பின்பாட்டுக்காரர் 'ஆமாமா' என்று மூன்று முறை முழங்கினார். அப்பால் உடுக்கையின் ஓசையும் பம்பையின் முழக்கமும் எழுந்தன. இப்படிச் சில நிமிஷம் முழங்கியபின் உடுக்கைக்காரர்,

" 'டிங்கினானே, டிங்கினானே டிங்கினானே'

என்று சொல்லி ஆலாபனம் செய்யத் தொடங்கிவிட்டார். ஜனங்கள் எல்லாரும் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். அவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் மட்டும் அந்த ஆனந்தத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. மேடையில் நடந்த கதை 'பாரதம்' என்பதை 'பீமசேன மவாராசா' என்ற சத்தத்தால் அறிந்தேன். அதற்கு மேல் நான் கேட்ட முழக்கங்களின் பொருள் எனக்கு விளங்கவில்லை.

"வரும்பொழுது ஒருவரோடு ஒருவர் பேசி வருகையில் பிரசங்கியார் சொன்ன வாக்கியம், ஒரு யானையை அடிப்பதற்குப் பீமசேனன் மரத்தைப் பிடுங்கினான் என்பதென்று தெரியவந்தது. இந்த 'டிங்கினானே' வரலாற்றைப் பிள்ளையவர்கள் அங்கே வருபவர்களுக்கெல்லாம் சவேரிநாத பிள்ளையைக்கொண்டு சொல்லிக் காட்டி வந்தார்கள்".[1]

---

1. நான் கண்டதும் கேட்டதும், உ.வே.சா. *1938*, பக். *87-94.*

## முடிவுரை

உ.வே.சா. என்ற பெருமகனாரின் அறிவு நுட்பத்தை இங்கு மூன்று வகைகளாகக் காட்டினேன். அவருடைய தமிழ்ப்பணிகள் நூல்களைப் பதிப்பித்தல், வாழ்க்கை வரலாற்று நூல்கள் எழுதுதல், உரைநடை நூல்கள் எழுதுதல் என்று அமைந்துள்ளன. அவர் தமிழ்க் கடல், அடியேன் சிறியேன்; ஆற்றிலும், குளத்திலும் நீந்தியறியேன். கடலில் நீந்த முடியுமா? கடலின் ஓரமாக நின்று அதன் ஆழத்தைக் காட்ட முயன்றுள்ளேன். தொடக்கத்தில் கூறியதையே இங்கு கூறி நிறைவு செய்கிறேன்.

"டாக்டர் ஐயரவர்கள் எழுபத்து நான்குக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்திருக்கிறார்கள். பல நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்கள். சில உரை நடை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். ஐயர் தாம் பதிப்பித்த பண்டைய நூல்களில் இடம் பெற்ற சொற்கள் சிலவற்றிற்கு அவர் தரும் விளக்கங்கள் மிகநுட்பமானவை. நயம் பொருந்தியவை, நயத்தாலும் விளக்கும் முறையாலும் தமிழ்ச் சுவையை மிகுவிப்பவை. சொற்களுக்கு விளக்கம் எழுதி இவர் சுவை பெறச் செய்திருக்கின்றார். இவர் விளக்கத்தாலும் அமைப்பு முறையாலும் சொற்கள் எவ்வாறு பொருட் சிறப்பைப் பெறுகின்றன என்பதை எடுத்துக் காட்டுவதே இப்பொழிவின் தலையாய நோக்கம்.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113

### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| சங்க இலக்கிய ஆய்வுகள் | 30.00 |
| தொல்காப்பிய ஆய்வுகள் | 20.00 |
| Indian Epistemology | 125.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக் கோவை 1970 தொகுதி-3 | 50.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1970 தொகுதி-2 | 70.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1970 தொகுதி-1 | 75.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1969 தொகுதி-2 | 65.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவை 1969 தொகுதி-1 | 70.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-2 | 64.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-1 | 56.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| லவகுச நாடகம் | 30.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| எட்டையபுரப் பள்ளு | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தொகுதி-2 | 65.00 |
| நானும் என் கவிதையும் | 40.00 |
| On Translation | 95.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| Literary Criticism in Tamil and Sanskrit | 45.00 |
| செந்தமிழ் அகராதி | 150.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 30.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| பிரதிமா ஸ்வப்ன வாசவதத்தம் | 55.00 |
| அறநூல் | 38.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| பொருள் புதிது | 35.00 |
| ஆளும் தமிழ் | 28.00 |

Pub.No. 387 உ.வே.சா. நூல்களில் சொல்லும் சுவையும் Rs. 18.00